
தமிழீழத் தேசியத் தலைவரின் 50வது அகவையை முன்னிட்டு ஈழமுரசு வெளியீடாக. உலகின் பல்வேறு நாடுகளிலும் இருந்து பல பிரமுகர்கள் எழுதிய ஆக்கங்களுடன்
(The Vision Of Liberation)
விடுதலையின் தரிசனம்

1.50 Euro

# ஈழமுரசு
ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 11 - 17 Novembre 2004 38

சம்யுக்தா
Credics Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# இந்தியக் கடலில் சிறீலங்கா கடற்படைக்கு அனுமதி
# இந்தியாவின் பாவனைக்கு பலாலி விமான நிலையம்!

## - இருநாட்டு கூட்டறிக்கையில் இணக்கம் -

(08.11.04)

பலாலி விமானத்தளத்தின் ஓடு பாதையைப் புனரமைப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதுடன், பலாலி விமான நிலையத்தில் இந்திய விமானங்கள் இறங்கிச் செல்வதற்கும் இந்திய - சிறீலங்காத் தலைவர்களுக்கிடையிலான பேச்சுக்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்தின் முடிவில் இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டறிக்கையில், சிறீலங்காவிற்கும் - இந்தியாவுக்கும் இடையில் பல தரப்பட்ட உறவுகளை



வலுப்படுத்தும் வகையில் இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உடன்படிக்கையை கைச்சாத்திடுவது மற்றும் இருநாட்டு மீனவரின் பிரச்சினை தொடர்பாக கூட்டுக்குழுவொன்றை அமைத்து அதன்மூலம் மீனவர்களின் பிரச்சினைகளுக்கு

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# இந்தியா, இராணுவ உதவிகளை வழங்கக்கூடாது
## - தமிழ் கூட்டமைப்பு வற்புறுத்தும் -



இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்று, எட்டப்படும் வரை சிறீலங்கா அரசுக்கு எந்தவொரு இராணுவ ரீதியான உதவிகளையும் வழங்கக்கூடாதென்பதே தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாடாகும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேண்டுகோள்விடுத்துள்ளது. இனநெருக்கடி தீர்வுக்கு நிரந்தரத்தீர்வு கிடைக்கும் வரை எந்தவொரு இராணுவரீதியிலான உதவிகளையோ, பாதுகாப்பு ஒப்பந்தங்களையோ சிறீலங்காவின் ஆட்சியாளர்களுடன் மேற்கொள்ளக்கூடாதென்று இந்திய அரசாங்கத்தை கோரப்போவதாக தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்கள அரசியல் தலைமைத்துவம் எதுவும் தாமாகவே முன்வந்து இன நெருக்கடிக்கு தீர்வொன்றைக் காணும் மனோநிலையில் எப்போதும் இருந்ததில்லை. அதேநிலைமை தான் தற்போதைய சமாதான சூழ்நிலையிலும் தொடர்கின்றது. தமிழ் மக்களின் இராணுவ மற்றும் அரசியல் ரீதியான பலமும் சர்வதேச சமூகத்தின் அழுத்தமும் நெருக்கடியுமே தென்னிலங்கை அரசியல் தலைமைகள் இனநெருக்கடி தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு காரணமாகும்.

இவ்வாறான ஒரு நிலைமையில் இந்தியாவின் இராணுவ ரீதியான உதவிகள் சமாதானப் பேச்சுக்களை மேலும் பின்தள்ளவே செய்யும்.

(தொடர்ச்சி 04ம் பக்கம்)

# போதி மரத்தின் கீழ் ஞானம் தேடிய சந்திரிகா

இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, பீகார் மாநிலத்தில் புத்தகாயாவில் உள்ள மகாபோதி புத்தர் கோவிலில் வழிபாடு நடத்தியதுடன் புத்தருக்கு ஞானம் கிடைத்த போதி மரத்தின் கீழ் அமர்ந்து தியானமும் செய்தார். இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட சந்திரிகா, டில்லியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை காலை புத்தகாயா சென்றார். அவருடன் 12 பேர் கொண்ட அதிகாரிகள் குழுவும் சென்றது.

(தொடர்ச்சி 04ம் பக்கம்)

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை

விரைந்த முடிவை விரும்பும் ஐவரிக் கோஸ்ட்



யார் இவர்..?



வா... வந்து கடித்துச் சாப்பிடு...!

4 ஸ்ருடன்ட்ஸ்



Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836


தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K
உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்



உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



# சிறீலங்கா - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் சிறுபான்மை மக்களின் கவனத்தை ஈர்க்கும் செயல்

(07.11.04)

சிறீலங்காவிற்கும் இந்தியா விற்குமிடையில் பாதுகாப்பு ஒப்பந் தம் கைச்சாத்திடப்படவுள்ளதென்ற செய்தி ஏற்கனவே யுத்த பீதியில் வாடுகின்ற சிறுபான்மை மக்களின் கவனத்தை ஈர்க்கும் செயலாகவுள் ளதென்று மலையக மக்கள் முன் னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெரியசாமி சந் திரசேகரன் புதுடில்லியில் இருந்து வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சமபலத்தில் இருந்து கொண்டு பேச்சுவார்த்தை மேசைக்கு வரு வதற்கு விடுதலைப் புலிகள் சம் மதம் தெரிவித்துள்ள இந்த கால கட்டத்திலும் சிறீலங்கா அரசு சமா தான பேச்சுவார்த்தையை பிற்போட்டு வருகின்ற சூழலிலும், சிறீலங்கா இராணுவத்தை பலப்படுத்தும் வகையில், இந்த பாதுகாப்பு ஒப்பந் தம் அமைந்துவிடுமோ என்ற அச்ச மும் ஏற்படுகின்றது.

இந்நிலையில் 50 வருடகால வரலாற்றைக் கொண்டுள்ள சிறு பான்மை மக்களின் போராட்டத்தை இந்திய அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லையோ என்று அர்த்த மாகி விடக்கூடாதென குறிப்பிட்டுள்ள பெரியசாமி சந்திரசேகரன், சமா தானம் முறிவடைந்து யுத்தம் ஒன்று தோன்றி விடக்கூடாதென்று ஆதங் கப்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து மக்கள் மத்தியிலும் இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் பயங்கர அச்ச உணர் வையே ஏற்படுத்துமெனவும் தெரிவித் துள்ளார். எனினும் இலங்கை சிறு பான்மை மக்களின் மீது முழுமை யாக அக்கறை காட்ட வேண்டிய இந்தியா இம்மக்களின் உணர்வுகளை எந்த வகையிலும் அலட்சியம் செய் யக்கூடாதென மலையக மக்கள் முன்னணி அவா கொண்டுள்ளதாக வும், இலங்கை சிறுபான்மை மக் களின் பிரச்சனையில், குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக் களின் பிரச்சனையிலும் இந்தியா தற்போதைய சமாதான நகர்வு களுக்கேற்ப முடிவுகளை எடுக்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணி இந்திய அரசாங்கத்தை வேண்டுகின்றது என்றும் முன்ன ணியின் தலைவர் மேலும் தெரி வித்துள்ளார்.

# சிறீலங்காவிற்கு வந்த திடீர் எண்ணம் இந்திய அமைதிப் படையினரை கௌரவிக்க ஏற்பாடு

(07.11.04)

சிறீலங்கா - இந்திய ஒப்பந்தத் தின் கீழ் இலங்கைக்கு அமைதிப் படை என்ற பெயரில் வந்து தமிழ் மக்கள் மீது கொடூரமான தாக்கு தல்களை மேற்கொண்டபோது, கொல்லப்பட்ட 1700க்கும் மேற்பட்ட இந்திய அமைதிப் படையினர் கொல் லப்பட்டனர். இவர்களை சிறீலங்கா அரசாங்கம் கௌரவிக்கவுள்ளது. சிறீலங்காவின் முன்னாள் ஜனாதி பதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் கைச்சாத்தான இவ் ஒப்பந்தத்திற்கு அமைய, 1987ம் ஆண்டு வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த இந்தியப் படையி னர் தமிழீழ விடுதலைப் புலிகளு டன் ஏற்பட்ட யுத்தத்தில் பாரிய உயிரிழப்புக்களை சந்தித்தனர்.

இறுதியாக 1990ம் ஆண்டில் இந்திய படையினர் முற்றாக நாட்டை விட்டு வெளியேறியபோது 1700க்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தி ருந்ததாக அறிவிக்கப்பட்டதுடன், தமது உயிரை இழந்த 1700 இந் தியப் படையினரை கௌரவிக்கும் முகமாக கொழும்பில் மணி மண் டபம் அமைக்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படவிருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இம் மணி மண்டபம் அமைக் கும் பணி தொடர்பாக முதன் முதலாக முன்னாள் இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் பல கல்ல இந்தியா சென்றிருந்தபோது இந்திய அரசிடம் தெரிவித்திருந் தார். இவரின் இப்பிரேரணையை இந்திய படைத்தரப்பினர் வரவேற்றி ருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ் மணி மண்டபத்தை அமைப் பதற்கான ஒப்பந்த இடம் குறித்து சிறீலங்கா அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருவதாக தெரியவருகின் றது.

இதேவேளை, அநுராதபுரத்துக் கும் திருகோணமலைக்கும் இடைப் பட்ட பிரதான வீதிக்கு ‘ராஜீவ் காந்தி நல்லெண்ண நெடுஞ்சாலை’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த வீதி யைப் புனரமைக்க சிறீலங்கா அர சுக்கு இந்தியா நிதி உதவி வழங் குகின்றது. ஜனாதிபதி சந்திரிகா வின் இந்திய விஜயத்தின் முடிவில் இரு நாடுகளும் கூட்டாக வெளி யிட்ட அறிக்கையில் இருந்தே இந்த விவரம் தெரியவந்துள்ளது.

# போரில் பாதிக்கப்பட்ட ஈச்சிலம்பற்று குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி

(07.11.04)

ஈச்சிலம்பற்று பிரதேச செய லகப் பிரிவில் போரினால் பாதிக் கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஒரு தொகுதி பயனாளிகளுக்கு சுய வருமான பொருளாதார உதவித் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ் வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்ட அலுவலகம் கடந்த புதன் கிழமை மாட்டு வண்டில்களையும் சிறிய கடைகளை நடத்துவதற்குத் தேவையான நிதியுதவிகளையும் வழங்கின.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் எழிலன் 5 பயனாளிகளுக்கு மாட்டு வண்டில்களை வழங்கும் நிகழ்வில் முதலில் ஒரு பெண் பயனாளிக்கு மாட்டு வண்டிலை வழங்கித் தொடக்கி வைத்தார். பின்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழ கத் திருமலை மாவட்டப் புனர்வாழ் வுக் கழகப் பணிப்பாளர் கிருபா, கழகம் வழங்கிய நிதியுதவியுடன் இரண்டு பயனாளிகளால் ஆரம் பிக்கப்பட்ட கடைகளை ஆரம்பித்து வைத்தார்.

சுய வருமானத்தை ஏற்படுத்தும் பொருளாதார ஊக்குவிப்புத் திட் டத்தின் கீழ் முதலில் தெரிவு செய் யப்பட்ட முப்பது பயனாளிகளுக்கு அவர்கள் விரும்பிய வண்ணம் உதவி வழங்கப்படும் என்று மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் குறிப்பிட்டார். தரப்படும் நிதியுதவியைத் துணையாகக் கொண்டு வாழ்க்கையில் பொரு ளாதார முன்னேற்றத்தைக் காணக் கூடிய விதத்தில் பயனாளிகள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் எழிலன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய எழுச்சிப் பேர வையின் பொறுப்பாளர் சஞ்சயும் பேசினார். பின்னர் தமிழர் புனர்வாழ் வுக் கழகத் திருமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா பயனாளிகளு டன் கலந்துரையாடல் ஒன்றை நடத் தினார். அப்போது பயனாளிகளின் தேவைகளையும் குறைகளையும் கிருபா கேட்டறிந்து கொண்டார். ஈச்சிலம்பற்று, புன்னையடிக் கிரா மத்தில் திறக்கப்பட்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பிரதேச அலுவல கத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# ‘துயர் வெல்லும் துணை’ இசைத்தட்டு வெளியீடு

(08.11.04)

கவிஞர் புதுவை இரத்தினதுரை யின் உயிர் வருடும் வரிகளினால் ஆக்கப்பட்டு தமிழக இசையமைப் பாளர் இலக்கியனால் இசையமைக் கப்பட்டு, தென்னிந்திய பின்னணிப் பாடகர்களால் பாடப்பட்ட ‘துயர் வெல் லும் துணை’ என்னும் திருநெல்வேலி சிறீ பத்திரகாளி அம்மன் மீதான பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு நேற்று வெளியிடப்பட்டது. செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் தலை மையில் நல்லூர் துர்க்கா மணிமண் டபத்தில் இடம்பெற்ற இந்த வெளி யீட்டு விழாவில் பாடல் தொகுதியின் முதல் இசைத்தட்டை யாழ். பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேரா சிரியர் சு.மோகனதாஸ் வெளியிட்டு வைக்க இ.முத்துலிங்கம் பெற்றுக் கொண்டார்.

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் மீண்டும் இலங்கைக்கு விஜயம்

# தேசியத் தலைவரைச் சந்திக்கிறார்

(07.11.04)

நோர்வே வெளிவிவகார அமைச் சர் ஜான் பீற்றர்சன் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள் ளவுள்ளார். எதிர்வரும் 10ம் திகதி முதல் 12ம் திகதி வரை இடம்பெற வுள்ள அவரது விஜயத்தின்போது தமிழீழத் தேசியத் தலைவர் உட் பட முக்கிய பிரமுகர்களை சந்திப் பாரென நோர்வேத் தூதரகம் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சந்திப்பு எதிர்வரும் 11ம் திகதி இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பின்போது சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட ஏனைய அரசாங்க அரசாங்க அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார். அனுசரணையாளர்களுக்கும் சமா தான முயற்யில் தொடர்புடைய தரப்



பினருக்குமிடையில் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதும் அர சாங்கத்திற்கும் விடுதலைப் புலிக ளுக்குமிடையிலான சமாதான முயற் சிகளை முன்னெடுத்துச் செல்வதற் கான் சாத்தியக் கூறுகளை ஆராய் வதுமே நோர்வே வெளிவிவகார அமைச்சரின் முக்கிய நோக்கமென தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே வெளிவிவகார அமைச் சருடனான சந்திப்பின்போது விடு தலைப் புலிகளின் அரசியல் ஆலோ சகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களும் கலந்துகொள் வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், தற்போது மழைகாலம், வன்னியில் நுளம்புப் பெருக்கமும் அதிகம் என்பதால் தொற்று நோய் கள் இலகுவில் பீடிக்கப்படக்கூடிய சிக்கலான உடல் நிலையில் உள்ள அன்ரன் பாலசிங்கம் இச்சந்திப்பில் கலந்துகொள்வாரா என்பது குறித்த இறுதியான முடிவுகள் எவையும் வெளிவரவில்லை.

Errances Travels

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc


Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய
நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# நோர்வே, ஜப்பான் பிரகடனங்கள் எந்த வகையிலும் எம்மைக் கட்டுப்படுத்தாது



(07.11.04)

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவிலும், ஜப்பானிய தலைநகரான டோக்கியோவிலும் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகளும் அவற்றில் நிறைவேற்றிய பிரகடனங்களும் விடுதலைப் புலிகளை எந்தவகையிலும் கட்டுப்படுத்தாதென விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ பிரகடனம் தொடர்பாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக 'தமிழ் நெட்' இணையத்தளத்துக்கு கடந்த புதன்கிழமை கருத்துத் தெரிவித்த அவர், இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் ஆதரவு வழங்கலாம். சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணுமாறு இருதரப்பினரையும் ஊக்குவிக்கலாம். ஆனால் அரசியல் தீர்வு எவ்விதம் அமைய வேண்டுமென வரையறைகளை திணித்துவிட முடியாதென அவர் உறுதியாக தெரிவித்தார்.

டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை விடுதலைப் புலிகள் புறக்கணித்துள்ளனர். எனவே இந்த மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களைக் கொண்ட பிரகடனம் விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த முடியாது. விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தனது யோசனைகளை பலவந்தமாக திணித்துவிடும் நோக்கத்துடன் சிறீலங்கா அரசு தனது தோழமை நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் பல தீர்மானங்களை நிறைவேற்றியது. சமாதான முயற்சியில் அந்நிய சக்திகள் அநாவசியமாக தலையிடுவதாக குற்றம் சுமத்தி டோக்கியோ பிரகனடத்தை ஏற்கனவே நாம் நிராகரித்துவிட்டோம் எனவும் தெரிவித்தார்.

கடந்த வருடம் யூன் மாதம் 22ம் திகதி விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் விடுத்த அறிக்கையில், இலங்கையில் தலைதூக்கிய அரசியல் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க முடியாத நிலையில், சர்வதேச சதிவலைப் பின்னலுக்குள் சராணகதி அடைந்திருப்பதாக ரணில் விக்கிரமசிங்க அரசை கடுமையாக சாடியிருந்தது. இதனால் மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் நிகழ்ந்துவந்த சமாதான முயற்சிகள் சர்வதேச மத்தியஸ்தத்திற்கு திசை திருப்பப்பட்டுள்ளதாக அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான திரு. அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். கூட்டாட்சி முறையை ஆராய்ந்து பார்ப்பது என்ற தீர்மானம் தொடர்பாக குறிப்பிடும் ஒஸ்லோ பிரகடனம் எதுவுமில்லையென்பதை பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஒப்புக் கொண்டமை குறித்து அவரைப் பாராட்டியுள்ள திரு. அன்ரன் பாலசிங்கம், மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் முடிவில் நோர்வே அரசாங்கம் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையிலேயே ஒரு பிரகடனமாக பெரிதுபடுத்தப்பட்டு வித்தியாசமான விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

2002ம் ஆண்டு நவம்பர் மாதம் 25ம் திகதி ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் போது ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிடத்தக்கதாக எதுவும் தெரிவிக்கப் படவில்லை. இந்த பிரகடனம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவித்ததுடன், வன்முறையைத் தவிர்த்து சமாதான வழிமூலம் அடிப்படைப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்களையும் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தையின் விபரங்களைக் கொண்ட பத்திரிகை அறிக்கையையும் அடிப்படையான ஆவணங்களாக முன்வைத்து இவற்றிலிருந்து அரசியல் தீர்வுக்காக கூட்டமைப்பு உருவாகி விட்டதென ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் வாதிடுவது அபத்தமானது. ஏற்றுக்கொள்ள முடியாதது.

உதவி வழங்கும் நாடுகளின் மநாடுகள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பிரகடனங்களின் அடிப்படையில் இனப்பிரச்சனைக்கான தீர்வின் வரையறைகளை முன்கூட்டியே நிச்சயித்துவிட முடியாது. இனப்பிரச்சனையாது அந்நிய சக்திகளின் அழுத்தமும் தலையீடுமின்றி சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் பேசித்தீர்மானிக்க வேண்டியதொன்றாகுமெனவும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தார்.

# நாகர்கோயில் களமுனையில் ராகவன், நியூட்டன் நினைவு நிகழ்வு

(07.11.04)

ஓயாத அலைகள்-3 வெற்றிச் சமரின் ஐந்தாம் ஆண்டு நிறைவும் - இந்தச் சமரில் முதலில் வீர காவியமான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி லெப். கேணல் ராகவன், தாக்குதல் தளபதி லெப்.கேணல் நியூட்டன் ஆகியோரின் நினைவு நாள் நிகழ்வும் கடந்த 2ம் திகதி செவ்வாய்கிழமை நாகர்கோவில் களமுனையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதி லெப்.கேணல் கோபித் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் ஏற்ற, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி லெப்.கேணல் நகுலன் ஏற்றினார்.

திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் முத்தழகு, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தாக்குதல் தளபதி பிரதாபன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மலர்மாலையினை சாள்ஸ் அன்ரணி சிறப்புப் படையணியின் பொறுப்பாளரில் ஒருவரான தென்னரசன், கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த இளையவன் ஆகியோர் அணிவித்தனர். தொடர்ந்து மலர் வணக்கம் அக வணக்கம் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து நினைவுரையினை லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து லெப். கேணல் ராகவனின் நினைவையொட்டி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி அணிகளான வடபகுதி, தென்பகுதி, மத்தியபகுதி ஆகிய அணிகளுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டி நடைபெற்றது. அதில் லெப். கேணல் சேகர் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்ற வடபகுதி அணியே லெப்.கேணல் ராகவன் தாச்சி சுற்றுக்கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது. ராகவன் கிண்ணத்தை வடபோர் முனை கட்டளைத்தளபதி கேணல் ஜெயம் வழங்கிக் கௌரவித்தார்.

இதேவேளை, 1997ம் ஆண்டு திருகோணமலைக் கடற்பரப்பில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட புலிகளின் குரல் நிறுவனத்தின் ஒளிப் பதிவாளரும், ஒலிபரப்பாளருமான மேஜர் ஜீவாவின் நினைவுக்கல் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் - குருநகரிலிருந்து அவரது திருவுருவப்படம் கடந்த திங்கட்கிழமை புலிகளின் குரல் நிறுவனத்துக்கு எடுத்து வரப்பட்டு, புலிகளின் குரல் நிறுவன அமலன் அரங்கில் வீர வணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், கிளிநொச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஆகியோர் ஏற்றினர். மேஜர் ஜீவாவின் திருவுவருப் படத்துக்கு ஈகச்சுடரை அவரது சகோதரன் இசையழகன் ஏற்றி வைக்க, அவரது தாயார் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் மேஜர் ஜீவாவின் திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வு புலிகளின் குரல் நிறுவன நிர்வாக இணைப்பாளர் இராஜேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

# தமிழ்க் கைதிக்கு சர்வதேச மன்னிப்புச் சபை சிபார்சு

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியான நல்லரட்னம் சிங்கராஜாவை விடுதலை செய்யுமாறு அனைத்துலக மன்னிப்புச் சபை சிறீலங்கா அரசைக் கேட்டுள்ளது. மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த தண்டனைக் கைதி 1993ம் ஆண்டு ஆடி மாதம் 16ம் திகதி மட்டக்களப்பில் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கம்பெற்று ஆயுதப் பயிற்சி பெற்றது, அரந்தலாவையில் சிறீலங்கா சிறிலங்கா இராணுவத்தினரைக் கொலை செய்தது, சட்ட விரோதமான முறையில் கூடி 4 இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் மேற்கொண்டது. ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்மீது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றமொன்று இவ்வழக்கை விசாரித்து இவருக்கு 50 வருட சிறைத் தண்டனை விதித்தபோதிலும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன் முறையீட்டையடுத்து தண்டனைக் காலம் 35 வருடங்களாக குறைக்கப்பட்டது. இத்தீர்ப்பு தொடர்பாக மனித உரிமை அமைப்புகள் அனைத்துலக மன்னிப்பு சபைக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கும் புகார் தெரிவித்திருந்தன. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு இவரது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதால் இவர் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது மீண்டும் விசாரணை நடைபெற வேண்டும். அத்துடன் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்துள்ளது.

SHELVAZUGgmbh
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட் காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
SHELVAZUGgmbh
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# செய்தித் துளிகள்

கருணா குழுவைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் எனப்படும் கணபதிப் பிள்ளை மகேந்திரன் உட்பட இருவர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்புடைய சந்தேக நபரான மகேந் திரன் புவிதரன் 3 மாதகால இடைவெளியின் பின்பு கடந்த செவ்வாய் கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இந்நபரை எதிர்வரும் 16ம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.



உலக உணவுத் திட்டத்தின் விசேட பிரதிநிதியான கிரிக்கெற் வீரர் முத்தையா முரளிதரன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததன் பின்னர் கிளிநொச்சிக்கும் சென் றார். இவர் பூநகரி மகா வித்தியாலயத்தில் அபிவிருத்தி திட்டம் தொடர்பான கலந்து ரையாடலில் கலந்து கொண்டார். அத்துடன் முன்பள்ளி மாணவர்களின் உணவுத் திட்டங்கள் தொடர்பாகவும் பார் வையிட்டதுடன், தமிழீழ துணை அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பின் போது உலக உணவுதிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நான்கு வருடங்களுக்கு முன்பு சிறீலங்கா இராணுவத்திலிருந்து காணாமல் போனதாக கருதப்பட்ட இராணுவ சிப்பாயொருவர் கொள் ளைச் சம்பவம் தொடர்பாக வியாங்கொடை பொலிசாரால் கைது செய் யப்பட்டுள்ளார். வவுனியாவில் கடமையின்போது இவர் காணாமல் போயிருந்தார்.



அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிட்ரேஜின் சிறீலங்காவுக்கான விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத காரணங்களி னால் அவரது பயணத்திட்டம் மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்குக் கிழக்கு பகுதிகளில், சிறீலங்காப் படைத்தரப்பின் புலனாய் வுத் துறையினரின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களை மீளக் கையளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மாதாந்த வாடகைக் கொடுப்பனவின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட் டிருந்த மேற்படி வாகனங்களை உரியவர்களிடம் இப்படைக்குமாறு சிறீலங்கா படைத்துறை தலைமையகத்தால் இந்த உத்தரவு விடுக்கப் பட்டுள்ளது.

வவுனியா வைரவர் புளியகுளத்தின் அணைக்கட்டில் பொலிசாரால் புதிதாக காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காவல ரண்கள் அமைக்கப்பட்டுள்ள வீதி ஊடாக பயணம் செய்பவர்கள் தமது போக்குவரத்துக்கு இந்த காவலரண்கள் இடையூறாக இருப்பதாகவும், அதனை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சைவப்புலவர், பண்டிதர், ஞானசிரோன்மணி இ.வடிவேல் கடந்த 5ம் திகதி திருகோணமலையில் காலமானார். அவருக்கு வயது 85. பண்டிதர் வடிவேல், தமிழ் இலக்கிய விற்பன்னர். தமது கதாகலாட்சேபம் மூலம் பலரின் மனதையும் கவர்ந்தவர். 'திருகோணமலை மாவட்டத் திருத் தலங்கள்' என்ற பெயரில் அவர் ஆக்கிய நூல் பெரும் வரலாற்றுப் பதி வாகவும் திருகோணமலை இந்துக் கோயில்கள் பற்றிய பெருமைமிகு ஆவணமாகவும் போற்றப்படுகின்றது. கோணமலை அந்தாதி, கோணேஸ்வரர் கல்வெட்டு ஆகிய நூல்களைப் பதிப்பித்த வடிவேல், திருகோணமலை கோணேஸ்வரர் கோயில் வரலாறு, திருமுறைப் பண்ணிசைத், திறனாய்வு போன்றவை உட்படப் பல நூல்களை எழுதியவர்.

தனங்கிளப்பு படைமுகாமில் படையினருக்குத் தொல்லை கொடுத் துவந்ததாகக் கூறப்படும் இருபதுக்கு மேற்பட்ட நாய்களும், சாவகச்சேரி நகர்ப்பகுதியில் பிடிக்கப்பட்ட நாய்களும் கடந்தவாரம் கொல்லப்பட்டன. இதேவேளை, படையினர் முகாம்களில் 75ற்கு மேற்பட்ட நாய்கள் உள்ள தாகவும், அனைத்து நாய்களையும் பிடித்து அழிக்க உத்தரவிடப்பட்டுள் ளதாகவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நண்பர்களுடன் ஆவரங்கால் சவாரித்திடலுக்கு அருகே உள்ள கிணற் றில் நீந்திப் பழக முற்பட்ட இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான். மழைநீர் நிறைந்திருந்த கிணற்றில் நீந்துவதற்காகக் குதித்த ஆவரங் கால் நவோதய வீதியைச் சேர்ந்த சந்திரன் திலீபன் (19) என்ற இளை ஞரே உயிரிழந்தார்.

# உயிலங்குளம் படைமுகாமில் மேலும் பலர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர்

(07.11.04)

மன்னார் உயிலங்குளம் 215 இராணுவ முகாமில், மேலும் பலர் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட் டிருக்கலாமென்று தகவல்கள் கிடைத் துள்ளதையடுத்து, அப்பகுதியில் சோதனை நடவடிக்கையை மேற் கொண்டு உண்மை நிலையைக் கண்டறியுமாறு மன்னார் மாவட்ட நீதிபதியிடம் வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.

பல்வேறு வாகனக் கடத்தல் மற்றும் ஆட்கொலை தொடர்பாக உயிலங்குளம் இராணுவ முகாமில் பணியாற்றிய மேஜர் அனுருத்த சம்மிக்க விஜயபாகு, பொலிசாரினால் கைதாகி விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார். இவரினால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட அநு ராதபுரத்தைச் சேர்ந்த கார்ச் சாரதியின் சடல எச்சங்கள் மன்னார், பொலிசாரினால் உயிலங்குளம் 215 இராணுவ முகாமிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டன.

இவரால் மேலும் பலர், கடத் தப்பட்டு, உயிலங்குளம் இராணுவ முகாமில் வைத்து கொலை செய் யப்பட்டு அங்கு புதைக்கப்பட்டுள் ளதாக கொழும்பு விசேட புலனாய்வு பொலிசாருக்கு தகவல் கிடைத்துள் ளதையடுத்து, அவர்கள் இவ்விட யத்தை அநுராதபுர நீதிவானின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ள னர். 215 இராணுவ முகாம் மன்னார் மாவட்ட நியாயதிக்க எல்லைக்குள் உள்ளதால், குறித்த முகாம் வளா கத்தை பரிசோதனை செய்து புதைக் கப்பட்டுள்ள உடல்களைத் தோண்டி எடுக்குமாறு அநுராதபுர நீதிவான் கர்சா சேதுங்க, மன்னார் நீதிவா னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றுக்கு குறித்த, இராணுவ மேஜர் அனுருத்த சம்மிக்க விஜய பாகு, பலத்த பாதுகாப்புடன் அழைத் துவரப்பட்டார். நாடெங்களிலும் பல நீதிமன்றங்களில் சிலருக்கெதிராக பல, வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டு அடையாள அணிவகுப்புகள் நடைபெறவுள்ளதால் மூடப்பட்ட வாகனத்திலேயே, அழைத்துவரப் பட்டார். மேஜரையும் அவருடன் குறித்த கொலையுடன் தொடர்புடை யவர் என்ற சந்தேகத்தில் கைதான இன்னுமொரு இராணுவ வீரரையும் எதிர்வரும் 18ம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம். எம். அப்துல்லா உத்தரவிட்டார்.

# கழுகிடமிருந்து குழந்தையை மீட்ட தாய்

(07.11.04)

பேருவளை அம்பலபொல கடற் கரையோரத்தில், இளம் தாயொரு வர் தனது மகனை கழுகிடமிருந்து துணிகரமாக மீட்ட சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம் பெற்றுள்ளது. கடற்கரையோரத்தில் விறகு பொறுக்கிக் கொண்டிருந்த தாயுடன் அவரது மகனும் (3 வயது) சென்றுள்ளான். இவ்வேளையில் அப்பகுதியில் மிகப் பெரிய கழு கொன்று வட்டமிட்டுள்ளது. எனி னும் அந்த இளம் தாய் இதனைப் பொருட்படுத்தவில்லை. அவர் சிறிய விறகுகளை பொறுக்குவதில் ஆர்வம் காட்டிக் கொண்டிருந்தார். இந்த நேரத்தில் அந்தக் கழுகு திடீரென தாழப்பறந்து வந்து தனது இரு கால் நகங்களினாலும் சிறு வனை பற்றிப் பிடித்து தூக்கிக் கொண்டு பறந்த போது, அந்த இளம் தாய் தனது கையிலிருந்த விறகுத் தடியினால் கழுகைத் தாக் கியுள்ளார்.

கழுகின் மீது அடுத்தடுத்து அவர் தாக்கவே, அந்தக் கழுகு சிறிது தூரம் சிறுவனைத் தூக்கிக் கொண்டு பறந்து விட்டு பின்னர், அவனைப் போட்டு விட்டு தப்பிச் சென்று விட்டது. கடற்கரையோரத்திலுள்ள வீதியோர மதகுக்கு அருகேயுள்ள குழியொன்றில் வீழ்ந்த சிறுவன் காயமடைந்துள்ளான். அதே நேரம் இந்தச் சம்பவத்தால் சிறுவன் பெரும் அதிர்ச்சியுமடைந்துள்ளான். பின்னர் இவன் பேருவளை வைத்தியசா லைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட போதி லும், தற்போது அச்சத்தால் வீடு திரும்ப மறுத்து வருவதால் அவ னைப் பெற்றோர் உறவினர்கள் வீட்டில் தங்க வைத்துள்ளனர்.

இதுபற்றி பி.எச்.நாமலி (24) என்ற இளம் தாய் கூறுகையில். கண்ணி மைக்கும் நேரத்திற்குள் எல்லாமே முடிந்து விட்டது. எனது கையில் விறகுக் குச்சியொன்று இருந்ததால் கழுகை தாக்க முடிந்தது. அதுவும் உடனடியாகவே மகனை கீழே போட்டு விட்டது. மேலும் சற்றுத் தூரம் சென்று மகனை கீழே போட்டிருந் தால், அவன் கடலுக்குள் வீழ்ந்திருப் பான். நல்லவேளை கடவுள் காப் பாற்றி விட்டார்.

இது போன்றதொரு பறவையை மிருகக்காட்சிச் சாலையில் கூட கண் டதில்லை. அதன் இறகின் நீளம் சுமார் எட்டடி இருக்கும். அது ஒரு வெள்ளைப் பறவை, அதன் இறகு களில் மண்ணிறப் புள்ளிகளுள்ளன. கழுகாய் இருக்குமெனக் கருதுவ தாகவும் தெரிவித்தார். இதேநேரம் இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த பலரிடமிருந்து பேருவளை பொலி சார் வாக்கு மூலங்களை பதிவுசெய் துள்ளனர்.

## பிரித்தானியாவில் இருந்து வந்த கடிதப் பொதிகள் கொழும்புப் புதருக்குள் கிடக்கின்றன !

(07.11.04)

வெளிநாடுகளில் இருந்து வரும் கடிதங்கள் பல காணாமல் போகும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், வெளிநாட்டுத் தபால்கள் அடங்கிய பதினாறு பொதிகள் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தின் பின்புற மாகவுள்ள புதருக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கி லாந்தில் வாழும் இலங்கையர்களே இவற்றை இலங்கைக்கு அனுப்பி யுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இப் பகுதியைத் தொழிலாளர்கள் சுத்தம் செய்யும் போது இவை கண்டு பிடிக் கப்பட்டன. கோட்டை தொடருந்து நிலையத்துக்கு அருகில் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையம் அமைந்திருப்பதால் இப்பொதிகள் அங்கிருந்து வீசப்பட்டிருக்க வேண் டும் என விசாரணைகள் மூலம் தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டுத் தபால் பிரிவில் பணியாற்றும் ஊழி யர்கள் வெளிநாட்டுக் கடிதங்களை, பொதிகளை உடைத்து அவற்றினுள் இருந்த பெறுமதியான பொருட்க ளையும், காசோலைகளையும் திருடி விட்டு, கடிதங்கள் மற்றும் பொதிகளை வீசியிருக்கலாம் எனச் சந்தேகிக் கப்படுகிறது.

ஆசிய திரைப்பட மையம், சுவிஸ் பிலிம்ஸ் (சூரிச்) மற்றும் சிறீலங்கா விற்கான சுவிஸ் தூதரகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள சுவிஸ் திரைப்பட விழா இந்த மாதம் யாழ்ப்பாணத்திலும் நடத்தப் படவுள்ளது. யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் எதிர்வரும் 17ம் திகதிமுதல் 20ம் திகதிவரை இவ்விழா இடம்பெறும்.



சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்
N.S.Jewellery
(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)
உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.
சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.
N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich
Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

## வருவதும் - போவதும் ஆக்கபூர்வமானதா?

கடந்தவாரம் இலங்கைக்கு ஜப்பானின் சிறப்புத் தூதர் யசூசி அகாசி வந்து போயுள்ளார். அடுத்த வாரம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் மற்றும் சிறப்புத்தூதுவர் எரிக் சூல்கைம் வருகைதரவுள்ளனர். தொடர்ந்து அமெரிக்க ஆசிய வெளிவிவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ் வருகைதர உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் கடந்த வாரம் சிறீலங்கா ஜனாதிபதி தலைமையில் ஒரு குழுவினர் இந்தியா சென்று அந்நாட்டின் தலைவர்களை சந்தித்துப் பேசிவிட்டு திரும்பியுள்ளனர்.


விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை எட்டப்பட்டு கடந்த மூன்றாண்டுகளில் இவ்வாறு மாறிமாறி பலரும் 'வருவதும் - போவதும்' எனக் காலம் கடந்துகொண்டிருக்கின்றது. இதுவரை பாரிய முன்னேற்றம் எதனையும் தமிழ் மக்கள் கண்டுகொள்ளவில்லை. ரணில் அரசு பேசிப் பேசிக் காலத்தை இழுத்தடித்து வந்தபோதும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமான பயன்மிக்கதாக இருந்தது.

இப்போது சந்திரிகா அரசு பேசாமலேயே காலத்தை இழுத்தடிப்பதில் கவனம் செலுத்துகின்றது. ரணில் அரசைக் கலைத்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய சந்திரிகா அரசு, விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், காலத்தை இழுத்தடித்தது மட்டுமல்ல, தாங்கள் ஒரு யோசனையைத் தயாரித்துள்ளதாகவும் இதனை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப் போவதாகவும் கூறி மேலும் தாமதிக்க முற்படுகின்றது. புலனாய்வுத்துறையினர் மூலம் மறைமுகப்போர் ஒன்றை விடுதலைப் புலிகள் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

பலமான நிலையில் உள்ள விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்த சந்திரிகா தயாராக இல்லை. விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு சென்றாலே தங்களது அழுத்தங்களை அவர்கள் மீது பிரயோகிக்க முடியும் என்று சந்திரிகா நம்புகின்றார். அது கைகூடாத நிலையில், தமது படையை, தமது பாதுகாப்பை பலப்படுத்தும் செயற்பாட்டில் இறங்கவேண்டும். இதற்காகவே விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களை கொண்டிருக்கும் நாடுகளுடன் சந்திரிகா அரசு தமது பாதுகாப்பை பகிர்ந்துகொள்ள விரும்புகின்றது.

சிறீலங்கா அரசின் இவ்வாறான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான செயற்பாடுகளும், சர்வதேசங்கள் சிறீலங்கா அரசை சமாதான மேசையை நோக்கிச் செல்வதற்கு கடும் அழுத்தங்களைப் பிரயோக்க முனையாமையும், சமாதானத்தின் மீதும், சர்வதேசத்தின் மீதும் தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை மெல்ல மெல்ல இழக்கச் செய்து வருகின்றது.

இவ்வேளையில், நோர்வே வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயமும், தமிழீழத் தேசியத் தலைவருடனான சந்திப்பும் சமாதானத்தை நேசிப்பவர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன. அடுத்த வாரம் நோர்வேத் தூதுக்குழு வந்து சென்றதன் பின்பே, சமாதானப் பயணத்தின் அடுத்த நகர்வு எவ்வாறு இருக்கும் என்பதை அறிந்துகொள்ள முடியும். சமாதானத்தின் மீது நம்பிக்கையை இழந்துவரும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பிற்கு இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமானதாக அமையட்டும்.



# முதலடியை எடுத்து வைப்பது யார்?

## அகாசி எழுப்பும் கேள்வி

இலங்கைக்கு 8வது தடவையாக விஜயம் மேற்கொண்டு ஒரு வார காலம் தங்கியிருந்து கொழும்பிலும் வன்னியிலும் கிழக்கிலும் பேச்சுவார்த்தைகளை நடத்திய ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி இந்தியாவுக்கு புறப்பட்டுச் செல்வதற்கு முன்னதாக கொழும்பில் செய்தியாளர்கள் மாநாட்டில் தனது கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத் தரப்பினரும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஆனால், எந்தத் தரப்பினருமே முதல் அடியை எடுத்து வைக்கத் தயாராயில்லை என்று கூறிய அகாசி, அரசாங்கம் தளர்வுப் போக்கைக் காட்டுகிறது. ஜனாதிபதி திருமதி குமாரதுங்க சமாதானத்தைக் காண்பதில் மிகுந்த பற்றுறுதி கொண்டவராக இருக்கிறார் என்றும் தெரிவித்தார். அதேவேளை, தங்களால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளே பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாக இருக்க வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் எந்த மாற்றத்தையும் காண முடியவில்லை. ஆனால், வேறு யோசனைகள், கருத்துக்களை கிரகிப்பதற்கு அவர்கள் தயாராயிருப்பதற்கான அறிகுறிகளைக் காணமுடிகிறது என்று அவர் செய்தியாளர்கள் மத்தியில் கூறினார்.


விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பான விபரங்களை வெளியிட மறுத்த அகாசி, சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் தலைவர்களை விடுதலைப் புலிகள் மிகு ஆழமான அவநம்பிக்கையைக் கொண்டிருப்பதுடன், இன நெருக்கடிக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் காண்பது குறித்தும் ஐயுறவுகளை வெளிப்படுத்தியிருந்தனர். அதேவேளை, சமாதான முயற்சிகளைத் தொடர வேண்டுமென்றும் ஜே.வி.பி. இணக்கப்பாட்டைக் கொண்டிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

புதுடில்லிக்கான தனது விஜயம் குறித்து கருத்துத் தெரிவித்த அகாசி, இந்தியாவில் புதிய அரசாங்கம் அதிகாரத்தில் இருப்பதால் இத்தடவை தனது விஜயம் கூடுதல் முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதாகக் கூறியதுடன், இலங்கை விவகாரத்தில் இந்தியா ஒரு முக்கிய பாத்திரமாக இருப்பதால், இலங்கையின் சமாதான முயற்சிகளின் நிலவரம் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு அறிவித்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும் என்றார்.

**எரிக் சூல்ஹைம் சகல தரப்பினரும் விரக்தியடைந்து போயிருக்கிறார்கள் என்று கூறியதுடன் மாத்திரம் நிற்கவில்லை. மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட முடியாமல் போய்விடுமோ என்று தான் நம்பிக்கையிழக்கவில்லை என்று இராஜதந்திரிகளுக்கேயுரிய பாணியில் தெம்பூட்ட முயன்றார்.**

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் கொலைகள் குறித்து விடுதலைப் புலிகளுடனான சந்திப்பில் வினாவெழுப்பிய போது அவர்களிடம் இருந்து வழமையான பதிலே கிடைத்தது என்று கூறிய அகாசி, போர் நிறுத்த உடன்படிக்கை குறித்து கருத்து வெளியிடுகையில், கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் இரு தரப்பினரும் போர் நிறுத்தத்தை பொதுவில் கடைப்பிடித்து வருகிறார்கள். ஆனால், உடன்படிக்கையை வலுப்படுத்த வேண்டியிருக்கிறது என்றார்.

கடந்த வருடம் யூனில் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவியின் கொடுப்பனவுச் செயற்பாடுகளை சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்துடன் பிணைக்கும் டோக்கியோ பிரகடனம்



நடைமுறையில் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த சில தினங்களில் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் அக்கறை கொண்டிருப்பதாக திருமதி குமாரதுங்க அறிவித்தார். பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலில் இருந்து ஆரம்பித்த முட்டுக்கட்டை இந்த 7 மாத காலத்திலும் பல்வேறு காரணிகளினால் மேலும் வலுப்பெற்றிருக்கிறது. சமாதான முயற்சிகளிலான தேக்கநிலையைப் போக்கும் பிரயத்தனமாக இலங்கை வருகை தந்த சகல இராஜதந்திரிகளும், அகாசி தெரிவித்த கருத்துகளில் இருந்து பெருமளவுக்கு வேறுபடுகின்ற கூற்றுகளைத் தெரிவித்திருக்கிறார்களா? இல்லையே. சமாதானப் பேச்சுவார்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதிலும், போருக்கு மீண்டும் செல்லக் கூடாது என்பதிலும் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பற்றுறுதியுடன் இருப்பதாகவே அவர்கள் சகலரும் கூறிச் சென்றனர். இறுதியாக வருகை தந்த நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹைம் சகல தரப்பினரும் விரக்தியடைந்து போயிருக்கிறார்கள் என்று கூறியதுடன் மாத்திரம் நிற்கவில்லை. மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட முடியாமல் போய்விடுமோ என்று தான் நம்பிக்கையிழக்கவில்லை என்று இராஜதந்திரிகளுக்கேயுரிய பாணியில் தெம்பூட்ட முயன்றார்.

அகாசியும் இப்போது இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்ற போதிலும், எந்தத் தரப்பினருமே முதல் அடியை எடுத்து வைக்கத் தயாரில்லை எனக் கூறிச் சென்றிருக்கிறார். உண்மையிலேயே, விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு குந்தகமாக இருக்கும் தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை மேலும் மோசமடைந்து கொண்டு போகின்றது என்பதே யதார்த்த நிலை.

# இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் முடக்கிவிடப்பட்டிருக்கின்றன. இது சமாதானத்தின் வழியில் தோன்றிய ஒரு துர்க்குறியாக தமிழர்களால் பார்க்கப்படும் ஒரு சூழலில், இந்த உத்தேச உடன்படிக்கை பற்றி இரண்டு விதமாக வியாக்கியானங்கள் செய்யப்படுகின்றன.

முதலாவது, பெரும்பாலான சிங்கள புத்திஜீவிகள் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்றோர், இந்த உடன்படிக்கை சமாதானத்தை நோக்கி புலிகளை நிர்ப்பந்திக்கும் நோக்கிலானது என்ற தொனிப்படக் கதைத்தும் எழுதியும் வருகிறார்கள். அதாவது, இலங்கைத்தீவின் சமாதானம் என்று இவர்கள் கருதும் ஏதோஒன்றை நோக்கி புலிகளை இறங்கி வரச் செய்ய இந்த உடன்படிக்கை உதவும் என்ற விதத்தில் அமைந்த வியாக்கியானம் இது.

இரண்டாவது, புலிகளை ஐரோப்பாவுக்கு விருந்தினர்களாக வரவழைத்ததன் மூலம் அவர்களுக்கு குறிப்பிடத்தக்கவு அரசியல் அந்தஸ்தை வழங்கி, அதன் மூலம் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு மேற்குநாடுகள் எடுத்த முயற்சிகள், எதிர்மறையான பலன்களைத் தரத்தொடங்கி விட்டன என்பதான ஒரு வியாக்கியானம்.

இந்த இரண்டு வியாக்கியானங்களுக்கு ஊடாகவும் இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகளின் இன்றைய போக்கை விளங்கிக்கொள்ளலாம். அதுமட்டுமல்ல அவை எதிர்காலத்தில் எத்தகைய திருப்பங்களை எடுக்கக்கூடும் என்பதையும் ஓரளவுக்கு சரியாக ஊகிக்கலாம். எனவே அவற்றை சிறிது ஆழமாகப் பார்ப்போம்.

முதலாவது வியாக்கியானத்தின்படி ஓய்வுபெற்ற சிங்கள இராஜதந்திரியான கொடகே போன்றோர் நம்புகிறார்கள், இந்தியா தங்களோடு நிற்குமாக இருந்தால் புலிகளை ஒன்றில் நசுக்கிவிடலாம் அல்லது ஒரு வழிக்குக் கொண்டு வந்து விடலாமென்று. எனவே இந்த

> தற்சமயம் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை அதிசயமாக அற்புதமாக சுமார் முப்பது மாதங்களைக் கடந்து அமுலில் உள்ளது. இது எப்பொழுது முறிக்கப்படும், அல்லது காலாவதியாகும், இது முறிக்கப்படுவதற்கிடையில் உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை கைசாத்திடப்படுமா, அல்லது அது கைச்சாத்திடப்படுவதன் மூலம் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை காலாவதி ஆகுமாறு செய்யப்படுமா?, அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையும் உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையும் சமாந்தரமாக வாழுமா? என்பதெல்லாம் தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு பிரச்சனையே அல்ல.

உத்தேச உடன்படிக்கையானது பின்வரும் விசயங்களை கட்டயமாக உள்ளடக்கியிருக்கவேண்டும் என்று அவர்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் கூறுகிறார்கள். முதலாவது, திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவிடம் நீண்டகாலக் குத்தகைக்கு கொடுப்பது, இரண்டாவது, திருமலையில் பிராந்திய கடற்படைப் பயிற்சி மையம் ஒன்றை இந்தியா அமைக்க வேண்டும் என்பது, மூன்றாவது, பலாலி விமானத்தளத்தை இந்தியாவின் உதவியைப்பெற்று விஸ்தரிப்பதோடு அதை இந்திய வான்படை பயன்படுத்த அனுமதி தரப்படவேண்டும் என்பது. இந்த மூன்ற விசயங்களினூடாகவும் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்றால், இலங்கைத்தீவின் முப்படைகளும் இந்தியாவுடன் நெருக்கமான உறவைப் பேணும் வகையில் இந்த உத்தேச உடன்படிக்கை வடிவமைக்கப்படவேண்டும் என்று.

ரணில் விக்கிரமசிங்காவின் காலத்தில் திருகோணமலையிலுள்ள எண்ணெய்க்குதங்கள் இந்தியன் ஓயில் கோப்பிரேஷனுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டமை



என்பது புலிகளுக்கு எதிரான ஒரு 'காப்புறுதிப் பத்திரத்தை' போன்றது எனவும் அவர்கள் நம்புகிறார்கள். எதிர்காலத்தில் திருகோணமலைக்கான சண்டை எதிலும் இந்தியாவும் பங்குபற்றக்கூடும் என்ற ஒரு நிலையை இந்த எண்ணெய்க் குதங்கள் மீதான ஒப்பந்தம் உருவாகியிருப்பதாகவும் அது போலவே இப்பொழுது வேகவேகமாக இறுதியாக்கப்பட்டு வரும் உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையும், இனிவரும் எந்த ஒரு யுத்தத்திலும் இந்தியா பங்குபற்றக்கூடிய வாய்ப்புக்களை திறந்துவைத்திருக்கும் என்றும் அவர்கள் நம்புகின்றார்கள்.

ஆனால், அவர்கள் ஒன்றைக் கவனிக்கத் தவறுகிறார்கள். இப்படி ஒரு ஒப்பந்தம் உருவாகுமோ இல்லையோ, அதில் இறுதியாக்கப்படப்போவதாக கசிந்திருக்கும் விவகாரங்கள் பலவற்றில் ஏற்கனவே இலங்கை இந்திய அரசுகளுக்கிடையில் நெருங்கிய ஒத்துழைப்பும் நற்புணர்வு கலந்த ஒரு புரிந்துணர்வு நிலவிவருகிறது என்பதே அது. குறிப்பாக, புலனாய்வுத்தகவல் பரிமாற்றம், அதிகாரிகளுக்கான பயற்சி, கூட்டுக் கடல்ரோந்து மற்றும் ஆபத்தில் உதவி போன்ற இன்னோரன்ன விவகாரங்களில் கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையே ஏற்கனவே, குறிப்பாக ராஜீவ், ஜே.ஆர் உடன்படிக்கையிலிருந்து தொடங்கி எழுதப்படாத ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை நிலவி வருவதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் கப்பல்கள் வழிமறித்துத் தாக்கப்படுவதற்கான புலனாய்வுத்தகவல்கள் பல புதுடில்லியிலிருந்து தரப்பட்டவை தான் என்ற மிக வலிமையான ஊகங்கள் உண்டு. எனவே கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையே ஏற்கனவே, எழுதப்படாத ஒரு பாதுகாப்பு நடவடிக்கை நடைமுறையில் உண்டு.

இப்பொழுது ஆலோசிக்கப்படும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை எனப்படுவது ஏற்கனவே நடைமுறையில் உள்ள விவகாரங்களை ஏதோ ஒரு இராஜீய ஒழுங்கமைப்புக்குள் எழுத்தில் போடுவது மட்டுமே. இதை இன்னொரு விதமாகச் சொன்னால், முன்பு ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தியேழாம் ஆண்டில் ராஜீவும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் செய்த உடன்படிக்கையின் நீட்சியே இந்த உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை எனலாம். ராஜீவ், ஜே.ஆர் உடன்படிக்கையின் பின்னிணைப்பாக காணப்படும் கடிதங்களிலிருந்து இது தொடங்குகிறது. கடந்த சுமார் ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக இக் கடிதங்களில் கூறப்பட்ட விவகாரங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல்,ஏதோ ஒரு விகிதத்தில் அமுல் செய்யப்பட்டே வந்துள்ளன. அதாவது இச்சிறுதீவின் அரசியலின் மீது ஏதோ ஒரு விதத்தில், ஏதோ ஒரு விகிதத்தில் ராஜீவ் – ஜே.ஆர் உடன்படிக்கையின் நிழல் வீழ்ந்து கொண்டே இருக்கிறது. இப்பொழுது இந்த நிழலை, அதாவது சுமார் ஒரு தசாப்த காலத்துக்கும் மேலான நடைமுறை ஒன்றை இராஜீய அந்தஸ்துடைய ஒரு ஆவணமாக மாற்ற முயற்சிகள் நடக்கின்றன.

எனவே இங்கே முக்கியமாக ஒன்றைக் கவனிக்கவேண்டும். இந்த உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் விவகாரங்களில் பெரும்பாலானவை, ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகின்றன. இந்த நடைமுறையின் பின்னணியிலேயே புலிகள் தற்சமயம் அடைந்திருக்கும் வளர்ச்சியையும் இராஜீய அந்தஸ்தையும் பெற்றிருக்கிறார்கள். அதாவது கடந்த சுமார் பதினேழு ஆண்டுகளாக எதிரியின் எதிரி எனக்கு நண்பன் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையில் பிரயோகத்தில் இருந்து வருகின்ற நட்புறவு புரிந்துணர்வு என்பனவற்றின் அடிப்படையில், நெருங்கி ஒத்துழைப்பதற்கான ஒரு எழுதப்படாத பாதுகாப்பு உடன்படிக்கையின் கீழ் அவர்களால் புலிகளின் எழுச்சியை பெரிய அளவில் தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்நிலையில் இனி அந்த உடன்படிக்கையை எழுத்தில் போடுவதால் மட்டும் எதைச்சாதிக்கப்போகிறார்கள்?

இங்கே பிரச்சனை, உடன்படிக்கை என்பதை விடவும், உடன்படிக்கை செய்ய உத்தேசிக்கப்படும் காலம் அல்லது உடன்படிக்கையை இறுதிமுடிவாக்குவதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டிருக்கும் காலமே. இதை இன்னும் விரிவாக விளங்கிக் கொள்வதென்றால் நாம் முன்பு பார்த்த இரண்டாவது வியாக்கியானத்திற்கு இனி வர வேண்டும்.

இரண்டாவது வியாக்கியானத்தின்படி புலிகளின் சர்வதேச அந்தஸ்தை உயர்த்தும் விதத்தில் மேற்கு நாடுகள், புலிகளின் பிரதானிகளை விருந்தோம்பியது புதுடில்லியில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறதா? என்பது. அதாவது, இந்தியாவை சமாதானத்தின் கோட்பாடு ரீதியான பங்காளியாக மாற்றும் நோக்கிலான மேற்கு நாடுகளின் பிரயத்தனங்கள் எதிர்பார்த்த வெற்றிகளை பெறத்தவறிவிட்டனவா? என்பது, இங்கு

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

- நிலாந்தன் -

# ஒஸ்லோ, ரோக்கியோ பிரகடனங்கள் தமிழர் உரிமையை சிறையிட முடியாது

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் ஆரம்பமான சமாதானப்பேச்சு வார்த்தைகள் முடக்கமடைந்து 18 மாதங்களாகின்றன. சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடர வேண்டும் என்பதில் விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் ஆர்வத்துடனே தற்போதும் இருக்கின்றனர். சமாதானப் பேச்சுக்களை எவ்வாறு மீண்டும் ஆரம்பிப்பது - அதற்கான தமிழர் தரப்பு நிலைப்பாடு என்ன? சிறீலங்கா அரசு அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை



எல்லாம் விடுதலைப் புலிகள் எவ்வித தடுமாற்றமுமின்றி நேரடியாகவும், விளக்கமாகவும், உறுதியாகவும் தெளிவான வார்த்தைகளில் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றனர்.

சிறீலங்கா அரசுத் தலைமைதான் தெளிவற்ற விதங்களிலும், முன்னுக்குப் பின் முரணான வகையிலும் தமது கருத்துக்களையும் நிலைப் பாட்டையும் தெரிவித்து வருகின்றது. 'தூங்குபவனை எழுப்பலாம், தூங்குபவன் போல் நடிப்பவனை எழுப்ப முடியாது', என்றோர் பழமொழி தமிழ் மக்கள் மத்தியில் புழக்கத் திலுள்ளது. சிறீலங்கா அரசின் தெளிவற்ற கருத்துக்கள் இதைத் தான் நினைவூட்டுகின்றன. தமிழர் தரப்பின் தெளிவானதும் உறுதி யானதுமான நிலைப்பாடு என்ன என்பதை உண்மையில் தெரிந்து. வைத்துக்கொண்டு அதனை விளங்கிக் கொள்ளாதது போல் சிறீலங்கா அரசுத் தலைமை நடிப்பதாகவே கருதவேண்டியுள்ளது.

சரி, சிறீலங்கா அரசுக்குத்தான் காலத்தை இழுத்தடிக்க இவ்வாறான நடிப்புத் தேவைப் படுகிறது என வைத்துக் கொண்டாலும், அனுசரணை வழங்கும் சர்வதேச உதவி வழங்கும் நாடுகளுக்கு என்ன நடந்தது என்பது தான் இன்று தமிழ்மக்கள் மத்தியில் எழுந் துள்ள முக்கியமான கேள்வி.

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசி, கடந்த 20ம் திகதி கிளிநொச்சிக்கு வந்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார். ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுவிட்டுத் தாயகம் திரும்பிய அன்றே அகாசியு டனான, சந்திப்பு இடம்பெற்றது. இதற்கு முன்னதாக அகாசி ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி சந்திரிக்காவை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அவர் சனாதிபதியிடமிருந்து கொண்டுவந்த செய்தி - விடுதலைப்புலிகள் முன்வைத் துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து மட்டும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக சனாதிபதி இருக்கின்றார் என்பது தான். சனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை புலிகளுக்குத் தெரியப்படுத்தி விட்டதுடன் அதன் விபரங்களை வெளியிட முடியாது என ஊடகவியலாளர் களிடம் அகாசி கூறினார்.

விடுதலைப் புலிகள் இவ்வளவு நாளும் கூறிக்கொண்டு வந்தது இதைத்தானே. அதாவது தாம் முன் வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்த அரசாங்கம் முன் வருமானால் தாம் பேச்சுவாாாத்தை மேசைக்குப் போகத்தயார் என்று. இதனை ஏற்றுக் கொள்ளாமல் மாறி மாறி முரண்பாடான கருத்துக்களை முன்வைத்துக் கொண்டு வந்த சனாதிபதி இன்று புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை வரைபின் அடிப்படையில் பேசத்தயாரானால்

**சமாதானம் தொடர்பான புலிகளின் பற்றுறுதி, அதனை முன்னெடுத்துச் செல்வதற்கான அவர்களின் நிலைப்பாடு, சிறீலங்கா அரசின் தற்போதைய நிலைப்பாடு, இயலாமை போன்ற சகல விடயங்களையும் ஐரோப்பிய நாடுகளிடம் விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவினர் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர். பந்து சிறீலங்கா அரசிடமிருக்க, அதனை விடுதலைப் புலிகளிடம் வந்து தேடுவது பொருத்தமற்றதாகும்.**

உடன்டியாக நோர்வே அனுசர ணையாளர்களிடம் இதனைப் பகிரங்கமாக அறிவிக்கலாம். இதனை விடத்து ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாசி மூலமாக இதனை அறிவித்திருப்பது ஆச்சரியமானது.

சனாதிபதியின் செய்தியை புலிகளிடம் தெரிவித்து விட்டேன். ஆனால், அதனைப் பற்றிய விபரத்தை வெளியிட முடியாது என்று அகாசி தெரிவித்திருப் பதானது, சனாதிபதி வேறு ஏதோ நிபந்தனைகளையும் இதனோடு தெரிவித்திருக்கலாம் என்பதை ஊகிக்க முடிகிறது. அகாசியுட னான சந்திப்பின் முடிவில் திரு.சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களிடம் திரு.அகாசி சிறீலங்கா அரசுத் தலைமையிடமிருந்து புதிதாக எதனையும் கொண்டுவரவில்லை எனத்தெரிவித்திருப்பது இந்த ஊகத்தை மேலும் வலுப்படுத் துகிறது.

நோர்வே அனுசரணையாளர் களானாலும் சரி, வேறு உதவி வழங்கும் பிரதிநிதிகளாக இருந் தாலும் வன்னிக்கு விடுதலைப் புலிகளைச் சந்திக்க வரும்போது

**சிறீலங்கா அரசுக்குத் தான் காலத்தை இழுத்தடிக்க இவ்வா றான நடிப்புத் தேவைப் படுகிறது என வைத்துக் கொண்டாலும் அனுச ரணை வழங்கும் சர்வ தேச உதவி வழங்கும் நாடுகளுக்கு என்ன நடந்தது என்பது தான் இன்று தமிழ்மக்கள் மத்தியில் எழுந்துள்ள முக்கியமான கேள்வி.**

அரசாங்கத்திடமிருந்து ஆக்க பூர்வமான செய்திகள் எதனையும் கொண்டுவருவதில்லை. பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் தலைமைப்பீடத்தைச் சந்திக் காமலே வன்னிக்கு வந்து புலிகளிடம் பேசி விட்டுச் செல்கிறார்கள். புலிகளின் கருத்துக்களை அரசிடம் தெரிவித்து அதற்கான பதிலைக் கூடத்தராமல், அவர்கள் விமானம் ஏறிவிடுகிறார்கள். சந்திரிக்கா அரசு பதவிக்கு வந்தபிறகு இதேநிலைதான் நீடிக்கிறது. இந்த நிலை தமிழ்மக்கள் மனதில் சலிப்பினையும் சர்வதேச அனுசரணை மீதான அவநம்பிக் கையினையும் தோற்றுவித்து ள்ளது. புலிகளை நாடிபிடித்துப் பார்ப்பதும் போரொன்று மீண்டும் மூளாதிருப்பதை உறுதி செய்வதுமே அனுசரனையாளர் களின் தற்போதைய பணியாக வுள்ளது. இது எவ்வளவு நாட் களுக்குத் தொடரப்போகிறது என்பதும் அடுத்து எழும் கேள்வி.

சமாதானம் தொடர்பான புலிகளின் பற்றுறுதி, அதனை முன்னெடுத்துச் செல்வதற்கான அவர்களின் நிலைப்பாடு, சிறீலங்கா அரசின் தற்போதைய நிலைப்பாடு, இயலாமை போன்ற சகல விடயங்களையும் ஐரோப்பிய நாடுகளிடம் விடுதலைப் புலிகளின் அரசியற் குழுவினர் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர். பந்து சிறீலங்கா அரசிடமிருக்க அதனை விடுதலைப் புலிகளிடம் வந்து தேடுவது பொருத்தமற் றதாகும்.

சிறீலங்கா அரசு சமாதான முன்னெடுப்பைத் தொடர்வதற் கான பொருத்தமான நடவடிக் கைகளை மேற்கொள்ளாமல் ஒஸ்லோ பிரகடனமும் ரோக்கியோ பிரகடனமும் சமாதானத்தை சரிய விடாமல் பிடித்துக்கொள்ளும் என எதிர்பார்ப்பது தவறானதாகும்.

ஒஸ்லோ பிரகடனமும் ரோக்கியோப் பிரகடனமும் விடுதலைப் புலிகளைக் கட்டுப் படுத்தாது என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். இதனை உறுதிப் படுத்தும் விதமாக இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் இரண்டாம் செயலர் ரொம் நப்ஸ்கொக் மிகத் தெளிவாகத் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார். அவர் சொல்கிறார், ஒஸ்லோப்பிரகடனம் என்று எதுவுமில்லை என்று. சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் தமது வலுவான மூன்றாவது சுற்றுப் பேச்சின் முடிவில் வெளியிட்ட ஒரு பத்திரிகை அறிக்கைதான் அது. ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையில் ஒரு தீர்வை எட்ட முடியுமா என்பதை கண்டறி வதற்கு இருதரப்பும் இணக்கம் தெரிவித்ததையே அந்த அறிக்கை கூறுகின்றது. சுதந்திர தனிநாடு கோரும் நிலையைப் புலிகள் கைவிட்டு விட்டதாக, புலிகள் கூறியதாக அர்த்தம் கொள்ள முடியாது என அவர் தெளிவாக விளக்குகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி யானாலும் சரி, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியா னாலும் சரி, ஒஸ்லோ பிரகடனம், ரோக்கியோ பிரகடனம் எனக் கூறித் தமிழர் தரப்பை முடக்கி வைக்க முடியாது. அல்லது பயமுறுத்தவும் முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச வலை களிலும், பொறிகளிலும் தமிழ் மக்களின் போராட்டத்தை சிறை வைக்கும் தந்திரங்களைச் சிங்களப் பேரினவாதத் தலைமைகள் தொடர முடியாது.

சர்வதேச சமூகமும் இப் பேரினவாதச் சூழ்ச்சிகளுக்குத் துணை போகாமல் நியாயமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டு மென்பதே தமிழ்மக்களினது எதிர்பார்ப்பாகும்.. தமிழர் தரப்பின் பிரகடனம் ஒன்றுள்ளது. அதனை விடுதலைப் புலிகளின் தலை மைப்பீடம் அவ்வப்போது அறிவித்து வருகின்றது.

இலங்கைத் தீவிற்குள் தமிழ் மக்கள் தங்கள் பூர்வீகத் தாய கத்தில் கௌரவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழக்கூடிய பூரணமான சுயாட்சி அதிகாரம் வழங்கப்படாது விட்டால், அவர்கள் பிரிந்து சென்று தனிநாடு ஒன்று அமைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை தலைவர் பிரபாகரன் அவர்கள் ஒவ்வொரு மாவீரர் தின உரையிலும் தெளிவாகப் பிரகடனப்படுத் திவருகிறார். இதுதான் தமிழர் தரப்பினது உறுதியானதும் தெளிவானதுமான பிரகடனம்.

ஒஸ்லோ, ரோக்கியோ பிரகட னங்களை தூக்கியெறிந்து விட்டு இந்தப் பிரகடனத்தைக் கருத்தில் கொண்டு சிறீலங்கா அரசு சரியானதொரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். இதனை சர்வதேச சமூகமும் வலியுறுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களினது உறுதியானதும் இறுதியானதுமான எதிர்பார்ப் பாகும்.

- விவேக்

# ஜெருசலேம் நகரில் அரபாத் உடலை புதைப்பதற்கு அனுமதிக்க மாட்டோம்

## -இஸ்ரேல்-

75 வயது பாலஸ்தீனத் தலைவர் யாசர் அரபாத் சுய நினைவு இழந்த நிலையில், பிரஞ்சு இராணுவ மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். அவர் இன்னும் மரணம் அடையவில்லை என்ற போதிலும், அவர் இனிமேல் உயிர் பிழைப்பது அரிது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இறந்த பிறகு தனது உடலை புனித நகரமான ஜெருசலேமில் தான் புதைக்க வேண்டும் என்று அரபாத் விரும்பினார். அங்கு தான் அவர் பிறந்தார். 1967ம் ஆண்டு நடந்த யுத்தத்தின் போது ஜெருசலேம் நகரை இஸ்ரேல் கைப்பற்றி தன்னுடன் இணைத்துக் கொண்டது.

இந்நிலையில், ஜெருசலேம் நகரில் அரபாத் உடலை புதைப்பதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று இஸ்ரேல் அறிவித்து விட்டது. இதனால் அரபாத் உடலை எங்கே புதைப்பது என்பதும் பெரிய சர்ச்சையானது. ஜெருசலேம் நகருக்கு பாலஸ்தீனியர்கள் சொந்தம் கொண்டாடி வரும் நிலையில், அங்கே அரபாத் உடலைப் புதைக்க அனுமதித்தால், அது அவர்களின் உரிமைக்கு வலு சேர்த்ததாகி விடும் என்று இஸ்ரேல் அஞ்சுகிறது. அதனாலேயே அவர் உடலை ஜெருசலேமில் புதைக்கக் கூடாது என்பதில் அது உறுதியாக இருக்கிறது.


இதைத் தொடர்ந்து காசா பகுதியில் அரபாத் உடலைப் புதைக்கலாம் என்று இஸ்ரேல் பிரதமர் ஆரியல் ஷரோன் கூறி இருக்கிறார். 1967ம் ஆண்டு யுத்தத்தில், இந்தப் பிரதேசமும் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்டது தான். இங்கு இருந்து வெளியேற இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.

காசா பகுதியில் அரபாத் உடலைப் புதைப்பதற்கு, பாலஸ்தீனியர்களும் சம்மதம் தெரிவித்துள்ளனர். ஜெருசலேம் இல்லை என்பது இறுதியாகி விட்டால் காசா பகுதி ஏற்கக் கூடியதுதான் என்று பாலஸ்தீனத் தலைவர்கள் கூறி உள்ளனர். யாசர் அரபாத்தின் தந்தை கான்நனிஸ் உடல் காசாவில் தான் அடக்கம் செய்யப்பட்டது. எனவே காசா அராபத்தின் விருப்பத்துக்குரிய இடம் தான் என்று அவரது உறவினர்கள் கூறினர்.

இதற்கிடையில், அராபத்தின் மூளை செயல் இழந்து விட்டது என்று பிரஞ்சு மருத்துவ வட்டாரத்தில் கூறப்படுகிறது. இதை பிரான்சு நாட்டுக்கான பாலஸ்தீனத் தூதர் லைலா ஷாகீத் மறுத்து இருக்கிறார்.

அவர் கூறியதாவது, "வாழ்விற்கும் சாவிற்கும் இடையிலான ஜீவ மரணப் போராட்டத்தில் அவர் இருக்கிறார். `கோமா'வில் விழுந்து விட்டார். மீண்டும் நினைவு திரும்பக் கூடிய கோமாதான் இது. பாலஸ்தீனத் தலைவர் பொறுப்பில் இருந்து அவர் விலக மாட்டார். ஏன் ராஜினாமா செய்ய வேண்டும். அதற்கான தேவை என்ன வந்து விட்டது". இவ்வாறு லைலா கூறினார். பிரதமர் அகமது கோரி, அராபத்தின் அதிகாரங்களில் சிலவற்றை எடுத்துக் கொண்டார். அரபாத் இறந்து போனால், மிகப் பெரிய குழப்பம் ஏற்படும். வன்முறை வெடிக்கும் என்று அஞ்சப்படுகிறது. அதனால் அதைத் தடுப்பதற்காக இஸ்ரேலும், பாலஸ்தீனமும் முன் ஏற்பாடுகளை செய்துள்ளன.

முன்னதாக, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், சுயநினைவு இழந்த அரபாத் கோமா நிலைக்கு சென்றார். அவரது நிலைமை மிகவும் கடுமை அடைந்ததாக மருத்துவர்களும், அரபாத்தின் ஆலோசகரும் கூறினார்கள். சிறிது நேரத்தில் அரபாத் மரணம் அடைந்ததாக இஸ்ரேல் நாட்டு தொலைக்காட்சியும், இராணுவ வானொலி ஒலிபரப்பு நிலையமும் அறிவித்தன. இதே வேளை லுக்சம்பேர்க் நாட்டு பிர



தமரும் அரபாத் மரணம் அடைந்ததாக கூறினார்.

ஆனால் `அரபாத் மரணம் அடையவில்லை. உயிருடன் தான் இருக்கிறார்' என்று பிரெஞ்சு மருத்துவர்கள் அறிவித்தனர். இஸ்ரேல் இராணுவத்தின் முற்றுகை காரணமாக வீட்டில் முடக்கப்பட்டு இருந்த காலத்தில், போதுமான மருத்துவ உதவி பெறவில்லை என்றும் அவரது உடல்நிலை மோசமானதற்கு காரணம் என்றும் மருத்துவர்கள் கூறினர்.

இதேவேளை யாசர் அரபாத் மரணம் அடைந்ததாக வெளியான தகவலைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி புஷ், 'அவரது ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதாக' இரங்கல் செய்தி வெளியிட்டார். அரபாத் உடல்நிலை பற்றிய தகவல் கிடைத்ததும் மேற்குக் கரை நகரமான ரமல்லாவில் பாலஸ்தீன அதிகாரிகளின் அவசரக் கூட்டம் நடந்தது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அராபத்துக்கு அடுத்து 2வது இடத்தில் இருப்பவரும், முதல் பிரதமருமான மக்மூத் அப்பாஸ், உடனடியாக பிரான்சிலுள்ள மருத்துவமனைக்கு சென்று நிலைமையை நேரில் ஆராய்ந்தார். இதற்கிடையே யாசர் அரபாத்திடம் இருந்த பாதுகாப்பு, நிதி அதிகாரங்களை பாலஸ்தீன பிரதமர் அகமது குரி கைப்பற்றிக் கொண்டதாக உயர் அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர்.

இதுஇவ்வாறிருக்க, அரபாத்தின் மரணத்தின் பின்னர் ஒரு அதிகார வெற்றிடம் ஏற்படும் என்று பெரும்பாலான பாலஸ்தீனர்கள் அஞ்சுகிறார்கள். இதனால் அரசியல் அதிகாரச் சண்டையொன்றும் மூளும் அபாயம் இருக்கிறது. அரபாத் இறந்துபோனால், இஸ்ரேலுடனான தேக்க நிலையடைந்திருக்கும் சமாதான முயற்சிகளைக் கைவிட வேண்டாம் என வெளிநாட்டுத் தலைவர்கள் பாலஸ்தீனர்களைக் கேட்டிருக்கிறார்கள்.




# விமானத்தில் இருந்து குண்டு தவறி விழ்ந்து வெடித்தது

போர் விமானத்தில் இருந்து குண்டு தவறி விழுந்து வெடித்தது. இச்சம்பவம் இந்தியாவில் இடம் பெற்றுள்ளது. 30 கிலோ எடையுள்ள 4 குண்டுகளை ஏற்றிக் கொண்டு விமானப்படை பயிற்சி விமானம் புறப்பட்டது. இந்த விமானத்தை பயிற்சி விமானி செலுத்திச் சென்றார். பின்னர் 3 குண்டுகளை மட்டுமே அந்த விமானி பயிற்சி தளத்தில் ஒப்படைத்தார்.

அவர் விமானத்தில் ஏற்றிச் சென்ற ஒரு குண்டு, விமானத்தில் இருந்து தவறி, ஜாம்நகர் மாவட்டம் லகாவால் கிராமத்தில் உள்ள வயல் வெளியில் விழுந்து வெடித்தது. இதனால் பயிர்கள் தீப்பிடித்து கருகின. இது பற்றி அங்குள்ள விவசாயிகள் விமானப்படை தளத்துக்கு தகவல் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து விமானப்படை அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த விபத்து நிகழ்ந்ததாக கூறப்படுகிறது. இதில் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் பற்றியும், விபத்து ஏன் நடந்தது என்பது குறித்தும் விசாரணை நடத்தப்படும்' என்று விமானப்படை அதிகாரி தெரிவித்தார்.

# புஷ் பதவியேற்கும் போது அமைச்சர்கள் மாற்றம் !

## கொலின் பவல், டொனால்ட் ரம்ஸ்பெல்ட் பதவியிழப்பார்கள் ?

அமெரிக்காவில் 2வது முறை ஜனாதிபதியாக புஷ் பதவி ஏற்கும் போது, அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படும். இராணுவம், வெளி விவகார அமைச்சர்கள் மாற்றப்படுவார்கள் என்று ஆளும் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர். அமெரிக்க ஜனாதிபதியாக இருக்கும் புஷ், 2வது முறை பொறுப்பு ஏற்கும்போது அமைச்சரவையில் மாற்றங்கள் இருக்கும் ஜனாதிபதியாக புஷ் தெரிவித்தார்.

அவர் நிருபர்களிடம் கூறியதாவது, அமைச்சரவை மாற்றம் பற்றி இப்போது சிந்தித்து வருகிறேன். சில மாற்றங்கள் இருக்கும். புதிய அமைச்சரவையில் யார் வருவார்கள் என்பதை இப்போது சொல்ல முடியாது. ஒவ்வொரு நிர்வாகத்திலும் மாற்றம் ஏற்படத்தான் செய்யும். இவ்வாறு புஷ் கூறினார்.

இராணுவ மந்திரி டொனால்ட்



ரம்ஸ்பெல்டு வெளிநாட்டு அமைச்சர்கள் கொலின் பவெல் ஆகியோர் மாற்றப்படுவார்கள் என்று சில குடியரசுக் கட்சித் தலைவர்கள் கூறினார்கள். உடனடியாக இல்லா விட்டாலும், கொஞ்ச காலத்துக்குப் பிறகு அவர்கள் 2 பேரும் பதவியில் இருந்து அகற்றப்படுவார்கள்.



இராணுவ இலாகா துணை அமைச்சராக இருக்கும் பால் உல்போவிட்ஸ், டொனால்ட் ரம்ஸ்பெல்டுக்குப் பதிலாக புதிய இராணுவ அமைச்சராக பதவி ஏற்பார் என்றும் அந்தத் தலைவர்கள் தெரிவித்தனர்.

வெளிநாட்டு அமைச்சர் பவெல் பதவி நீண்ட நாட்களுக்கு முன்பே பறிபோய் இருக்க வேண்டியது. அவர் 2வது முறை ஆட்சியின்போது நீடிக்க மாட்டார். அவருக்குப்பதிலாக ஐ.நா.சபைக் கான அமெரிக்கத் தூதர் ஜான் டான்போர்த் புதிய வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்படுவார். நீதித்துறை அமைச்சரான ஜான் அஷ்க் ராப்ட்டு பதவியும் பறிபோக இருக்கிறது. உடல் நலம் இல்லாத தால், அவர் பதவி விலகுவார். அவர் பதவி விலகினால் லாரி தாம்சன் புதிய நீதித்துறை அமைச்சராவார். இதேவேளை, நிதி அமைச்சர் ஜான் ஸ்நோ உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் டாம் ரிட்ஜ், கல்வி அமைச்சர் ராட் பைகே, சுகாதார அமைச்சர் டாமி தாம்சன், போக்குவரத்து அமைச்சர் நார்ம் மினெட்டா ஆகியோரும் ஆகியோரும் தங்கள் பதவிகளை இழப்பார்கள் என்று கூறப்படுகிறது.

லாக்கூர்நேவ்'இல் தரத்திற்கும் மலிவுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

கிருஷ்ணாஸ் பல்பொருள் அங்காடி

இலங்கை,இந்தியா,பாகிஸ்தான்,ஆபிரிக்க இறக்குமதிப் பொருட்கள் மொத்தமாகவும்,சில்லறையாகவும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
தினசரி,வாராந்த,மாதாந்த சஞ்சிகைகள்,திரைப்பட,தொடர்நாடக ஒளிநாடாக்கள் என்பனவற்றையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

தரிப்பிடம் -M°-7, Tram 1, Bus 152-609-607-773.
(சுப்பர் மார்சே பின்புறம்,
சென்றல் கொமர்சியல் கட்டிட உட்புறம்-G-4 கலரி)

# வீரப்பனுக்கு வலைவிரித்த பிரியா பத்திரிகையாளர்களுடன் சந்திப்பு

சந்தன வீரப்பன் கடந்த மாதம் 18ம் திகதி கொல்லப்பட்டார். வீரப்பனை வீழ்த்த உதவியதாகக் கூறப்படும் பிரியா என்ற பெண் சென்னையில் கடந்த 5ம் திகதி பரபரப்பான தகவல்களை வெளியிட்டார். வீரப்பனை வீழ்த்துவதற்கு சிறப்பு அதிரடிப்படை பல்வேறு வியூகங்களை வகுத்தது. போலிசாரின் வியூகத்தில் பிரியா என்ற இளம் பெண் முக்கிய ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டார் என்று வீரப்பனின் மனைவி முத்து லட்சுமியே அதிரடியாக இந்த தகவலை வெளியிட்டார்.


வீரப்பனை வீழ்த்த காரணமாக இருந்த பிரியா யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர், அவர் எப்படி இருப்பார்? என்று பொது மக்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டது. இந்நிலையில் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் தனது தாயாருடன் பிரியா தங்கி இருக்கும் தகவல் வெளியானது. இதைத் தொடர்ந்து பத்திரிகை நிருபர்கள், பிரியா தங்கியிருந்த அடுக்குமாடி குடியிருப்பை முற்றுகையிட்டு, வீரப்பனை வீழ்த்த உதவியது பற்றி கேட்டனர்.

அப்போது அவர் கூறியதாவது, வீரப்பனை வீழ்த்தும் வியூகத்தில் நான் ஒரு கருவியாக வந்தது எதிர்பாராத சம்பவம்.

போலிஸ் அதிகாரிகளான செந்தாமரைக் கண்ணன், அசோக்குமார் ஆகியோர் எங்கள் குடும்ப நண்பர்கள். அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அப்போது வீரப்பனை பிடிப்பது பற்றி பேசுவார்கள். வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியுடன் ஒரு பெண் பழகினால் அவனைப் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்தனர். அதற்கு என்னை உதவுமாறு கேட்டனர்.

என் வீட்டுக்கு முத்துலட்சுமியை, செந்தாமரைக்கண்ணன் தான் அழைத்து வந்தார். கடந்த ஜனவரி மாதம் 2ம் திகதி என் வீட்டுக்கு வீரப்பன் மனைவி வந்தார். முத்து லட்சுமிக்கு அப்போது என்னை யார் என்று தெரியாது.

முத்துலட்சுமியை என் வீட்டு மாடியில் தங்க வைத்து இருந்தேன். முதலில் முத்துலட்சுமி எதுவும் பேச மாட்டார். முத்துலட்சுமியின் அன்பை பெறும் வகையில் நான் நல்லபடி பழகினேன். நான் அவருடன் பாசத்துடன் பழகியதால் என்னை நம்பினார். அதன் பின்னர்தான் அவர் வீரப்பனின் மனைவி என்று என்னிடம் கொஞ்சம் கொஞ்சமாக பேசத் தொடங்கினார். நான் உடனே ஒன்றும் தெரியாதது போல் ஆச்சரியப்படுவது போல் நடித்தேன். வீரப்பனை எனக்கு ரொம்ப பிடிக்கும். நான் அவரைப் பற்றி பத்திரிகைகளில்



படித்து இருக்கிறேன் என்று முத்து லட்சுமியின் மனசை கரைத்தேன்.

"என் மீதும், என் குழந்தைகள் மீதும் அவருக்கு ரொம்ப பாசம் உண்டு. என் 2வது மகள் பிறந்தது அவருக்கு தெரியாது. அவளைப் பார்க்க ரொம்ப ஆசைப் பட்டார்" என்று என்னிடம் கூறினார். போலிசாருக்கு தெரியாமல் மகளை வீரப்பன் பார்க்க நான் ஏற்பாடு செய்கிறேன். கோத்தகிரியில் உள்ள எங்கள் பங்களா வீட்டில் வந்து தங்கிக் கொண்டால் வீரப்பனிடம் உன் மகளை காட்டலாம் என்றேன். முதலில் அவர் சம்மதிக்கவில்லை. கோத்தகிரிக்கு வந்து டீ எஸ்டேட்டைப் பார்த்தார். வீரப்பன் வந்தால் தப்பித்துச் செல்ல வழிகள் உள்ளதா என்று பார்த்து விட்டு சம்மதித்தார்.

வீரப்பன் மனைவிக்கு சமைத்து கொடுக்கு சமையல்காரர் ஆக அதிரடிப்படை வீரர் தான் இருந்தார். எனக்கு சொந்தமான மாருதி காரையும் அதிரடிப்படை வீரர்தான் ஓட்டினார். இதெல்லாம் முத்துலட்சுமிக்கு தெரியாது. போலிசை ஏமாற்றி வீரப்பனிடம் உங்கள் மகளை காட்ட `மே' மாதம் போவோம் என்று கூறி, முத்துலட்சுமியை கோத்தகிரிக்கு அழைத்துச் சென்றேன். கோத்தகிரி வீட்டில் போலிசார் இரகசிய கேமரா வைத்திருந்தனர். போலிசாரும் வீரப்பனை பிடிக்கக் காத்திருந்தனர். 10 நாட்கள் தங்கியிருந்தோம்.

முத்துலட்சுமி வீரப்பனுக்கு "கேசட்" மூலம் தகவல் கொடுத்து அனுப்பினார். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை வீரப்பன் அப்போது வரவில்லை. வீரப்பனின் கண் பார்வை பாதிக்கப்பட்டு இருப்பது தெரிந்தது. கண்ணுக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று ஒரு உளவாளி மூலம் வீரப்பன் சொல்லி அனுப்பினான். அந்த தகவலை நான் போலிசுக்கு தெரிவித்தேன். வீரப்பன் வீழ்ச்சிக்கு இதுதான் ஒரு முக்கிய தகவலாக அமைந்தது. வீரப்பனை வீழ்த்த நான் ஒரு சிறிய உதவியை செய்து இருக்கிறேன். இது எனக்கு பெருமையாக உள்ளது. இவ்வாறு பிரியா கூறினார்.

## வீரப்பன் புதையலை தேடியவர் யானை மிதித்து சாவு

ஒகேனக்கல் காட்டுக்குள் வீரப்பனின் புதையலை தேடிச்சென்றவர் பிணமாக கிடந்தார். அவரை யானை மிதித்து கொன்றுள்ளது. இந்த சம்பவம் பற்றிய விவரம் வருமாறு, சந்தன வீரப்பன் கொல்லப்படுவதற்கு முன் ஒகேனக்கல் காட்டுப்பகுதியில் தான் நடமாடி உள்ளான். வீரப்பன் பணத்தை பானைகளிலும் டயர் மடிப்பிலும் அடைத்து குழி தோண்டி புதைத்து வைத்துள்ளதாக தகவல்கள் பரவி உள்ளன. இதனால் வீரப்பன் கடைசியாக நடமாடிய காட்டு பகுதியை சேர்ந்த கிராம மக்கள் வீரப்பனின் புதையலை தேடி காட்டுக்குள் சென்று தேடத் தொடங்கி உள்ளனர். இது பற்றி தகவல் அறிந்த வனத்துறையும் போலீசாரும் வீரப்பன் புதையலை தேடி யாரும் காட்டுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆனாலும் இந்த எச்சரிக்கையை மீறி மலையோர கிராம மக்கள் சிலர் காட்டுக்குள் நுழைந்துள்ளதாக தெரிகிறது.

எச்சரிக்கையையும் மீறி கடந்த சில நாட்களுக்கு முன் புதையலை தேடிச் சென்ற ஒருவர் யானை மிதித்து இறந்துள்ளார். அவரது உடல் அழுகிய நிலையில் போலீசார் கைப்பற்றினர். அவரது உடல் கிடந்த இடத்தின் அருகே யானையின் கால் தடங்கள் இருப்பதால் அவர் யானை மிதித்ததில் தான் இறந்திருப்பார் என உறுதியாகி உள்ளது. இறந்து கிடந்தவர் வீரப்பன் கொல்லப்பட்ட சிலநாட்கள் கழித்து ஒகேனக்கல் பகுதியில் நடமாடியதை அந்த பகுதியினர் பார்த்துள்ளனர். வீரப்பனின் புதையல் ஆசையால் யானைக்கு இரையானவர் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பது தெரியவில்லை. அவரது உடல் அழுகிய நிலையில் இருப்பதால் அடையாளம் காண முடியாத நிலையில் உள்ளது போலீசார் தெரிவித்துள்ளனர்.

## ஐரோப்பா செல்ல முயன்ற இந்தியர்கள் சகாரப் பாலைவனத்தில் மீட்பு !

சட்டவிரோதமாக ஐரோப்பாவிற்குள் நுழைவதற்காக சென்று கொண்டிருந்த 23 பேர் சகாரப் பாலைவனத்தில் தவித்துக்கொண்டிருந்த போது மீட்கப்பட்டுள்ளனர். வட ஆபிரிக்காவில் இருந்து 23 இந்தியர்களும், வங்காளதேசத்தைச் சேர்ந்தவர்களும் சட்டவிரோதமாக ஐரோப்பாவில் குடியேற முடிவு செய்தனர்.

இதைத்தொடர்ந்து அவர்கள் 23 பேரும் சகாரா பாலைவனம் வழியாகச் சென்றனர். அப்போது அவர்கள் பாலைவனத்தில் வழிதெரியாமல் தவித்தனர். இதுபற்றிய தகவல் ஜெனிவாவில் உள்ள சர்வதேச மனிதநேய குழுவினருக்கு கிடைத்தது. அவர்கள் அங்கு சென்று 23 பேர்களையும் மீட்டனர். அவர்கள் அனைவரும் குடியேற்ற உரிமை இல்லாமல் சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்கு செல்ல இருந்தது விசாரணையில் தெரிய வந்தது.

இதனையடுத்து மீட்கப்பட்ட இந்தியர்கள், டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். வங்காளதேசத்தை சேர்ந்தவர்கள் டாக்கா அனுப்பி வைக்கப்பட்டனர். மேற்கண்ட தகவலை சர்வதேச மனிதநேய குழுவின் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

## `ஐவரி கோஸ்ட்' மோதல் தொடர்கின்றது

ஐவரி கோஸ்ட் பவ்-ஏக் என்ற இடத்தில் இருந்த பிரெஞ்சு இராணுவ முகாம் மீது ஐவரி கோஸ்ட் அரசுக்கு ஆதரவான போர் விமானங்கள் குண்டுகள் வீசின. கடந்த 6ம் திகதி மேற்கொண்ட தாக்குதலில் 9 பிரெஞ்சு வீரர்களும் ஒரு அமெரிக்க வீரருமாக 10 பேர் பலியானார்கள்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், பிரெஞ்ச் துருப்புகள் ஐவரி கோஸ்ட் அரசின் 5 விமானங்களை தாக்கியழித்தன. இதைத் தொடர்ந்து பிரெஞ்சு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விமான நிலையத்தை மீட்பதற்காக ஐவரி கோஸ்ட் அரசு ஆதரவாளர்கள் பிரெஞ்சு இராணுவத்துடன் யுத்தத்தை தொடங்கியுள்ளனர். தலைநகர் அபிட்ஜன் மற்றும் யமாங் சவுக்ரோ ஆகிய நகரங்களில் நடந்த மோல்களில் 30 பேர் கொல்லப்பட்டனர், 100 பேர் காயம் அடைந்தனர்.

பிரெஞ்சு நாட்டிடம் இருந்து 1960ம் ஆண்டு ஜ்வரி கோஸ்ட் விடுதலை அடைந்தது. 2002ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இராணுவ புரட்சிக்கு முயற்சி செய்யப்பட்டது. அதுமுதல் நாடு பிளவுபட்டது. அரசு ஆதரவு தெற்குப் பகுதிக்கும், புரட்சிக்காரர்களின் வடபகுதிக்கும் இடையே அடிக்கடி மோதல் நடந்து, உள்நாட்டுச் சண்டை தொடர்ந்தது. இதைத் தடுப்பதற்காக ஐ.நா. அமைதிப்படை அங்கு அனுப்பப்பட்டது. அமைதிப்படை முயற்சியால் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. ஐ.நா. அமைதிப்படையில் 4000 பிரெஞ்சு வீரர்கள் இடம் பெற்று இருந்தனர்.

IMPORTAS Asian Groceries
Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**
உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45
**I Mportas Gmbh -Germany**
**Roettgen 143 EKG 107**
**D-4209, Wuppertal**
**Germany**
**Tel: 0049 202 265 53 05**
**Fax: 0049 202 265 53 84**
சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports
Tel: 0049 -24625557

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே

# புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் பிரான்ஸ் வழங்கும்

# மாபெரும் கலை மாலை
# தென்னங்கீற்று - 2004




இன்னிசை விருந்து
பரதம்
மேற்கத்தைய நடனம்
நாடகம்
இன்னும் மண்ணின் மணம் மாறாத
சுவையான பல நிகழ்வுகளுடன்....

## காலம் - 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை
## நேரம் : பிற்பகல் 2 மணி


இடம் - Salle Jeanne D'Arc
52 Place de Torcy
75018 PARIS
Metro : Marx Dormoy (Ligne 12)
Bus 65 ou 60

மேலதிக தொடர்புகளுக்கு
06 16 39 12 51
06 67 14 46 39
06 61 19 27 39

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



# புஷ்சிற்கு மீண்டும் வெற்றி தோல்வியை ஏற்றார் கெரி



அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சுக்கும், ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜோன் கெரிக்குமிடையில் மிகக் கடுமையாக எழுந்திருந்த தேர்தல் போட்டி பலரது கணிப்புகளுக்கு மத்தியில் ஓரளவிற்கு முடிவுக்கு வந்தவிட்டது. மீண்டும் அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார், ஜோர்ஜ் டபிள்யூ புஷ்.

ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மீண்டும் வெற்றி பெற்றதையடுத்து, இவருடன் போட்டியிட்ட ஜோன் கெரி தனது தோல்வியை ஏற்றுக் கொண்டுள்ளார். கடந்த 2ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலுக்கான வாக்குகளை எண்ணும் பணி முற்றாக முடிவுறாத போதிலும், வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தனது தோல்வியை ஏற்றுக் கொண்டுள்ள ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி, புஷ்சை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

ஒஹ்யோ மாநிலத்தில் சட்டப்படி தேர்தலுக்கு பின் 11 நாள் கழித்தே தபால் வாக்குகள் மற்றும் வேறு பகுதிகளில் வசிக்கும் இம்மாகாணத்தைச் சேர்ந்த இராணுவத்தினர் அளித்த வாக்குகள் எண்ணப்படும். இந்த வாக்குகள் வந்து சேர வசதியாக 11 நாள் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இம்மாகாணத்தில் இராணுவத்தினரின் வாக்குகள் அதிகம் என்பதால், ஒஹ்யோவின் முடிவு அதிகாரபூர்வமாக வெளியாக 11 நாட்கள் ஆகும். அதாவது 13ம் தி க திக்கு பின்னரே அம் மாநில வாக்குகள் வெளிவரும். இந்த வாக்குகளின் எண்ணிக்கை 2.5 இலட்சத்தைத் தாண்டும். இவை எண்ணப்பட்ட பின்னரே ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அதிகாரபூர்வமாகத் தெரியவரும்.

தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் 538 தேர்தல் வேட்பாளர் வாக்குகளில் 270 தேர்தல் வாக்குகளை பெற்றிருக்க வேண்டும். எனினும் இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின் நிலையில் ஜோர்ஜ் புஷ் 274 தேர்தல் கல்லூரி வாக்குகளைப் பெற்றுள்ளார். கெரிக்கு 252 தேர்தல் கல்லூரி வாக்குகளே கிடைத்துள்ளன. ஜோர்ஜ் புஷ் 274 தேர்தல் கல்லூரி வாக்குகளைப் பெற்றுள்ளதால் புஷ்சின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. ஒஹ்யோ மாநில வாக்குகளின் எண்ணிக்கை ஜனாதிபதிக்கான பலத்திற்கு அவசியமில்லை எனினும் தேர்தல் முடிவுகள் அதிகாரபூர்வமாக அறிவிப்பதற்கு இவ்வாக்குகளுக்காக காத்திருக்க வேண்டியுள்ளது.


சரியாக நான்கு வருடங்களுக்கு ஒருமுறை, நவம்பரில் வரும் முதல் செவ்வாயன்று அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தல் இடம்பெற்றுவருகின்றது. இதுவே அந்நாட்டின் நிரந்தர தேர்தல் தினமாக இருக்கின்றது. 2000ம் ஆண்டு நவம்பர் முதற் செவ்வாயன்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், புளோரிடா மாநில தேர்தல் வாக்களிப்புச் சீட்டில் ஏற்பட்ட சட்டரீதியான குழப்பங்களால், அப்போது புஷ்ஷிற்கெதிராகப் போட்டியிட்ட அல் கோர் வெறும் 550 வரையான வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி கண்டார். அல் கோர் வெற்றி பெற்றதாக நம்பப்பட்ட நிலையில், புளோரிடா மாநில வாக்குப் பதிவில் உள்ள குழப்பத்தை ஆராயும்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டதால், கிட்டத்தட்ட ஒரு மாதம் வரையில் நீடித்த வாக்கெடுப்பு இழுபறிகள், புஷ்ஷிற்கு சாதகமான முதல்நிலைத் தீர்ப்பு அறிவிக்கப்பட, மீண்டும் உச்சநீதிமன்றத்திடம் போனால் வெற்றிபெற வாய்ப்பிருக்கிறது என்று தெரிந்திருந்தும், நாகரீகமான முறையில் அல் கோர் தனது நிலையிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டு, ஜனாதிபதி பதவியை ஏற்க ஜோர்ஜ் புஷ்ஷிற்கு அனுமதி வழங்கினார்.

## தோல்வியைப் பற்றி புஷ் சிந்திக்கவேயில்லை
## தந்தை எச்.டபிள்யூ புஷ் கூறுகிறார்



ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஒருபோதும் தேர்தலில் தோற்கப்போவது பற்றிச் சிந்தித்ததோ, அதனைப் பற்றி கதைத்ததோ இல்லை. வெள்ளை மாளிகையில் எமது வாழ்க்கை முடிவடைந்து விடாது. இவ்வாறு தெரிவிப்பது வெள்ளை மாளிகையை எமது மரபுரிமைச் சொத்தாக நான் கருதி உரைப்பதாக ஆகாது. புஷ் குடும்பம், வெறும் பிரபலத்துக்காகவோ, பதவி மோகத்துக்காகவோ வாழ்ந்து முடிகிற குடும்பம் அல்ல. சபையில் முதலிடத்துக்காக நாம் பாடுபடுவதும் கிடையாது. நான் வாரிசுரிமையை நிலை நிறுத்த முயற்சிக்கவில்லை. அதனை வரலாற்றாசிரியர்களிடமே விட்டு விடுகிறேன். எனக்கு நன்மை கிடைத்தால் அது அற்புதமானதே. கிடைக்காவிடினும் நான் சொர்க்கத்தில் இருப்பேன் என ரைம் இதழுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## புஷ்சும் கெரியும்





1946ம் ஆண்டு யூலை 6ல் பிறந்த ஜோர்ஜ் வார்க்கர் புஷ், புகழ்பெற்ற ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றவர். லோரா என்ற மனைவியுடன் இரண்டு வளர்ந்த பெண் குழந்தைகளுடன் ரெக்சஸ் மாநிலத்திலிருந்து ஜனாதிபதி வேட்பாளராகத் தோற்றுகிறார். ஏற்கனவே 4 வருடங்கள் ஜனாதிபதியாக இருந்தவரும் இவரே. 1994ல் ரெக்சாஸ் மாநில ஆளுநராகத் தெரிவாகும் முன்னர், எண்ணெய் நிறுவனமொன்றை உருவாக்கி அதன் நிர்வாகியாக செயற்பட்டு வந்தவர்.

1943ம் ஆண்டு டிசம்பர் 11ல் பிறந்த ஜோன் போர்ப்ஃஸ் கெரி, புகழ்பெற்ற ஜேல் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்று, பொஸ்ரன் கல்லூரியின் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றார். ரெறேசா ஹெய்ன்ஸ் என்ற மனைவியுடன் வளர்ந்த இரு பெண் குழந்தைகளின் தந்தையாக மசசூசெற்ஸ் மாநிலத்திலிருந்து ஜனாதிபதி வேட்பாளராகத் தோற்றுகிறார். மசசூசெற்ஸ் மாநில ஆளுநராகவும் பின்னர் செனட்டராகவும் கடமையாற்றிய கெரி, வியட்நாம் போரின்போது அமெரிக்க கடற்படையில் பணியாற்றியுமுள்ளவர்.

# அமெரிக்காவின் குழப்பகரமான தேர்தல் முறைமை



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மக்கள் தான் வாக்களிக்கிறார்கள். ஆனால் அது அந்த நாட்டில் அதிபருக்கு போட்டியிடுபவருக்கு அல்ல. மாநிலம் தழுவிய ரீதியில் தேர்தலமைப்புக்கெனத் தெரிவான தொகுதிவாரியான வாக்காளர்கள் மொத்தம் 538 பேர் இருப்பார்கள். இவர்களில் ஒருவருக்கு மக்கள் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தங்கள் வாக்கை வழங்குவார்கள். மக்கள் வழங்கும் வாக்குகளின் அடிப்படையில் தெரிவாகும் நாடுதழுவிய 538 பிரதிநிதிகளின் வாக்குகளில், 270 வாக்குகளையாவது பெறுகின்ற நபர் அடுத்த ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார். அமெரிக்க தேர்தல் முறைமை, விபரம் தெரியாதவர்களுக்கு, மிக இலகுவாக மக்கள் வாக்குகளை எண்ணி அதிபரைத் தெரிவு செய்யும் முறையாக வெளிப்பார்வைக்குத் தெரிந்தாலும், ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், மிக மிகக் குழப்பமான ஒரு தேர்தல் முறைமையையே அமெரிக்கா கொண்டுள்ளது என்பது தெரியவரும்.

ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தகுதி படைத்த தேர்வாளர்களுக்கே மக்கள் உண்மையில் வாக்களிக்கிறார்கள். வாக்காளர்கள் (Electors) என்றழைக்கப்படும் இந்தத் தேர்வாளர்கள், தங்களது வாக்கை ஜனாதிபதி பதவிக்குத் தோற்றும் வேட்பாளருக்கு வழங்குவார்கள். இந்த தேர்வாளர்கள் மொத்தம் 538 பேர் இருக்கிறார்கள். தேர்தல் தொகுதி மற்றும் மாநிலத்தின் மக்கள் தொகைக் கேற்ப விகிதாசார அடிப்படையில், ஒவ்வொரு மாநிலத்திற்கும் இத்தனை தேர்வாளர்கள் என ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த 538 பேரையும் Electoral College Voters என ஆங்கிலத்தில் அழைப்பார்கள். ஒரு மாநிலத்திற்கு ஆகக் குறைந்தது 3 தேர்வாளர்களாவது இருக்க வேண்டும். ஒரு மாநிலத்தின் செனட்டர் மற்றும் அரச பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்தத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது.

உதாரணமாக, மிகப்பெரிய மாநிலமான கலிபோர்னியாவில், மொத்தம் 55 தேர்வாளர்கள் இருக்கிறார்கள். கலிபோர்னியாவைத் தொடர்ந்து, 34 தேர்வாளர்களுடன் ரெக்சஸ் இரண்டாம் இடத்திலும், 31 தேர்வாளர்களுடன் நியூயோர்க் மூன்றாம் இடத்திலும் உள்ளன. இந்தத் தேர்வாளர்கள், அமெரிக்க ஜனாதிபதியையும் உப ஜனாதிபதியையும் தெரிவுசெய்ய வாக்களிப்பார்கள். 270 வாக்குகளை ஒருவர் பெற்று விட்டால் தேர்தல் இழுபறிகளின்றி, ஜனாதிபதி தெரிவாகிவிடுவார்.

அமெரிக்க தேர்தல் வரலாற்றில், இந்த 538 வாக்குகளில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று சாதனை படைத்தவராக றொனால்ட் றீகன் திகழ்கிறார். இவர் மொத்தம் 525 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார்.

- புஷ்சின் செயற்பாடும் அவர் செயற்பட்ட முறையும் கடந்த மூன்றாண்டுகளாக பலரைக் கவலை கொள்ளவைத்தன.
  - சிட்னி மோர்னிங் ஹெறால்ட் பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில்
- இஸ்லாமிய உலகம் தொடர்பான தனது நிலைப்பாட்டை புஷ் மாற்றிக் கொள்வாரென முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றனர். ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் இப்போது என்ன நடக்கிறது என்பதை நாம் பார்க்க முடிகிறது. இது நாகரிகங்களின் மோதலுக்கு வழிவகுக்கும்.
  - இந்தோனேசியாவின் இரண்டாவது பெரிய முஸ்லிம் அமைப்பான முகம்மதியாவின் பிரதித் தலைவர் டின் சியாம்சுதீன்
- ஒரு தலைப்பட்சமான நடவடிக்கையைத் தளர்த்திக் கொள்ளவேண்டும். உதாரணமாக ஈராக், பலஸ்தீனம் தொடர்பாக புதிய அணுகுமுறையை ஜனாதிபதி (புஷ்) கடைப்பிடிப்பாரென நினைக்கிறேன். இதுவே உலகத் தலைவர்கள், அணி சேரா, அமையம், இஸ்லாமிய நாடுகள் அமைப்பு என்பவற்றின் எதிர்பார்ப்பாகும்
  - அணிசேரா அமையம், இஸ்லாமிய நாடுகள் அமைப்பின் தலைவரான மலேசியப் பிரதமர் அப்துல்லா அகமட் அலவி

# வாழைச்சேனையில் இராணுவத் தளபதியின் வாகனம் மீது தாக்குதல்

## விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்

(08.11.04)

மட்டக்களப்பு வாழைச்சேனை நகரில் இன்று இடம்பெற்ற கைக் குண்டுத் தாக்குதல் மற்றும் துப் பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர் பாக விடுதலைப் புலிகளின் மட்டக் களப்பு - அம்பாறை மாவட்ட அரசி யல்துறை விடுத்துள்ள அறிக்கையில் அச் சம்பவத்திற்கு வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கை வருமாறு, இன்று காலை 11.00 மணியளவில் வாழைச்சேனை பேத்தாழை இறங் குதுறைக்கு அருகில் வைத்து கல் குடா இராணுவ முகாம் தளபதியின் வாகனத்திற்கு கைக்குண்டு வீசப் பட்டு பின் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் இந்த சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமோ தொடர்போ இல்லை எனக் கூறுகின்றோம். இச் சம்பவம் இலங்கை படைத்தரப்பின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. விடுதலைப் புலிக ளுக்கும் சிறீலங்கா படைத் தரப்பி னருக்கும் வவுணதீவு சூனிய பிர தேசத்தில் சந்திப்பு இடம்பெறும் வேளைகளில் நாம் பல தடவைகள் இவ்வாறான தாக்குதல் சம்பவங் கள் அடிக்கடி இடம் பெறுவதால் இதன் சூத்தரதாரிகள் கண்டுபிடிக் கப்பட்டு சட்டத்தின் பிடியில் சிக்க வைத்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத் துள்ளோம்.

இப்படியான தாக்குதல்களை இராணுவத்தின் மீது நடத்துவதினால் எமது சமாதான சூழலை பாதிப்ப டைய வைக்கலாம் என தேச விரோ தக் கும்பல்கள் கருதுகின்றன. இதனால் இப்பிரதேசத்தில் போர் சூழலை ஆரம்பித்து போரை மீண் டும் தொடங்குவதற்கு அந்த சக் திகள் கங்கணம் கட்டி வருவது போல் தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் சமாதான ஒப்பந்தத்தை கண்ணியமாகப் பேணி கடைப்பிடித்து வருகின்றனர். அத் துடன் இச் சமாதான சூழலை பாதிப்படையா வண்ணம் இருப்ப தற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதனை சிறீலங்கா அரசு தான் பொறுப்பேற்க வேண்டும் என அந்த அறிக்கை கூறுகின்றது. இது ஒரு புறமிருக்க இந்த சம்பவம் தொடர் பாக எமது மட்டக்களப்பு செய்தி யாளர் அனுப்பி வைத்துள்ள பிந் திய செய்தியின்படி, கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற போது 23-2 இராணுவ படைப் பிரிவின் கட் டளை அதிகாரி கேணல் டபி ள்யூ.எம்.எஸ்.குணரத்னவின் வாகனம் அவ் வழியாக சென்றுள் ளது, இருப்பினும் வாகனத்தில் அவர் இருக்கவில்லை. இந்த தாக்குதல் சம்பவத்தின் போது அவரது வாக னத்தில் முன் பக்க கண்ணாடியில் துப்பாக்கிச் சூடு பட்டுள்ளது. வெடித்து சிதறிய குண்டின் சிதறல்களாலும் வாகனத்திற்கு சேதமேற்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

இதேவேளை, வாழைச்சேனை யில் இன்று இடம் பெற்ற கைக் குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோக சம்பவம் குறித்து போர் நிறுத்த கண்காணிப்புக் குழு நேர டியாக விசாரணைகளை ஆரம்பித் துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக ஈ.பி டி.பி யினராலும் 23-2 வது படைப் பிரிவு கட்டளை அதிகாரி கேணல் டபிள்யூ.எம்.எஸ். குணரத்தினவினா லும்? தனித்தனியாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் புகார் கள் செய்யப்பட்டுள்ளன. தினமுரசு பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த தமது உறுப்பினர்களான கண்ணன், சீலன் ஆகியோர் மீது இந்த தாக் குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஈ.பி. டி.பி தனது புகாரில் கூறுகின்றது. இது தொடர்பாக இராணுவம் வெளி யிட்டுள்ள உத்தியோகபூர்வ தகவ லொன்றில் இதற்கு யார் பொறுப்பு என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை.




தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் 50வது அகவை நிறைவை முன்னிட்டு

பிரான்ஸ் தமிழ் மாணவர்களின் எழுத்துத் திறனை ஊக்குவிக்கும் முகமாக...

பிராங்கோ-தமிழ் மாணவர் அமைப்பு

நடாத்தும்

எழுத்துத்திறன் போட்டி

21-11-2004 ஞாயிற்றுக்கிழமை

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் 50வது அகவை நிறைவையொட்டி, பிராங்கோ-தமிழ் மாணவர் அமைப்பினால், பிரான்ஸ் தமிழ் மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் முகமாக இவ் எழுத்துத்திறன் போட்டி ஒழுங்கு செய்யப்படுகின்றது.

எழுத்துத்திறன் போட்டி



"எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக, ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக அறிவு ஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மானிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்.

21-11-2004 ஞாயிற்றுக்கிழமை

நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்



மணமகன் தேவை

ஜேர்மனியில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள 42–45 வயதிற்கு இடைப்பட்ட மணமகன் தேவை மேலதிக விபரங்களிற்கு

02323917451



சுவிஸ் லவுசான் மாநகரில்....

JAFFNA TRAVEL

SWISS

தமிழர்களுக்கென்று தமிழர்களால் நடாத்தப்படும் பிரயாண ஒழுங்குச்சேவையின் மூலம் உலகெங்கும் மலிவுவிலையில் பறந்து வர உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுவர விமானம், மற்றும் பஸ்சேவைகளும் எம்மால் ஒழுங்குசெய்து தரப்படும்.



அலுவலகம் திறந்திருக்கும் நேரம் :

| | | |
|---|---|---|
| திங்கள் - வெள்ளி | : | 09.00 - 18.00 |
| சனி | : | 09.00 - 12.00 |



மேலதிக விபரங்களுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.


JAFFNA TRAVEL

Av, de Morges 171
1004 Lausanne
Switzerland.
email:
jaffnatravel@hotmail.com

Tel: 021 624 08 10
Tel: 021 624 13 10
Tel: 021 624 11 50

திரைப் பார்வை

# 4 ஸ்ருடன்ட்ஸ்



இந்தக் கருப்பொருள் சார்ந்து பேசிய திரைப் படங்கள் பல முன்னரும் வெளிவந்திருக்கின்றன. ஆனாலும் இவற்றில் கருத்தியல் அடிப்படையில், இச்சிக்கல் நேர்த்தியான முறையிலோ அன்றி நேர்மையுடனோ அணுகப்ப டவில்லை. சரியானதும் நடுநிலையானதுமான பார்வை பதிவுக்குள்ளாக்கப்படவில்லை. மாறாக அவை தனிமனித சாகசத்தை (கதாநாயகனின் தன்னாற்றல்) நிலை நாட்டவே பயன்பட்டன. அரைவேக்காட்டுத் தனமான வெளிப்பாடுகள் என்றே இவற்றை மதிப்பிடவும் வரையறுக்கவும் முடியும்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் தமிழ்த் திரைப் படங்களில் தமிழனின் வாழ்வு பேசப்படுவதில்லை. தமிழனின் பண்பாட்டு அடையாளங்கள் பதிவுக்குள்ளாவதில்லை. தமிழ்ச் சமூக வாழ்வியலில் எதிர்கொள் ளப்படும் சிக்கல்கள் அணுகப்ப டுவதில்லை. இவை பல சமூகப் பிரக்ஞையுடையவர்கள் முன்வைக் கிகின்ற நியாயமான குற்றச்சாட்டு. இந்த அவலம் ஒருபுறமிருக்க, திரைப்படங்களின் பெயர்கள் கூட தமிழில் அமைவதில்லை. ஆங்கிலப் பெயர்களே தலைதூக் கியுள்ளன என்பதும் பேரவலம். அத்தோடு தம், குத்து, தூள், தில், சுள்ளான், கில்லி என்று சிறுபிள்ளைத்தனமான தலைப்புகளுடன் இளைஞர்களைச் சீரழிக்கும் கதைப்போக்குடன் தான் பெரும்பாலும் இன்றைய தமிழ்த் திரைப்படங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் அண்மையில் வெளிவந்த ஓட்டோகிராப் (Autograph) மற்றும் போர் ஸ்ருடன்ட்ஸ் (4Students) ஆகிய திரைப்படங்கள் ஆங்கிலப் பெயருடன் வெளிவந் தவையாகவிருந்தாலும், அவை சிறந்த கதைப் போக்கினைக் கொண்டவை. இவற்றை விதி விலக்கு என்ற வரையறைக்குள் அடக்க முடியும். அந்த வகையில் ஆங்கிலப்பெயர் தாங்கி வந்திருந்தாலும் நல்ல திரைப்படம் என்ற காரணத்தால் இக்கட்டுரை மூலம், 4 ஸ்ருடன்ட்ஸ் திரைப்படம் பற்றிய எனது சில கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

இது 'For the people' (மக்களுக்காக) என்ற தலைப்புடன் மலையாளத்தில் உருவாக்கப்பட்டு தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டது என்பது கூடுதல் கவனத்திற்குரியது. மலையாளத்தில் பிரசித்தி பெற்ற திரைப்பட இயக்குனரான ஜெயராஜ் இதனை எழுதி இயக்கியுள்ளார். இவர் மலையாளத்தில் இருபதுக்கும் அதிகமான திரைப்படங்களை நெறியாள்கை செய்த அனுபவமுள்ளவர். அது மட்டுமல்லாமல் சிறந்த திரைப்பட நெறியாள்கைக்கான தேசிய விருதினை வென்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நாட்டில் தலைவிரித்தாடும் கொடுமையான சமூக அநீதி மீதான அழுத்தமான பதிவாக '4 ஸ்ருடன்ட்ஸ்' திரைப்படத்தினைக் கொள்ள முடியும். சமூகத்தில் தாண்டவமாடும் ஊழல் என்ற சமூக அநீதியே இத்திரைப்படத்தின் மையக்கரு.

இந்தக் கருப்பொருள் சார்ந்து பேசிய திரைப்படங்கள் பல முன்னரும் வெளிவந்திருக் கின்றன. இந்தியன், ரமணா, சிற்றிசன், சாமுராய் என்பன அண்மைய எடுத்துக்காட்டுக் களாகும். ஆனாலும் இவற்றில் கருத்தியல் அடிப்படையில், இச்சிக்கல் நேர்த்தியான முறையிலோ அல்லது நேர்மையுடனோ அணுகப்பட வில்லை. சரியானதும் நடுநிலை யானதுமான பார்வை பதிவுக்குள் ளாக்கப்படவில்லை. மாறாக இவை தனிமனித சாகசத்தை (கதாநாயகனின் தன்னாற்றல்) நிலை நாட்டவே பயன்பட்டன. அரைவேக்காட்டுத்தனமான வெளிப்பாடுகள் என்றே இவற்றை மதிப்பிடவும் வரையறுக்கவும் முடியும்.

மேற்கூறிய திரைப்படங்களின் போக்கானது, மக்கள் மத்தியில் அநீதிகளுக்கெதிராகப் போராடு கின்ற சிந்தனையை வளர்க்கும் நோக்கத்தை அடிப்படையில் கொள்ளாதவை. சுருங்கக்கூறின் மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கின்ற வகையில் அமைந்தவை. அநீதிகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்தால் அழிந்து விடுவாய் என்ற பீதி உணர்வை விதைப்பதாய் இவற்றின் செல்நெறி இருந்தது என்றுதான் கூறவேண்டும்.

இவற்றோடு ஒப்பிட்டு நோக்குகையில் '4 ஸ்ருடன்ட்ஸ்' பல வழிகளிலும் மாற்றம் கருதிய முற்போக்கான கருத்தியல் கொண்ட திரைப்படமாக உருவாக்கப்பட்டிருக்கின்றது எனலாம். இளைஞர்களின் சக்தியென்பது மிகப் பெரியது. இவர்கள் இயல்பிலேயே ஆளுமை வீச்சும், ஆற்றலும் துணிவும் கொண்டவர்கள். அதன் அடிப்படையில் இத்திரைப் படத்தின் கதை நாயகர்கள், அதனை நகர்த்திச் செல்பவர்கள் நான்கு இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள். இவர்களின் பாத்திரங்கள் ஒட்டுமொத்த இளைஞர் சமூகத்தின் குறியீடாக படைக்கப்பட்டிருக்கின்றமையைச் சிறப்பம்சமாகக் கூறலாம். கொலை, கொள்ளை, அரசியல் அடாவடித்தனம் போன்ற தான்தோன்றித் தனங்களின் அவலங்களை எடுத்துரைக்கும் பத்திரிகைச் செய்திகள் மீது கமராவின் கண்கள் குவிக்கப் பட்டு திரைப்படம் தொடங்குகின்றது. நான்கு மாணவர்களும் தம்மை யாரென்று வெளியில் காட்டிக்கொள்ளாமல், முகம் மறைத்து சமூக விரோதிகளைத் தண்டிக்கும் நடவடிக்கையில் இறங்குகின்றனர்.

மனிதாபிமானத்திற்கும் மனிதநேயத்திற்கும் மதிப்பளிக்க வேண்டிய வைத்தியர்களின் பணத்தாசைக்கு வேட்டு வைக்கும் வகையில் இவர்களின் முதலாவது தாக்குதல் அமை கின்றது. ஏழை நோயாளியொ ருவரின் சத்திரசிகிச்சைக்காக இலட்சக்கணக்கில் இலஞ்சம் கேட்டு, அந்நோயாளியை புறக்கணித்து சாகடித்த வைத் தியரின் கைகள் வெட்டப்பட்டு தண்டனை நிறைவேற்றப்படு கின்றது. இது போன்று ஊழல் வெறியாட்டத்தில் வறிய மக்களின் வயிற்றில் அடிக்கும் சுங்கத்துறை அதிகாரி மற்றும் அடாவடித்தனம் புரியும் அரசியல்வாதிகளும் இவ்வாறு தாக்கப்பட்டு தண்டிக் கப்படுகின்றனர். இதுபோல் எங்கு அநீதி நடந்தாலும், எங்கு அக்கிரமம் நடந்தாலும் எங்களது www.4thepeople.com என்ற அமைப்பு நடவடிக்கை எடுக்கும் என்று சம்பவ இடத்தில் எழுதி விட்டு தலைமறைவாகி விடுகின்றார்கள் இந் நால்வரும்.

சமூக விரோதிகள், அநீதியா ளர்கள், இலஞ்ச, ஊழல் வெறியாட்டம் புரிவோர் பற்றிய விபரங்களை பாதிக்கப்பட்ட மக்கள் இணையத்தளத்தினூடாக (மின்னஞ்சல்) மாணவர்களுக்கு தெரியப்படுத்தி முறையிடுவதாக காட்சிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. இங்கு ஒரு முக்கியமான முரண்பாடான வினா எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அதாவது, ஏழை மக்களுக்கு, சமூக அவலங்களுக்கு முகம் கொடுக்கும் கீழ்த்தட்டு மக்களுக்கு மின்னஞ்சல் மூலம் முறைப்பாடுகளை முன்வைக்கும் வசதியை யார் செய்து கொடுத்தார்கள் என்பதே தொக்கி நிற்கும் அந்த வினாவாகும். ஆனாலும் இங்கு மக்கள் நலனையும் சமூகத்தின் மேம்பாட்டினையும் இலட்சியமாக வரித்துக்கொண்டு போராடும் இளைஞர் சமூகத்தினை வெளிப்படுத்தியமையே முக்கியத்துவம் பெறுகின்றது என்பதால் அந்தக் கேள்வியை விட்டு விடலாம் என்றே தோன்றுகின்றது.

அதிரடியானதும் சாதுரியமா னதுமான முறையில் சமூக விரோதிகள் மீது தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. அத்தோடு அவர்களின் குற்றங்கள் தகுந்த ஆதாரங்களுடன் மக்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றது. அதனால் உயிரைப் பணயம் வைத்து மக்கள் நலனுக்காகப் போராடும் இம்மாணவர்களுக்கு மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் வளர்கின்றது. இவ்வாறான வன்முறைக் குழுக்களை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால், காலப்போக்கில் அவை தீவிரவாத அமைப்பாக வளர்ந்துவிடும் என்ற அரசாங்கத்தின் கருத்துக்கமைய காவல்துறையினர் மாணவர்கள் மீதான தேடுதல் வேட்டையில் இறக்கப்படுகின்றனர். இவ்வாறான மர்மமான நடவடிக்கையின் பின்னணியில் யார் இயங்கக்கூடும் என்பதை அறிய முடியாமல் காவல்துறையினர் திணறுகின்றனர். இளைஞர்கள் நால்வரும் காவல் துறையினரின் கண்களில் விரலை விட்டு ஆட்டி தமது போராட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுக் கின்றனர்.

ஆயினும் காவல் துறையினரின் நீண்ட நாள் தேடுதல் வேட்டையின் பின்னரும் ஆய்வுகளின் பின்னரும் சில உண்மைகள் கண்டறியப்ப டுகின்றன. மாணவர்கள் தான் புரட்சிக்கு அடித்தளமிடுபவர்கள், மாணவர்கள் மத்தியிலிருந்து தான் புரட்சி கருக்கொள்கின்றது, அங்கிருந்து தான் புரட்சி பிறக் கின்றது என்ற உண்மை யதார்த்தத்தின் அடிப்படையில் மாணவர்கள் தான் இதன் பின்னணி சக்தி என்பதை காவல் துறை அறிந்து கொள்கின்றது. அரசியல்வாதிகளின் பதவி மோகம், சுயநல அரசியல் என்பன நாட்டைச் சீரழிவில் தள்ளுவதால் தான் இவ்வாறான வன்முறைப் போராட்டங்கள் உருப்பெறுகின்றன. சுருங்கக் கூறின் அரசியல் வன்முறைகளால் ஒடுக்குமுறைகளால் பாதிப்பிற் குள்ளான மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் உரிமைகளை மீட்பதற்குமே மக்கள் மத்தியிலிருந்து போராட்டங்கள் வெடிக்கின்றன என்ற யதார்த்தம் இதில் தெட்டத்தெளிவாக பதிவுக் குள்ளாகியுள்ளது. இவ் இளைஞர் களின் குடும்பப் பின்னணிகூட தேசப்பற்றும் தேசிய உணர்வும் சமூக அக்கறையும் கொண்ட அதற்காக அர்ப்பணிப்புடன் போராடிய பின்னணியைக் கொண்டதாகவே வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது.

ஒரு இளைஞனின் தமையன் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முனைப்புடன் போராடி காவல் துறையினால் கொல்லப்பட்ட பின்னணி. அடுத்த இளைஞனின் தந்தை காவிரி நீர்ப் போராட் டத்தில் ஏழை விவசாயிகளின் குரலாய் ஒலித்து உயிர் நீர்த்த பின்னணி. இவ்வாறாக ஒவ்வொரு போராளியினதும் குடும்பப் பின்னணியானது, அரசியல் வாதிகளினதும் சமூக விரோதிக ளினதும் காட்டுமிராண்டித்தனத் தால் சீரழிக்கப்பட்ட வரலாற் றினைக் கொண்டது. இத்திரைப் படத்தில் கவனத்தைக் குவிக்கின்ற சிறப்பம்சம் என்னவெனில், நான்கு இளைஞர்களும் காவல்துறையினரின் பிடியில் சிக்கிய தருணத்தில் இவர்கள் தாங்கி நின்ற இலட்சியங்களை நிறைவேற்றும் பொறுப்பினை வேறு நால்வர் (சக மாணவர்கள்) கையேற்பதாய், போராட்டத்தைத் தொடர்வதாய் அமைந்த அந்த இறுதிக் காட்சிகளாகும்.

இளைஞர்களின் மனங்களில் சமூக அக்கறையைத் தட்டி யெழுப்பும் வகையிலும் அநீதிகளுக்கெதிராக விழிப்புணர் வுடன் கிளர்ந்தெழுகின்ற மனோதிடத்தினை விதைக்கின்ற வகையிலும் இத்திரைப்படம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. வழமையாக இவ்வகையான பேசுபொருளோடும் புரட்சி முழக்கங்களைப் போர்த்திய படியும் தமிழகத்திலிருந்து வெளிவரும் திரைப்படங்கள் சொல்லத் துணியாத செய்தியை, இம்மொழிமாற்றப்படம் சொல்லியிருக்கின்றது என்பதே, என்னை இத்திரைப்படம் பற்றிய பார்வையைப் பதிவு செய்யத் தூண்டியது.

இவ்வாறான வன்முறைக் குழுக்களை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால், காலப்போக்கில் அவை தீவிரவாத அமைப்பாக வளர்ந்துவிடும் என்ற அரசாங்கத்தின் கருத்துக்கமைய காவல்துறையினர் மாணவர்கள் மீதான தேடுதல் வேட்டையில் இறக்கப்படுகின்றனர். இவ்வாறான மர்மமான நடவடிக்கையின் பின்னணியில் யார் இயங்கக்கூடும் என்பதை அறிய முடியாமல் காவல்துறையினர் திணறுகின்றனர்.

ரூபன் சிவராஜா

# இந்தியக் கடலில் சிறீலங்கா....

(01ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காண்பது உட்பட பல்வேறு விடயங்களில் இருநாட்டுத் தலைவர்களும் இணங்கியுள்ளனர்.

பலாலி விமானத்தளத்தை புனரமைப்பது தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைசாத்திடப்படும். அத்துடன் பலாலி விமானத் தளத்தில் இந்திய விமானங்கள் இறங்கிச் செல்வதற்கும் உடன்பாடு காணப்பட்டுள்ளது. இவற்றைவிட சிறீலங்காக் கடற்படையினரின் சயூரா என்ற கப்பலை இந்தியக் கடற்பகுதியில் நிறுத்தி கடற்கண்காணிப்பில் ஈடுபடுவதற்கும் இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. அத்துடன்



மீனவர்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட இருநாடுகளுக்கும் இடையிலான இணைந்த செயற்குழு அடிக்கடி சந்தித்துப் பேசுவதெனவும், இந்திய மீனவர்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும் எனவும் இந்தியத் தரப்பில் விதிக்கப்பட்ட நிபந்தனையை சிறீலங்கா ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கையில் பல்லினச் சமூகங்கள் வாழ்ந்து வருவதால் இலங்கையின் இறைமை ஐக்கியம் ஒருமைப்பாட்டுக்குள் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் எனவும் ஜனநாயகம் தனிமனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தியுள்ளது. அத்துடன் இலங்கையின் பாதுகாப்பு, பிரதேச ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றில் இந்தியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. சகல விதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும், புதிய பயங்கரவாதக் குழு உருவாகுவதை எதிர்ப்பதாகவும் இருநாடுகளும் தெரிவித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்தியா சென்றிருந்த சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான குழுவினர் இந்திய உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியிருந்தனர். இவர்களுக்கிடையே நிகழ்ந்த சந்திப்பு தொடர்பான விடயங்கள் வருமாறு, ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த புதன்கிழமை இந்திய தலைநகர் புதுடில்லியை சென்றடைந்த சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, கடந்த வியாழக்கிழமை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேசியிருந்தார். அத்துடன் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், காங்கிரஸ் கூட்டணியின் தலைவி சோனியா காந்தி மற்றும் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் ஆகியோர் உட்பட பல முக்கிய பிரமுகர்களையும் சந்தித்துப்பேசியுள்ளார். சந்திரிகாவுடன், அவரது வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரும் இந்தியா சென்றிருந்தனர்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் கடந்த வியாழக்கிழமை சந்திரிகா விரிவான பேச்சுவார்த்தையை மேற்கொண்டார். தனது அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாகவும், ஆனால், புலிகளிடமிருந்தே அதற்கு எதிர்ப்பு இருப்பதாகவும் அதனாலேயே பேச்சுக்கு முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டிருப்பதாகவும் குற்றச்சாட்டை மன்மோகன் சிங்கிடம் சந்திரிகா முன்வைத்தார்.

இதன்போது, `எந்த விடயத்தையும் எந்த நேரத்திலும்' கலந்துரையாட இந்தியா தயாராக இருப்பதாக மன்மோகன்சிங் சந்திரிகாவிடம் உறுதியளித்திருக்கிறார். இதேவேளை, சமாதான நடவடிககைகளின் தற்போதைய நிலமை குறித்து சந்திரிகாவிடம் கேட்டறிந்த இந்தியப் பிரதமர், ஐக்கிய இலங்கைக்குள் பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாடு காண இந்தியா தயக்கமின்றி ஆதரவு வழங்குமென உறுதியளித்திருக்கிறார்.

இதேவளை, இச்சந்திப்பின் பின்னர் பிறிதொரு நிகழ்வில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், இலங்கை விடயத்தில் அரசியல் ரீதியான தலையீடோ அல்லது இராஜதந்திர ரீதியான நடவடிக்கைகளையோ இந்தியா தலையிடமாட்டாது என திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் இந்தியா நேரடியான பங்களிப்பை வழங்க வேண்டுமென ஜே.வி.பி. உட்பட பலதென்னிலங்கையிலுள்ள பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உட்பட அரசியல்வாதிகள் அனைவரிடமிருந்தே கோரிக்கை எழுந்துள்ள நிலையில், `அழைப்பு விடுத்தால் ஜனநாயக பன்மைத்துவத்தை வலுப்படுத்த மட்டுமே இந்தியா முன்வரும்' என்ற பதில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடமிருந்து கிடைத்திருக்கிறது.

`இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை நிறுவனம் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய் மன்மோகன் சிங், இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக நேரடியாக கருத்தெதனையும் தெரிவிக்கவில்லை. இந்த நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரித்தானிய முன்னாள் பிரதமர் ஜோன் மேஜர், அமெரிக்க முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஹென்றி கிசிங்கர் உட்பட பல உலகத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

`உலகில் ஜனநாயகத்தை வலுப்படுத்த எவ்வாறு நாம் பங்களிப்பினை மேற்கொள்ள முடியுமென்பது குறித்து எனது கருத்துக்களை உங்கள் முன்னால் தெரிவிக்கிறேன். இராஜதந்திர ரீதியான செயற்பாட்டை நான் ஆதரித்து கருத்துக் கூறவில்லை. அத்துடன், அரசியல் ரீதியான தலையீட்டையும் இந்தியா ஆதரிக்கவில்லை' என்று மன்மோகன் சிங் தெரிவித்தார்.

ஒவ்வொரு நாட்டினதும் இறையாண்மை உரிமையை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. ஆயினும், ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தவும் பன்மைத்தன்மையை உள்வாங்கிக் கொள்ளவும் எமது அனுபவம் உதவும் என்று நம்புகிறேன். பன்முகத்தன்மையை உள்வாங்குதலும், பல்லின கலாசாரத் தன்மையும் என்ற கட்டமைப்புக்குள் வளர்ச்சி காண நாம் முயற்சிக்கின்றோம். இந்த அனுபவத்தையே உலகத்துடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம் என்றும் மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியா - சிறீலங்கா அரசுகளுக்கிடையில் பாதுகாப்பு உடன்படிக்கை ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடவுள்ளதாகவும் சந்திரிகாவின் பயணத்தின் போது இந்த உடன்படிக்கை கையொப்பம் இடப்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதன் கால எல்லை பிற்போடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இந்த உடன்படிக்கையில் கையொப்பமிடும் நோக்கத்துடன் சந்திரிகாவின் இந்தியப் பயணம் அமைந்திருந்தது எனினும் கையொப்பமிடாமலே சந்திரிகா திரும்பிவந்துள்ளார். அதேசமயம், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.தீக்சித்துடன் இந்த ஒப்பந்தம் தொடர்பாக சந்திரிகா நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார். வியாழக்கிழமை மாலை 7.30 மணியளவில் இருவரிருக்குமிடையில் ஆரம்பித்த பேச்சுவார்த்தை சுமார் 4 மணித்தியாலங்கள் வரை இடம்பெற்றதாக தெரியவருகின்றது.

இந்தியப் பிரதமருடனான சந்திப்பின் பின்னர் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை ஜனாதிபதி சந்தித்தார். பல வருடங்களாக நேரு காந்தி குடும்பத்திற்கும் பண்டாரநாயக்க குடும்பத்திற்கும் இடையில் இருந்து வரும் நட்புறவை இருவரும் நினைவு கூர்ந்தனர், பின்னர் சமாதான முயற்சிகள் பற்றி ஜனாதிபதியிடம் சோனியா காந்தி விபரமாகக் கேட்டறிந்தார். இந்தச் சந்திப்பின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சிறீலங்காத் தூதுவர் மங்கள முனசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா ராஷ்ரபதிபவனில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக சிறீலங்கா ஜானாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலைகுறித்து இந்திய ஜனாதிபதி விசேட ஆர்வம் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மன்மோகன் சிங்கிடம் விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கு வரவில்லை என குற்றம்சாட்டியிருந்த சந்திரிகா, அப்துல் கலாமுடன் பேசியபோது, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். கடந்த 20 வருட காலப் பகுதியில் தற்சமயம் அமுலுக்குவந்த யுத்த நிறுத்தம் கடந்த மூன்று வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். அத்துடன் தமது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் விடுதலை குறித்து தமது நீதித்துறையினர் முன்னுரிமை வழங்குவர் என்று சந்திரிகா இந்திய ஜனாதிபதிக்கு உறுதியளித்தார்.

இந்திய - சிறீலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக தானும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் மற்றும் ஆலோசகர் டிக்சிற் ஆகியோருடன் விரிவாக ஆராய்ந்திருப்பதாகத் தெரிவித்த சந்திரிகா, ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகும் என்றார்.

வடக்கு - கிழக்கு புனரமைப்பு நடவடிக்கைகள் தனது நேரடியான மேற்பார்வையின் கீழ் கொண்டு வருவதாகவும் வடக்கு, கிழக்கு மாகாணசபைகள் ஊடாக அந்தப் பிரதேசங்களில் சுமுகநிலையைக் கொண்டு வருவதில் முனைப்புடன் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா இந்தியத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தியிருக்கிறார் என்றும், விரைவில் பாதுகாப்பு



உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்னும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்திருக்கிறது.

இறுதியாக, சிறீலங்கா - இந்திய சந்திப்புக்கள் தொடர்பாக கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கயில் தெரிவிக்கப்பட்டிருந்த சில விடயங்கள் வருமாறு,

- சர்வதேச மட்டத்தில் இருநாடுகளுக்குமிடையில் இருந்துவரும் பாரம்பரிய ஒழுங்கு மனப்பான்மை இந்த விவாதங்களின்போது மீளவும் உறுதிப்படுத்தப்பட்டது. பயங்கரவாதத்தை அதன் எல்லாவித தோற்றப்பாடுகளிலும் எதிர்ப்பதென்பதில் இரு நாடுகளும் உறுதிப்பாட்டுடன் இருப்பது வெளிப்படுத்தப்பட்டது.

- உலக அளவில் தோன்றுகின்ற சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில் ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்புரிமை உட்பட அவசரமாகத் திருத்தியமைக்கப்பட்டு விஸ்தரிக்கப்படவேண்டும் என்பதிலும் ஒருமித்த கருத்து நிலவியது. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்புரிமை கோருவதை ஆதரித்திருப்பதற்காகப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. உலக வர்த்தக ஸ்தாபனம் உட்பட வேறு உலக நிறுவனங்களிலும் இருதரப்புகளும் ஒத்துழைப்புடன் செயற்பட இணங்கியுள்ளன.

- இலங்கையில் உல்லாசப் பயணிகள் அதிகரிப்பதற்கு உதவும் இரண்டாவது நாடாக இந்தியா இருந்துவருவதும், இந்தியாவில் பல்வேறு நகரங்களுக்குமான சிறீலங்கா விமான சேவை வாரத்தில் 77ஆக அதிகரித்திருப்பதும் கருத்திற்கொள்ளப்பட்டது. இந்தச் சேவைக்குள் பெங்களூர், ஹைதராபாத் மற்றும் புத்தகாயா ஆகிய நகரங்கள் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டன.

- இலங்கை கிராமியக் கட்டுமானப் பணிகளுக்கென இந்தியா வழங்க உறுதியளித்துள்ள 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்த முடிவுசெய்யப்பட்டது. இலங்கையின் தென்பகுதியிலும், வடக்கு - கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் தொழில் பயிற்சி நிலையங்களை உருவாக்குதல், கிராமங்களிலுள்ள இணைப்பு வீதிகள், நீர்வழங்கல் அபிவிருத்தித் திட்டங்கள், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், கிராமியத் தொலைபேசி வசதிகள், அனுராதபுரத்துக்கும் திருகோணமலைக்கும் இடையிலான நெடுஞ்சாலையைச் செப்பனிடல் ஆகியவற்றுக்கு அந்த நிதியைப் பயன்படுத்துவதென இணங்கப்பட்டது. அனுராதபுரம் - திருகோணமலைப் பாதை ராஜீவ் காந்தி நெடுஞ்சாலையெனப் பெயரிடப்படும்.

- 2004 ஒக்ரோபர் 15ம் திகதி கையெழுத்தான பெற்றோலியப் பொருள்கள் கொள் முதலுக்கான 15 கோடி அமெரிக்க டொலர் கடனை செயற்படுத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

- மின்சக்தி துறையிலான ஒத்துழைப்புகளை துரிதப்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராயப்பட்டது.

- தற்பொழுது ஆலோசனையில் இருந்து வரும் மீன்பிடித்துறை தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கான செயற்பாடுகளைத் துரிதப்படுத்தவும் இரு தரப்பும் இணங்கியுள்ளன. தற்பொழுது பிடித்துவைக்கப்பட்டுள்ள மீனவர்களை மனிதாபிமானத்தோடு நடத்தவும், அவர்களை விடுவிப்பதை விரைவுபடுத்தவும் இணங்கப்பட்ட அதேசமயம், இது தொடர்பான கூட்டுப்பணிக்குழுவொன்றை அமைக்கவும் தீர்மாணிக்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)



சிறுகதை

# எரிந்த சிறகுகள்

முகில்களின் கைகளும் கால்களும் நீண்டு படர்ந்து கறுக்கத் தொடங்கின. அம்மாவின் முகமும் அது போலவே. எடி பிள்ளை இந்த தேங்காய் மட்டைகளை எடுத்து அடுக்கு. இந்த சனியன் பிடிச்ச மழை எப்பவரும், எப்ப போகும் என்றும் தெரியாது. இந்த அம்மாவுக்கு மழையை திட்டத்தான் தெரியும். பாவம் மழை. முந்தி நாங்கள் சிலேற் காயவேணும் எண்டாலும் 'மழை போ! வெய்யில் வா' எண்டுதானே பாடுறனாங்கள்.

நான் கத்துறது உனக்கு கேக்கேல்லையே?

இதை எங்க அடுக்கினாலும் நனையத்தானே போகுது. அதைவிட இதிலேயே கிடந்து நனையட்டும்.

உனக்கு நல்லா வாய் கூடிப்போயிற்றுது. எல்லாம் உன்ரை அப்பா தர்ற செல்லம்.

சே இந்த அம்மாவுக்கு ரசனையே இல்லை. எப்ப பார்த்தாலும் மழையை பேசிக்கொண்டே இருப்பா. பிறகு தண்ணி இல்லை யெண்டும் அழுது கொண்டு இருப்பா. மழையைக் கண்டா மரம், செடி, கொடி எல்லாம் மகிழும். இந்த மண்ணும் மழையை சேர்த்துவைத்துக் கொண்டு எனக்காக காத்திருக்கும். நானும் என்ரை சொந்தக் கிணற்றில சுகந்தி, ராகினி, கமலா மாதிரி அள்ளி அள்ளி குடிப்பன், குளிப்பன். தண்ணி எண்டு கேட்டு வாறா எல்லாரையும் நீங்களே அள்ளிக்கொண்டு போங்கோ எண்டுதான் சொல்லுவன். அவையள் என்னைக் கண்டா வேணுமெண்டு தங்கட துலாவில தொங்கி தொங்கி அள்ளுவினம். எனக்கும் ஆசையாக இருக்கும். நானும் எப்பவாவது ஒருநாள் அவையள் மாதிரி துலாவில தொங்கி தொங்கி அள்ளவேணும். நான் பார்க்கிறது தெரிஞ்சா இன்னும் கொஞ்சம் கூட தொங்குவினம். ஒரு நாளைக்கு இந்த கயிற்றை தொட்டுப் பார்க்கவேணுமெண்டு ஆசை துளிர் விடும். ஆனால் சரஸ்வதி பூஜை அன்று நடந்ததை நினைச்சா துளிர்த்த வேகத்தில கருகி விழும்.

பாவம் சிவராசா, நானும் அமுதாவும்தான் கேட்டனாங்கள். எங்களாலதானே அவன் இப்ப பள்ளிக்கூடத்துக்கு வாறதே இல்லை. அதுக்கு பிறகு இந்த துலாவை பார்க்கிற நேரமெல்லாம் ஆறுமுக வாத்தியரின்ட கோபமுகமும் சிவராசாவின்ர சிவந்த முகமும்தான் ஞாபத்தில வரும். மனுசரின்ர தோற்றத்துக்கும் அவையளுக்கும் சம்பந்தமே இருக்காதெண்டு வாத்தியாரைப் பார்த்துதான் எனக்கு தெரிஞ்சது. ஏன் என்ரை அப்பாவையும்தான். ஊத்தை துரை எண்டுதானே என்ரை அப்பாவை எல்லாரும் கூப்பிடுவினம். அதுக்குள்ள இருக்கிற வெள்ளை மனசை ஆருக்கும் தெரியாது ஆனா எனக்கு மட்டும் இல்லை, என்ரை அம்மாளாச்சிக்கும் தெரியும்.

அண்டைக்கெண்டு பார்த்து கிணத்தில தண்ணி எடுத்துத் தர ஆரும் இல்லை. அப்பவும் ஆறுமுகவாத்தியார் சொல்லுவார்- எடி பெடிச்சியள் வாளியில முட்டாமல் குடியுங்கோ.

இவர் டாப்பு கூப்பிடேக்க மட்டும்தான் எங்கட பெயரை சொல்லுவார். அண்டைக்கும் இப்பிடித்தான் தேவிகா எண்டு கூப்பிட்டுட்டு. ஏனடி உன்ரை கொப்பர் நல்லா படம் பார்ப்பாரோ?.


ஏன் இப்பிடி கேட்கிறார்? எனக்கு அன்று விளங்கவே இல்லை. ஆனா வகுப்பில எல்லாரும் சிரிச்சவை. அதிலேயும் சுகந்தியின்ரை சிரிப்பு தனிச்சு கேட்டது. ஆனா நான் அழுததை பார்த்து அமுதாவும் அழுதவள். வாத்தியாருக்கு வெக்கையா இருந்தா பிள்ளையள் வாங்கோ இண்டைக்கு மாமரத்துக்கு கீழ இருந்து படிப்பம் எண்டு சொல்லிவிட்டு என்னையும் அமுதாவையும்தான் அவரின்ர கதிரையை தூக்கிக் கொண்டு வரச்சொல்லுவார். பிறகு மகாபாரதக்கதை சொல்லுவார். அவர் கதை சொல்லேக்க எனக்கு வாத்தியார் சகுனிமாதிரி, துரியோதனன் மாதிரித்தான் தெரிவார். ஆனா இதே கதையை வைகுந்தசாமி வாத்தியார் சொல்லேக்க அவர் கர்ணன் மாதிரி, தருமன் மாதிரி இருப்பார். அவர்தான் இந்த பள்ளிக்கூடத்துக்கு அதிபர். எங்களை பெயர் சொல்லித்தான் கூப்பிடுவார். சில நேரத்தில 'இங்' முடிஞ்சு போயிற்றா தன்ரை பேனாவை தருவார். இப்ப அவரின்ர இடத்தில எனக்கு பிடிக்காத இவர். உண்மையான அதிபர் எப்ப வருவார்? எனக்குள் இக்கேள்வி எழுந்து கொண்டே இருக்கும்.

வகுப்பு தொடங்கி விட்டதுக்கு அடையாளமா ஆறுமுக வாத்தியார் நமச்சிவாய பதிகம் சொல்ல தொடங்கிவிடுவார். எல்லாரும் கத்திக் கத்திப் பாடுவினம். ஆனா எனக்கு அந்தப் பாட்டு பாடவே பிடிக்காது. இது செத்த ஆட்களுக்கு படிக்கிற தேவாரம் எண்டு பயம். ஆனா அவர் பாடேக்க, எத்தனை பிறப்புக்கு பிறகு கிடைச்சபிறப்பு இந்த மனுசப் பிறப்பு என்று மனதுக்க எண்ணிக் கொண்டே இருப்பன். அவரும் கண்ணை மூடிக்கொண்டு, 'எல்லோரும் ஏற்கப் பணிந்து' என்று சொல்லேக்க நல்லவர் மாதிரித்தான் தெரிவார். வாத்தியாரின்ர வெள்ளை வேஷ்டியும், நஷனலும், கழுத்தை சுற்றி பாம்புமாதிரி இருக்கிற சால்வையும் அந்த சால்வை மடிப்பு விரிஞ்சா நாக பாம்பு படம் விரிச்ச மாதிரி இருக்கும். அதை தொட்டு பார்க்க வேணும் எண்டு எனக்கு ஆசை ஆனா பயம். என்ரை அப்பா பாவம். அவருக்கும் இப்பிடி போட்டா எப்பிடி இருக்கும்? அப்பாட்டை ஒரே ஒரு சாரம்தான். அதில இனி தைக்கிறதுக்கு இடமே இல்லை. அம்மா சொல்லுவா...

ஏனுங்க ஒரு சாரமேனும் வாங்கலாம்தானே?

உனக்கென்ன விசரே எனக்கு சாரம் வாங்கிற காசில என்ரை பிள்ளைக்கு சட்டை துணி எடுத்திடுவன். எனக் கென்னத்துக்கு பிள்ளை. இந்தா தீபாவளி வருகுது. அதுக்கு ஆரும் பலகாரம் தரேக்க கோடித்துணியும் தருவினம் தானே த'ர எண்டுதான் சொன்னவை'.

அப்பா தீபாவளியை எதிர் பார்த்து ஏமார்ந்து போவார். பிறகு, சரி சரி தைப்பொங்கலுக்கு தருவினம், இப்பிடியே எல்லாம்



வரும் போகும். ஆனா அப்பாவை விட்டு அந்த கிழிஞ்ச சாரம்மட்டும் போகாது.

என்ரை கவலையை மகிழ்வை எல்லாம் நான் முற்ற வெளி மீனாட்சி அம்மனிடம்தான் சொல்லுவன். மதியம் ஆரும் இருக்க மாட்டினம். அவவின்ரை ஆலமரவேரில இருந்து கொண்டு நான் கவலையை சொல்லி அழேக்க அவவும் அழுவா. நான் சிரிச்சா அவவும் சிரிப்பா. பிறகு அங்கை விழுந்து கிடக்கிற அரளிப் பூக்களை எடுத்து அவவின்ரை வாசலில வைப்பன். அம்மாளாச்சி உன்ரை கிணத்திலையும் தண்ணி அள்ள என்னை ஆரும் விடுகினம் இல்லை. நீ அவைக்கு சொல் லலாம்தானே? நீ சொன்னா கேட்பினம். அவை உனக்கு சரியான பயம். நீ கனவில வந்து சொன்னபடியாலதானே உனக்கு கோயில் கட்டின வையாம். சித்திரா பௌர்ணமி அன்று மாத்திரம் எங்களுக்கு சில சலுகைகள் தருவினம். அம்மா சொல்லுறவா, அது அம்மாளாச்சிக்கு பயந்துதான் விடுகினம். அண்டைக்கு என்ரை அம்மாளாச்சி என்னை பார்த்துப் பார்த்து சிரிப்பா. பின்னேரம் வீதிவலம் வரத் தொடங்கினா எண்டா விடியத்தான் இருப்பிடத்துக்கு வருவா. நாங்களும் அவவுக்கு பின்னால போவம். நல்ல சாப்பாடெல்லாம் கிடைக்கும். சுகந்தி, ராகினி, கமலா எல்லாரின்ர வீட்டிலையும் மண்டபடி நடக்கும். நான் அப்பாட்டை சொல்லியிருவன்.

அங்கை மாத்திரம் சுண்டல் அவல் வாங்கக்கூடாது.

ஏன் பிள்ளை வாங்கக்கூடாது?

அது வாங்கக் கூடாது எண்டா வாங்கக் கூடாதுதான்.

சுகந்தி கண்கொத்தி பாம்புமாதிரி அவ்வளவு சனத்துக்கையும் என்னை துழாவுவாள். நான் அம்மனின்ரை சக்கரத்துக்கு பின்னால ஒளிஞ் சிடுவன். நல்லா தேடட்டும் எண்டு ஒளிச்சிருப்பன். பிறகு கேட்பாள்

ஏனடி நீ அண்டைக்கு வரேல்லை ?

எங்க, எண்டு நானும் தெரியாத மாதிரி கேட்பன். அவள் என்னை ஒரு மாதிரி பார்த்திட்டு போவாள். இவை மூன்று பேரிலையும் இவள்தான் பொல்லாதவள் எண்டு அமுதா சொல்லுறது சரி. என்னைக் கண்டா காணும் முக்கை பிடிச்சுக்கொண்டு, எடியே நீ உன்ரை அப்பாட்டை சொல்லு நாங்கள் பள்ளிக்கூடம் வரேக்க அந்த வண்டில தள்ளிக் கொண்டு வரவேண்டாம் எண்டு. சீக் ஒரே நாத்தம். ஏனடி உனக்கு உன்ரை அப்பாவில அரியண்டம் இல்லையே, எங்கட கோடிக்குள்ளால உன்ரை அப்பா வந்து போனாலே மணக்கும், எண்டு சொல்லி முகத்தை கோணலாக்கி சிரிப்பாள். நான் அப்பாட்டை போய் அழுவன்.

அப்பா சொல்லுவார் இந்த ஊத்தை துரை இல்லாட்டி அவையளின்ரை வீடு மணக்கத் தொடங்கிவிடும். சரி சரி விடம்மா, அது சின்னப் பிள்ளைதானே.

இல்லை அவள் சின்னப் பிள்ளை இல்லை. இந்த அப்பாவுக்கு அவளைப்பற்றி ஒண்டும் தெரியாது. அப்பாவுக்கு எல்லாரும் நல்லவை. வைகுந்தசாமி வாத்தியார் சொன்னவர். ஒரு நாள் துரோணர் தருமனிட்டையும் துரியோதனனிட்டையும் சொன்னாராம்,இந்த உலகத்தில எவ்வளவு நல்ல மனுசர் கெட்ட மனுசர் இருக்கினம் எண்டு கணக்கெடுத்திட்டு வாங்கோ என்றர்ராம். துரியோதனனுக்கு எல்லாரும் கெட்டவர்களாகவே தெரிஞ்சதாம். தருமனுக்கு எல்லாரும் நல்லவர்களாகவே தெரிஞ்சுதாம், அதுக்கு துரோணர் சொன்னாராம், எல்லாம் அவரவர் மனசை பொறுத்தது எண்டு. சொல்லீற்று என்னைப் பார்த்து சிரிச்சவர். அவரும் அம்மாளாச்சி மாதிரித்தான் சிரிப்பார். அவர் வருத்தம் மாறி வந்த உடனே எங்களை கேட்டவர்.

எப்பிடி பிள்ளையள் படிக்கிறீங்களோ? கவனமாகப் படிக்கவேணும் என்ன. எனக்கும் அமுதாவுக்கும் சரியான சந்தோசம். நாங்கள் அவருக்காக அம்மாளாச்சியிற்றை நேர்த்தி வைச்சதையும் ஆரும் இல்லாத நேரத்தில கோயிலை சுற்றி அடிஅழிச்சதையும் சொல்ல வேணும் போல இருந்தது.

என்ன பிள்ளையள் சிரிக்கிறியள்? எண்டு தலையை தடவிவிட்டவர். நானும் அமுதாவும் அழுதிட்டம். அவர் சிரிச்சுக்கொண்டு சின்னக்குழந்தைகள் தேவதைகள். அவை சிரிக்கவேணும் அழக்கூடாது. அவர் வந்தாப்பிறகு பள்ளிக்கூட தோட்டப் பூக்கள் எல்லாம் பூத்து சிரிச்சது. அதால வில்லூண்றி சுடலைக்குப் போறவையை பார்த்து எனக்கும் அமுதாவுக்கும் பயமே வரேல்லை. ஆனா ஆறுமுக வாத்தியார் மட்டும் இன்னும் கோபமா உலாவினார். அவரை பார்த்தா எனக்கு பகடைக்காய் இழந்த சகுனிபோல இருந்தார். ஆனாலும் அவர், சூரன் சாகேல்ல, உருவம் மட்டும்தான் மாறியிருக்கு எண்ட மாதிரித்தான் எங்களை பார்த்தார். அவருக்கும் அவர் படிப்பிக்கிறதுக்கும் சம்பந்தமே இருக்காது.

- சாந்தினி வரதராஜன்
(ஜேர்மனி)

(மிகுதி அடுத்த இதழில்)

# வர்த்தகம் மூலதனம்


## GM பெரிய வெட்டு

`ஜெனரல் மோட்டோர்'ஸின் (General Motors corp) ஐரோப்பிய உற்பத்திப் பகுதியல் பெரும் செலவீனக்குறைப்பு நடவடிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கையின்படி சுமார் 12000 பேர் ஆட்குறைப்பு செய்யப்படவுள்ளனர். GM இன் தொழிலாளர்களை அதிர்ச்சியும் ஆவேசமும் அடையவைத்துள்ள மேற்படி அறிவிப்பு வெளியானதையடுத்து ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் இந் நிறுவனத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களாகவே நட்டத்தில் இயங்கும் GM, தனது நிதி நெருக்கடியை சமாளித்து சுமார் 500 மில்லியன் ஈரோ செலவீனத்தைக் குறைக்கவே இந் நடவடிக்கை எனவும் குறிப்பிட்டுள்ளது. தற்போது தொழிற்சங்கங்களும், GM உம் பேச்சுக்களை நடாத்தி வருகின்றன.




## `Volks Wagen' இன் Phaeton தாமதம்



ஐரோப்பாவின் பெரிய மோட்டார் வாகன உற்பத்தியாளர்களான `வொக்ஸ் வேகன்' (Volks wagen ag) நிறுவனம் தனது புதிய ஆடம்பர வாகனமான 'Phaeton' ஐ அடுத்த ஐந்து வருடங்களுக்குப் பின்னரே தயாரிப்பதென முடிவு செய்துள்ளது. தனது மத்திய தர வகுப்பு வாகனமான 'Passat' இற்கும் (விலை 21,650 ஈரோ) ஆடம்பர வாகனமான 'Phaeton' இற்கும் (விலை 63,550 ஈரோ) பெரிய வித்தியாசம் காணப்படுவதால் இவ் இடைவெளியை சீர்செய்யும் வழிவகைகளைக் கண்ட பின்னரே புதிய வாகனமாக Phaeton உற்பத்தி செய்வதெனவும் `வொக்ஸ் வெகன்' முடிவு செய்துள்ளது.

## எரிபொருள் நிரப்புதலில் போட்டி

பிரான்சிலுள்ள பல் பொருள் அங்காடிகள் (Hyper markets) தற்போது மும்முரமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறந்து வருவதால், ஏற்கனவே எரிபொருள் நிலையங்களைக் கொண்டிருக்கும் பாரம்பரிய எண்ணெய் நிறுவனங்களுக்கு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் பாரம்பரிய எரிபொருள் விற்பனை நிறுவனங்களின் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களும் மூடப்பட்டு வருகின்றன.

`கார்பூர்' (Carrefour sa), `லுக்லேர்க்' (Leclerc) `ஒசான்' (Auchan) போன்ற பல்பொருள் அங்காடிகளின் எரிபொருள் நிரப்பு நிலையங்களே தற்போது பாரம்பரிய எண்ணைய் நிறுவனங்களின் வாடிக்கையாளர்களை தம்வசம் திருப்பி வருகின்றன.

1985 ஆம் ஆண்டில் `ஐரோப்பிய நீதிமன்றம்' பல்பொருள் அங்காடிகளும் எரிபொருள் இறக்குமதியை மேற்கொள்ளலாம் என வழங்கிய தீர்ப்பின் பின்னரே இவ் அங்காடிகள் மும்முரமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறந்தமை குறிப்பிடத்தக்கது.

## Fedex - பொஸ்னியா, ஒப்பந்தம்

சர்வதேச, சரக்கு காவு நிறுவனமான அமெரிக்காவின் `பெட் எக்ஸ்' (Fedex corp) உம் பொஸ்னியா-ஹெர்சகோவினா நாடும் தபாற் சேவைக்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. இதன்படி `பெட் எக்ஸ்' பொஸ்னியவில் 150 கிளைகளைத் திறக்கவுள்ளது. குறிப்பாக சேர்பியர்களின் பகுதியிலேயே இக் கிளைகள் திறக்கப்பட்டு அங்கு அஞ்சற் சேவைகள் மேம்படுத்தப் படவுள்ளன. 1995 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட `பொஸ்னிய அமைதி ஒப்பந்தத்தின் பின்னர் 2001 ஆம் ஆண்டிலிருந்து `பெட்எக்ஸ்' அங்கு காலூன்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## Nokia + Intel




உலகின் பெரிய செல்லிடப்பேசி தயாரிப்பு நிறுவனமான `நொக்கியா'வும் (Nokia corp) கணினி மென்பொருள் தயாரிப்பு நிறுவனமான `இன்ரெல்'லும் (Intel Corp) கூட்டாக இணைந்து புதிய நவீனரக செல்லிடப்பேசிகளை உருவாக்க முடிவுசெய்துள்ளன. இச் செல்லிடப்பேசிகளை ஏறக்குறைய ஒரு சிறிய கணினிபோல உற்பத்தி செய்யும் வகையிலேயே இவ்விரு நிறுவனங்களும் இணைந்துள்ளன.

## Rolls -Royce, Ge ஐ வென்றது


ஜப்பானிய விமானசேவை நிறுவனமான `ஓல் நிப்போன் எயார் வேய்ஸ்' (All nippon Airways) வழமையாக தான் கொள்வனவு செய்யும் போயிங் விமானங்களுக்கு அமெரிக்க ஜெனரல் எலக்ரிக்ஸ், இன் இயந்திரங்களையே தெரிவு செய்வது வழமை. ஆனால், இம்முறை அது கொள்வனவு செய்யவுள்ள 50, 7E7 புதியரக போயிங் விமானங்களுக்கு பிரித்தானிய `ரோல்ஸ்-ரோய்ஸ்' நிறுவனத்தின் இயந்திரங்களையே பொருத்தும்படி போயிங் நிறுவனத்தைப் பணித்துள்ளது. 1 பில்லியன் டொலர் (812.6 மில்லியன் ஈரோ) பெறுமதியுடைய இக் கொள்வனவுக் கட்டளை தனது வாடிக்கை நிறுவனமொன்றிடமிருந்து ரோல்ஸ்-ரோய்ஸ் இற்கு கிடைத்தமை. `ஜெனரல் எலக்ரிக்ஸை' ஆச்சரியப்படவைத்துள்ளது. 7E7 வகை விமானங்கள், இரட்டை இயந்திரம் பொருத்தப்பட்ட 250 ஆசனங்களையுடைய விமானங்களாகும். இதேவேளை `ரோல்ஸ் -ரோய்ஸ்' விடுத்துள்ள பிறிதொரு அறிவிப்பில் ஜப்பானின் `மிற்சுபிஷி ஹெவி இன்டஸ்றீஸ்' (Mitsubishi Heavy Industries) மற்றும் `ஹவசாகி ஹெவி இன்டஸ்றீஸ் (Kawasaki Hevy Industries) ஆகியவற்றுடன் இணைந்து பல் கூட்டு முதலீட்டு திட்ட தொழிற்பணிகளை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்துள்ளது. '

## Yukos சோதனை மேல் சோதனை

ஏற்கனவே கடும் நெருக்கடிக் குள்ளாகியிருக்கும் ரஷ்ய எண்ணெய் நிறுவனமான `யூகோசிற்கு (oao yukos) மேலும் ஒரு பலத்த அடி கிடைத்திருக் கிறது. மொஸ்கோ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றில் `யூகோஸ்' ஏற்கனவே பெற்ற வரிவிலக்கிற்கான தண்டப் பணமாக 1.34 பில்லியன் டொலரை செலுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு `யூகோஸ்' பெற்ற வரிவிலக்கு முறைகேடானது எனக் குறிப்பிட்ட நீதிமன்றம் இத் தண்டனையை வழங்கியுள்ளது. இதேவேளை `யூகோசிற்கு மென்மேலும் இவ்வாறான `அடிகள்' கிடைக்குமானால் அதன் `வங்குரோத்து' நிலை தவிர்க்க முடியாது போய் விடுமெனவும் `யூகோஸ்' உயர் வட்டாரங்கள் எச்சரித்துள்ளன. முன்னதாக ரஷ்ய அரசும் இந் நிறுவனத்திடமிருந்து பெரும் தொகையான தண்டப் பணம் அறிவிடுவது குறிப்பிடத்தக்கது. இந் நிறுவன அதிபர் தற்போது வரி ஏய்ப்புக் குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட் டிருக்கிறார்.

## Lego சரிகிறது

வர்ண, வர்ணப் பொருத்துத் துண்டுகளில் சர்வதேசத்தில் புகழ்பெற்ற டென்மார்க்கின் `லெகோ' (Lego Systems as) பொம்மைகள் உற்பத்தி நிறுவனம் தொடர்ச்சியான இரு ஆண்டுகளிலும் நட்டமடைந்துள்ளது. நான்கு `லெகோ லான்ட்' பூங்காக்களையுடைய இந் நிறுவனம் தொடர்ச்சியாக இரு வருடங்களிலும் நட்டமடைந்திருப்பது அதன் எதிர்கால நடவடிக்கைகளை கேள்விக் குறியாக்கியுள்ளது. இவ்வருடத்திற்கான இதன் நட்டம் 1.5 பில்லியன் டெனிஸ் குரோனர்களிலிருந்து 2 பில்லியன்




வரை வரலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளில் `லெகோ' தயாரிப்புகள் அண்மைக் காலமாகவே விற்பனையில் சரிவினைக் கொண்டிருப்பதே இதன் நட்ட நிலைக்குக் காரணமெனவும் கூறப்படுகிறது.

## சீன 'Disney' விரைவில்


சீனாவின் முதலாவது டிஸ்னி உல்லாசப் பூங்கா (Disney Theme park) அடுத்தவருட இறுதியில் அல்லது 2006 ஆண்டு முற்பகுதியில் திறக்கப்படுமென `வேல்ட் டிஸ்னி' (Walt Disney co) அறிவித்துள்ளது. ஹொங்ஹொங் அரசும் சீனாவுடன் இணைய முன்னர் வேல் டிஸ்னி நிறுவனமும் இணைந்து முதலிட்டே இந்த உல்லாசப் பூங்காவை உருவாக்கத் தொடங்கின. `டிஸ்னி' நிறுவனம் 314 மில்லியன் டொலர் (253.7 மில்லியன் ஈரோ) முதலிட்டு இந்தப் பூங்காவில் 43 வீதமான பங்குகளைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



# வா... வந்து கடித்துச் சாப்பிடு...!



தாய்வானின் தைப்பேய் மிருகக்காட்சி சாலையில் சிங்கங்களுக்கு தனது உடலைத் தானமாக வழங்க முனைந்துள்ளார், 46 வயதான நபர் ஒருவர்! திடீரென சிங்கத்தின் பகுதிக்குள் நுழைந்த சென் என்ற இந்நபர், சிங்கங்களைப் பார்த்து "வா... வந்து கடித்து சாப்பிடு" என்று கத்தியுள்ளார்.



அங்கே அமைதியாகப் படுத்திருந்த இரு ஆபிரிக்க நாட்டு சிங்களில் ஒன்று இவரது அழைப்பை ஏற்று பாய்ந்து வந்து இவரைக் கடித்துள்ளது. கால் ஒன்றிலும் கை ஒன்றிலும் பலத்த கடிகள் விழுந்த நிலையில், மிருகக்காட்சி சாலை ஊழியர்களால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரைப் பரிசோதித்த மருத்துவர், மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள இவரின் மிகவும் அபாயகரமான நடவடிக்கை இது என்று தெரிவித்துள்ளார்.

# பலசும் பத்சும்

### அட இப்படியும் மனிதரா !

## 24 வருடங்களின் பின் வாடகையை அனுப்பினார் !

நோர்வேயிலுள்ள கிளாறியன் என்ற விடுதிக்கு (Hotel Clarion) கடந்தவாரம் 500 குறோன் (60 ஈரோ) பணத்துடன் கடிதம் ஒன்று வந்திருந்தது. அக்கடிதத்தில் தான் 1980ம் ஆண்டு அந்த விடுதியில் தங்கியிருந்ததாகவும் ஆனால் தான் தங்கியிருந்ததற்கும், உணவு மற்றும் மது அருந்தியதற்குமான தொகையைச் செலுத்தாமல் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் கூறியுள்ள பெயர் குறிப்பிட விரும்பாத அந்த நபர், இந்தச் செயல் கடந்த 24 வருடங்களாக தனது மனதைப்போட்டு தாக்கி வந்ததால் விடுதிக்கான பணத்தை அனுப்பிவைக்க முடிவுசெய்ததாக எழுதியுள்ளார். எனினும் இந்தப் பணத்தை விடுதி நிர்வாகம் நனகொடையாக இராணுவத்தினருக்கு வழங்கியுள்ளது.

## சி.டி.களாகும் சோளம் !




துரும்பையும் இரும்பாக மாற்றும் ஜப்பானியர்களின் கைவண்ணத்தில் இப்போது சோளன்களும் சி.டி.களாக மாறத் தொடங்கியுள்ளன. டசோ ஹோசோதா என்ற நிறுவனம் சோளனில் இருந்து நவீன சி.டி.க்களை தயாரித்துள்ளது. தற்போது புழக்கத்தில் உள்ள சி.டி.க்கள் அனைத்தும் மண்ணில் மக்காமல் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்றன. எனவே ஜப்பானை சேர்ந்த டசோ ஹோசோதா என்ற நிறுவனம் சோளனில் இருந்து நவீன சி.டி.க்களை தயாரித்துள்ளது. இந்த சி.டி.யில் 25 ஜிகா வைற் (25 GB) தகவல்களை பதிவு செய்துகொள்ள முடியும்.

## நாய் பார்க்கும் உலகம்




தங்கள் செல்ல பிராணிகள் உலகத்தை எவ்வாறு பார்க்கின்றன என்பதைப் அறிவிதற்காக நிழற்படம் எடுக்கும் கருவி ஒன்றை ஜப்பானிய விளையாட்டுப் பொருள் தயாரிப்பு நிறுவனம் உருவாக்கியுள்ளது.நாயின் கழுத்தில் பொருத்தப்பட்டுள்ள இந்த நிழற்படக் கருவி 'நாய் பார்க்கும் இடத்தை' தனது 'கமெரா'வில் பதிவு செய்துகொள்ளும்.



## மரணதண்டனைக்கு காத்திருப்பு !

திருமணம் செய்யாமல் ஒருவருடன் வாழ்ந்ததால் மரணதண்டனையை எதிர்நோக்கியிருக்கின்றார் 18 வயது ஹயரா இப்ராஹ்ம் என்ற இந்த நைஜீரியப் பெண். நைஜீரியாவின் மதச் சட்டவிதிகளை மீறி, திருமணத்திற்கு முன்னர் இப்பெண் இன்னொருவருடன் உறவு வைத்துக்கொண்டதால் அந்நாட்டு உயர் நீதிமன்றம் கடந்தவாரம் அவருக்கு மரண தண்டனையை உறுதிப்படுத்தி தீர்ப்பு வழங்கியுள்ளது. தன்னை திருமணம் செய்துகொள்ள உறுதியளித்த ஒருவருடன் வாழ்க்கை நடத்தியதில் கர்ப்பிணியானர் இப்பெண். இதனால் இவர் மீது திருமணத்திற்கு முன் உறவு கொண்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவரது வழக்கை எடுத்துக்கொண்ட உள்ளூர் நீதிமன்றம், மதச்சட்ட விதிகளை மீறி திருமணத்திற்கு முன்னர் ஒருவருடன் உறவு வைத்துக்கொண்டதால் மரண தண்டனையை வழங்கியது. இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார். உயர் நீதிமன்றமும் தண்டனையை உறுதிப்படுத்தி தீர்ப்பு வழங்கியுள்ளது. நீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது இதற்கு காரணமான அவரது காதலனும் மற்றும் அப்பெண்ணின் தந்தையும் எதுவும் செய்யமுடியாத நிலையில் நின்றுகொண்டிருந்தனர்.



தற்போது ஏழு மாதக் கர்ப்பிணியாக இருக்கும் இவருக்கு குழந்தை பிறந்ததன் பின்னர் தண்டனை நிறைவேற்றுவதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த தண்டனைக்கு எதிராகவும் இந்த இளம் தாயைக் காப்பாற்றவும் உலகின் பல்வேறு தரப்பிலிருந்தும் நைஜீரிய அரசுக்கு கடிதங்கள் கண்டனங்கள் அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை இதற்கு எதிராக நைஜீரிய சாறிய நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர் காப்பாற்றப்படுவாரா? கொல்லப்படுவரா? இன்னும் மூன்று மாதங்களின் பின்னரே முடிவு தெரியும்...


இலங்கை - இந்திய மளிகைப் பொருட்கள்

நல்லூர்கந்தன் களஞ்சியம்

சிறப்பு மலிவு விற்பனை
ஜில்டா பசுமதி உடைத்த அரிசி ~~11.90□~~ - 9.50□
வெங்காயம் ~~8.60□~~ - 1.65□
V.T பசுமதி உடைத்த அரிசி ~~14.90□~~ - 9.50□

NALLAI KUMARAN TRADERS sarl





காலை 10.00 மணி தொடக்கம் 19.00 மணிவரை தொலைபேசி மூலம், உங்களுக்குத் தேவையான அனைத்து மளிகைப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் வீடுதேடி கொண்டுவந்து தரப்படும்.

191, Rue du Fg. St. Denis, 75010 Paris.
Tél : 01 42 09 06 82
06 23 71 35 96
RER/M° : Gare du Nord / Lachapelle
Bus : 350, 302, 65, 48

# மரணத்துள் வாழ்வு

`அன்பு' என்றால் என்ன?

அன்புக்கும் இறப்புக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

சாதல் இறுதியானது. சாதல் நிகழும் போது உடல் உயிரற்ற நிலையை அடையும். காதல் உயிர்ப்புடன் இருப்புக் கொண்டிருப்பது. இப்படியிருக்கையில் காதலைச் சாதலுடன் தொடர்பு படுத்துவது எப்படிச் சாத்தியமாகும் என நாம் சிந்திக்கலாம். ஒரு வேளை பாரதியார் பாடியதுபோல் `காதல் போயின் சாதல்' என்ற அர்த்தத்தில் அவை இரண்டும் தொடர்பு பட்டுள்ளனவோ என்றும் நாம் சிந்திக்கலாம். `சாதல்' என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டாலேயே நாம் சாதலுக்கும் காதலுக்குமிடையே உள்ள தொடர்பைக் காணலாம். சாவும் வாழ்வும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. ஒன்று இருந்தால் மற்றதும் இருக்கும். எனவே இறப்பைப் புரிந்துகொள்வதற்கு `வாழுதல்' என்பதனின் முழு அர்த்தத்தை நாம் முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

கருத்தியல் ரீதியாக, அறிவு பூர்வமாக, கோட்பாட்டுக் கட்டுமானங்களுடன், முடிந்த முடிபுகளுடன், கூறுபோடப்பட்ட மனங்களுடன், நம்பிக்கைகளுடனும் மூட நம்பிக்கைகளுடனும் எம்மால் இப்பூமியில் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் இருப்பு, வாழுதல் ஆகாது. அது வெறும் உயிருள்ள சடலத்தின் இருப்பே ஆகும்.

`வாழுதல்' என்று சொல்லும் போது நாளாந்தம் நாம் வாழும் வாழுதலையே நாம் குறிப்பிடுகிறோம். உங்களுடைய, என்னுடைய நாளாந்த வாழ்வைப் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். எம்முடைய நாளாந்த வாழுதலில் பிணக்கு, தனிமை, நம்பிக்கை, மூடநம்பிக்கை, துயரம், போட்டி, பொறாமை, அவலம், ஆதரவின்மை, அருவருப்பு, ஏக்கம், பேராசை, எரிச்சல், இகழ்ச்சி, ஆணவம், செருக்கு, வெறுப்பு, பற்று, பாசம், கற்பனை, சடங்கு என்று எல்லாமே நிறைந்து உள்ளன. எமது வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் இவை யாவும் நாம் திறந்து வைத்துள்ள போர் முனைகள். மனத்தால் திறந்துவிடப்பட்ட இம்முனைகளில் எக்கணமும் சமர் புரிந்து கொண்டுதான் இருக்கின்றோம். நாம் கூறுபோட முடியாத முழுமையான தனிமனிதராய் இருந்தால் மனத்தின் ஆக்கிரமிப்புக்கும் இருத்தலுக்கும் இயலாமற் போய்விடும் என்பதால் எம்முள் முரண்பாடுகளை ஏற்படுத்தி எம்மைப் பிளவுபடுத்தி, மனமானது கவர்ச்சியான கருத்தியல்களை எங்களது மூளைக்குள் புகுத்திப் பலமுனைகளைத் திறந்து எங்களைப் பலவீனமாக்குகிறது. புறத்தில் ஒப்பனைப் பொருட்களைத் தடவி, சீவி சிங்காரித்து, தகுதிக்கு மீறிய ஆடைகளைத் தரித்து. எம்மோடு நாம் சமாதானமாக வாழ்ந்துகொண்டிருப்பதுபோல் வெளியே காட்டிக்கொண்டும் அகத்தையும் புறத்தையும் ஏமாற்றிக்கொண்டும் இருக்கின்றோம். ஆனால் அகத்தில் எம்மால் திறந்துவிடப்பட்ட போர் முனைகளிலெல்லாம் சமகாலத்தில் சமர்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இப்போர்க்களத்தில் எமக்கேற்பட்டுக்கொண்டிருக்கும் காயங்களிலிருந்தும், வலிகளிலிருந்தும், தாக்கங்களிலிருந்தும், அனர்த்தங் களிலிருந்தும், ஏமாற்றங்களிலிருந்தும் நாம் தற்காலிகமாகவேனும் தப்புவதற்கு, இசை, கலை, பொருட்காட்சிச்சாலை, கோயில், திருவிழா போன்ற பாதுகாப்பு அரண்களுக்குள் அடைக்கலம்



புகுந்துவிடுகிறோம். வாழ்நாள் முழுவதும் இந்த அரண்களுக்குள் முடங்கி அடங்கிக் கிடக்க முடியுமா? கொஞ்சமாகவேனும் மகிழ்ந்து பொழுதுபோக்க வேண்டுமே என்று, மனம், சமய அல்லது தத்துவ ரீதியான பொழுதுபோக்குகளில், புனையப்பட்ட கோட்பாடுகளில், அறிவுப் பயிற்சித்துறை வல்லுநர்களின் ஆலோசனைகளில் மறைவிடம் தேடி ஓடிக்கொண்டு இருக்கின்றோம். எப்போதும் ஓய்வொழிவின்றி எம்மை நீள் துயரத்தில் அமிழ்த்திக் கொண்டிருக்கும் இப்போருக்கு முடிவைக் கொண்டுவர முடியாமலிருக்கிறது. புறத்தில் நடக்கும் போரில் எதிரியை வெற்றி கொள்வதன் மூலமோ, எதிரியிடம் தோல்வியுறுவதன் மூலமோ, எதிரியுடன் சில விட்டுக்கொடுப்புக் களைச் செய்வதன் மூலம் காணப்படும் சமாதானம் மூலமோ போரை முடிவுக்குக்கொண்டு வரலாம். ஆனால் எம்முள் நடக்கும் போருக்கு முடிவை எப்படிக் கொண்டு வரமுடியும்? போர் தொடுத்தவனும் எதிரியும் நானாய் இருக்கும்போது, யார் யாரை வெற்றிகொள்வது? யார் யாரைத் தோல்வியுறச் செய்வது? யார் யாருடன் சமாதானம் பேசுவது?

மனத்திடலில் நடைபெறும் போருக்கு, எமது மனம் ஓர் அடிப்படை மாற்றத்துக்கு உள்ளானாலன்றி, முடிவேற்படாது. இப்போர் முடிவடையாவிட்டால் எங்களது `வாழுதலில்' அர்த்த மிருக்காது. வேலைக்குப் போவதும், பணம் சம்பாதிப்பதும், புத்தகங்கள் வாசிப்பதும், சினிமா பார்ப்பதும், தனக்குப் புரிந்த—புரியாத சில மேற்கோள்களைக் காட்டுவதும், தன்னை ஏதோவொரு குழுவின் தலைவனாக வலிந்து வந்து முன்னிறுத்துவதும், எல்லாம் அறிந்தவனாய்க் காட்டிக் கொள்வதெல்லாம் வெறுமையான நடுத்தரவர்க்க வாழ்க்கையாகும். இத்தகைய வாழுதலால் அலுப்படைகிறவர்கள் வாழ்க்கைக்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுக்கும் பொருட்டு ஒரு புதிய அர்த்தத்தையும், அவ்வர்த்தத் துக்குக் கோட்பாடு ரீதியாக வலுச் சேர்ப்பதற்கு வியாக்கியானங் களையும் கண்டு பிடிக்க விழைவர். இதுவும் வாழுதலிலிருந்து தப்பிச் செல்வதற்கான இன்னொரு வழியேயாகும்.

போர் முடிவுக்கு வராமல் நடைபெற்றுக்கொண்டிருந்தால் பலருக்கு இலாபம். சமாதானத் திற்கான போர், வெற்றிக்கான போர், போருக்கான போர், சிலுவைப்போர் என்றெல்லாம் நடந்தால்தான் அரசாங்கங்கள் தங்களது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்ளலாம். ஆயுத விற்பனையில் விற்பனை முகவர்கள் பலகோடானு கோடிகளைச் சம்பாதிக்கலாம். வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடையலாம். கள்வர்கள் பொது மக்களின் பொருட்களைக் கொள்ளை அடிக்கலாம். இவை யாவும் போரினால் ஏற்படும் தவிர்க்க இயலாத விளைவுகள். அகப்போரில் அகப்பட்டு அல்லலுறும் எம்மை மீட்க சுரண்டல்காரர்களும், மதவிற் பனையாளர்களும், போதகர்களும், மீட்பர்களும் தருணம் பார்த்து, வல்லரசுகள் அமைதி காக்கும் படைகளை, அனுப்புவதுபோல், ஆதிக்க வல்லாண்மைகொண்ட மத நிறுவனங்களைக் களத்தில் இறக்கிவிடுவர்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)



என்னோடு நான்

கந்தையா நவரேந்திரன்



## எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...


## மண்ணின் மைந்தனாக மணலாற்றில் நவம்

இராணுவப் பரிசோதனை ஒன்றின்போது கையை இழந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கின்றான் ஒரு போராளி. வருவோர் போவோர் எல்லாம் அவனுக்கு ஆறுதலும், அனுதாபமும் தெரிவிக்கின்றனர். அது அவனுக்கு சினத்தை மூட்டுகின்றது. இறுதியாக அவனது தாய் வருகின்றாள். `நீ போராடியது போதும். இனி உனக்கு ஒரு கையில்லை, வீட்டிலேயே இரு. பாசத்தின் மேலீட்டால் இப்படி யொரு கோரிக்கை விடுகின்றாள் தாய். அது அவனது மனக்கொதிப்பை அதிகரிக்கின்றது. தனக்கு அனுதாபம் கூறவந்தவர்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்ல இதுதான் தருணம் எனத் தீர்மானிக்கின்றான்.

`எனக்கு இன்னொரு கை இருக்கு' உறுதியுடன் தெளிவாக ஒலிக்கின்றது அவன் வார்த்தைகள். அவனுக்கு ஆறுதல் கூற முனைந்த வர்களும் தமது நிலையை எண்ணி நாணுகின்றனர். கால் இழந்த போராளிகளுக்குக் கிட்டு எப்படி நம்பிக்கை நட்சத்திரமாக, வழிகாட் டியாக திகழ்கின்றாரோ அதே போலத்தான் போராட்டத்தில் தமது கரங்களை இழந்த போரா ளிகளுக்கு வழிகாட்டியாக விளங் குகின்றான் அவன். அவன்தான் டடி.

டடி / நவம் வன்னிக் காடுகளின் மூலை முடுக்குகள் எல்லாம் இவனுக்கு அத்துப்படி. இக்காடுகள் பற்றிய படம் இவன் நெஞ்சில் நிறைந்திருக்கும். இவன் பிறந்தது மலைப்பிரதேசத்தில், விடுதலைக்காக உழைத்தது.. போராடியது வன்னிக் களங்களில், வன்னியை நேசித்த.. வன்னிக்களத்திலே காயமுற்ற இவனது உயிர் பிரிந்தது தமிழகத்தில். `பசிலனையும், லோறன்சையும் சேர்த்தால் அதுதான் நவம்' இவனு டன் நெருங்கிப் பழகிய ஒரு போராளி கூறிய வார்த்தைகள் இவை. ஒவ் வொரு போராளிக்கும் தனித்துவமான சில ஆற்றல்கள் இருக்கும். துணிச் சலுக்குப் பெயர் போனவன் பசிலன். சிறந்த மதிநுட்பத்திற்குப் பெயர் போனவன் லோறன்ஸ். இருவரது தன்மைகளையும் ஒருவரிடத்தில் கண்டதால்தான் நவத்தைப்பற்றி அப்போராளி இவ்வாறு குறிப்பிட் டான். அதிதியாக வந்தோரால் அகதியாக ஆக்கப்பட்டதுதான் மணலாற்று மக்களின் வரலாறு. இன்றோ தமது சொந்த நிலத்தை தாமே பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடன் நிற்கிறார்கள் மணலாறு மக்கள். வரலாற்றில் இந்நிலையை ஏற்படுத்தியதில் கணிசமான பங்கா ளிகள் நவமும் அவனது தந்தையுமே. எப்போதும் துப்பாக்கியுடன் காணப்படும், `ஓமர்முக்தார்' என்று போராளிகளால் அழைக்கப்படும் இவனது தந்தையும் இவனும் இந்த மண்ணை விட்டு நாம் எங்கும் போவதற்கில்லை என்ற செய்தியை சிறீலங்கா அரசிற்கு அடிக்கடி உணர்த்தினார்கள்.

அரசன் ஒருவன் தான் கைப் பற்றும் பிரதேசங்களைத் தன் ஆட் சியின் கீழ் வைத்திருப்பதற்கு அவனுக்கு உதவுவது அங்கு அவன் விட்டுச் செல்லும் அவனது இராணுவ முகாம்கள் அல்ல. இதைவிட அவன் தனது பிரதேசத்து மக்களை அங்கு குடியேற்றுவதன் மூலம் சிறப்பாகச் செய்யலாம். காரணம் அங்கு குடி யேறும் மக்கள் அங்கு நிரந்தரமாக வசிக்கப் போகிறவர்களாதலால்



அவர்கள் எவ்வித இடர்களையும் எதிர்கொள்ளவும், அவ்விடங்களைத் தமதாக்கிப் போராடுவதற்கும் தயாராக இருப்பார். இது இளவரசன் என்னும் நூலில் காணப்படும் மாக்கிய வல்லியின் கூற்று. இதை அப்படியே நடைமுறைப்படுத்திய தால்தான் இன்று அம்பாறை என் றொரு தொகுதியே முழுச்சிங்களத் தொகுதி என்றாகிவிட்டது. இதையே படிப்படியாக திருமலை, மணலாறு என விஸ்தரித்து வருகின்றது சிறீலங்கா அரசு. ஆனால் இது தமிழீழ மண் என்று எல்லை போட்டுக் காட் டியது நவத்தின் துப்பாக்கி. குடியேற் றக்காரர்கள் என்பது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் ஒரு வடிவமே என்பதை இவன் உணர்ந்து அதுக் கேற்ற நடவடிக்கைகள் மேற்கொண் டபடியால் இன்னொரு ஓதியமலை வரலாறு மீண்டும் நிகழாது தடுக்கப் பட்டது. நெருக்கடி மிகுந்த காலகட்டங்களான, எங்கும் இந்திய இராணுவ மணம் வீசிய அந்த நாட்களில் இயக்கத்தையும், இயக்கத் தலைமையையும் பாதுகாக்க இவன் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக் கையையும் பற்றி இவனுடன் பழகிய ஒவ்வொரு போராளியும் கண்கள் பனிக்க கதைகதையாகக் கூறுகின்றனர்.

* சூழலுக்கேற்ற மாதிரியும், மக்க ளுக்கேற்ற மாதிரியும் அமைந்த இவனது ஒவ்வொரு செயலும் போராட்டம் பற்றிய தெளிவை புதிதாகப் போராட்டத்தில் இணைந்து கொள்ளும் இளைஞர்களுக்கு, சிறு வர்களுக்கு ஊட்டியது. நெருக்கடி யான காலகட்டத்தில் பதட்டப் படாமல் செயற்படும் துணிவை சகபோராளிகளுக்கு ஊட்டினான். காட்டில் நவம் நிற்கும் பகுதி ஒரு பாதுகாப்பு வலயம் என்றே கூறலாம். அந்தளவுக்குச் சிறந்த முறையில் ஒரு ஒழுங்கமைப்பை உருவாக்கி யவன் அவன். ஒற்றைக் கையால் இவன் செய்யும் வேலைகளைப் பார்த்த ஒவ்வொருவருக்கும், இவனால் இது முடியுமானால் என்னால் ஏன் முடியாது என்ற தன்னம்பிக் கையை ஊட்டியது. அவ்வாறு உருவான போராளிகள் தான் இன்று வன்னி மண்ணைக் காத்து நிற்கின் றனர். கணக்கற்ற களங்களைக் கண்ட இவனை நாம் இழந்தது உண்மைதான். ஆனால் இவனால் ஊட்டப்பட்ட ஒழுங்கமைப்பு, போராட்ட உணர்வு எதையும் மணலாறு மண் மறந்துவிடவில்லை. அவ்வப்போது மணலாறு பிரதேசத் தில் எதிரியிடமிருந்து இவனால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் திரியும் போராளிகளும், ஊர்காவல் படையும் சொல்லும் செய்தி இதுதான்.

# உதைபந்தாட்டம்

## இரண்டாவது பத்தொன்பது வயதிற்குட்பட்ட பெண்களிற்கான உலகக்கிண்ணம்


பெண்கள் உதைபந்தாட்ட வளர்ச்சியின் மைல்கற்களில் ஒன்றாக விளங்குவது பத்தொன்பது வயதிற்குட்பட்டவர்களிற்கான உலகக்கிண்ணமாகும். இதன் முதலாவது சுற்றுப்போட்டி 2002ம் ஆண்டு கனடாவில் நடைபெற்றது. இதில் அமெரிக்கா சம்பியன் ஆனது. இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை நடைபெறும் எனும் விதிமுறைக்கேற்ப இரண்டாவது உலகக்கிண்ணச் சுற்று இம்மாதம் 10ம் திகதி முதல் 27 ம் திகதிவரை தாய்லாந்தில் உள்ள பாங்கொக், சங்மை, புக்கெற் ஆகிய நகரங்களில் நடைபெறும். சுற்றுப்போட்டியினை நடாத்தும் தாய்லாந்தினைத் தவிர ஏனைய பதினொரு நாடுகளும் தத்தமது பிராந்தியச் சம்மேளன சுற்றினூடாகத் தெரிவாகியுள்ளன.

ஆசியப் பிராந்தியத்திலிருந்து தென்கொரியா, சீனா–ஆபிரிக்கப் பிராந்தியத்திலிருந்து நைஜீரியா–வடக்கு மற்றும் மத்திய அமெரிக்கப் பிராந்தியத்திலிருந்து கனடா, அமெரிக்கா –தென் அமெரிக்கப் பிராந்தியத்திலிருந்து பிரேசில்–ஐரோப்பப் பிராந்தியத்திலிருந்து ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா, ஸ்பெயின் என்பன தெரிவாகியுள்ளன. இவை நான்கு அணிகளைக் கொண்ட மூன்று குழுக்களாக வகுக்கப்பட்டு குழுநிலையாட்டங்கள் நடைபெறும்.

இக்குழு நிலையாட்டங்கள் அனைத்தும் 10ம் திகதி தொடக்கம் 18ம் திகதிவரையும் பாங்கொக, சங்மை, புக்கெற் ஆகிய நகரங்களிலும் காலிறுதியாட்டங்கள், இறுதியாட்டங்கள் பாங்கொக், சங்மையில் 21ம் திகதியும், அரையிறுதி ஆட்டங்கள் பாங்கொக்கில் 24ம் திகதியும், மூன்றாவது இடத்திற்கான இறுதியாட்டங்கள் பாங்கொகிலும் நடைபெறும்.

10ம் திகதி தாய்லாந்து–ஜேர்மனியிடையே நடைபெறும் முதலாவது ஆட்டம் முதல் இறுதி ஆட்டம் வரையிலான இருபத்தாறு ஆட்டங்களிற்கு அனைத்துப் பிராந்தியங்களில் இருந்தும் பதின்மூன்று பிரதம நடுவர்களும், இருபத்து நான்கு துணை நடுவர்களும் தெரிவாகியுள்ளனர். இவர்கள் அனைவரும் பெண்கள் என்பது கவனத்திற்குரியது.

| குழு A | குழுB | குழுC |
|---|---|---|
| தாய்லாந்து | நைஜீரியா | தென்கொரியா |
| ஜேர்மனி | சீனா | அமெரிக்கா |
| அவுஸ்திரேலியா | இத்தாலி | ரஷ்யா |




-ஜே.ஜே.

# கிறிக்கெற்

# இந்தியாவிற்கு ஆறுதல் அளித்த வெற்றி




நடந்து முடிந்த மூன்று ரெஸ்ற்போட்டிகளில் 2:0 எனும் நிலையில் தோல்வியின் விளிம்பில் இருந்த இந்தியா கடந்த மூன்றாம் திகதி முதல் நடைபெற்றுவந்த நான்காவதும், இறுதியானதுமான போட்டியில் அவுஸ்திரேலியாவை பதின்மூன்று ஓட்டங்களால் வெற்றிகொண்டு ஆறுதல் அடைந்தது. பெங்களூரில் நடைபெற்ற முதலாவது ரெஸ்ற் போட்டியில் தோல்வியடைந்த இந்தியா, சென்னையில் நடைபெற்ற இரண்டாவது ரெஸ்ற்ரில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற எண்ணத்தோடு களமிறங்கியது. ஆனால் இறுதிநாள் ஆட்டம் மழையின் காரணமாக நடைபெறாமல் போகவே வெற்றிவாய்ப்பும் அவர்களைவிட்டுச் சென்றது. அடுத்து மூன்றாவது ரெஸ்ற்போட்டி நாக்பூரில் நடந்தபோது ஆடுகளம் நமக்கே சாதகம் என எண்ணிய இந்தியாவிற்கு அவுஸ்திரேலியாவின் வெற்றி மறக்க முடியாத நாளாக மாறியது. ஆம் முப்பத்தைந் தாண்டுகளின் பின்னர் இந்திய மண்ணில் அவுஸ்திரேலியா பெற்ற ரெஸ்ற் வெற்றித் தொடராக அமைந்தது. இவ்வாறு இறங்கு முகத்தில் இருந்த இந்தியாவிற்கு இந்த இறுதி ரெஸ்ற் வெற்றியானது உள ரீதியான வெற்றியாகவே கருதவேண்டியுள்ளது.

இவ் இறுதி ரெஸ்ற் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. ஆனால் பதினொரு ஓவர்கள் மட்டுமே பந்து வீசப்பட்டது. மிஞ்சிய நேரத்தை வர்ணபகவான் தனது ஆளுமைக்குட்படுத்தினான். இரண்டாம் நாள் ட்றாவிட்டின் 31 ஓட்டங்களுடன் 104 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்றது. வெற்றி இலக்கு வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கையுடன் ஆடிய அவுஸ்திரேலியா 203 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கற்றுக்களையும் இழந்தது. முதல் இனிங்சில் தம்மைவிட 99 ஓட்டங்கள் அதிகம் அவுஸ்திரேலியா பெற்றிருந்ததை மனதில் கொண்டு ஆடவந்த இந்தியா ஐந்து ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது விக்கெற்றை இழந்தது. இரண்டாவது விக்கெற்றும் பதின்நான்கு ஓட்டங்களிற்கு இழந்து நிற்க துடுப்பாட்ட வரிசையில் மாற்றத்தை ஏற்படுத்திய அணித்தலைவர் ட்றாவிட் லக்ஸ்மனை களமிறக்கினார். இவர் ரெண்டுல்காருடன் மூன்றாவது விக்கெற் சோடியாக 91 ஓட்டங்களைச் சேர்த்தார்.

இவ்விருவரும் முறையே 69,55 ஓட்டங்களைப் பெற அடுத்துவந்தவர்கள் ஓரளவிற்கே ஓட்டங்களைப் பெற்றனர். விக்கெற் இழப்பிற்கு 188 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்தியாவை பின்வரிசை ஆட்டக்காரர்களால் அதிக தூரத்திற்கு இட்டுச் செல்ல முடியாமல் போகவே 68.2 ஓவர்களில் 205 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

107 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் ஆடவந்த உலகின் முதன்மை அணியான அவுஸ்திரேலியா ஓட்டங்கள் எதுவும் இல்லாமல் முதல் விக்கெற்றை வேகப்பந்து வீச்சாளர் சகீர்கானின் பந்து வீச்சில் பறிகொடுத்தது. இரண்டாவது இனிங்சிற்கான இரண்டாவது பந்திலேயே இவ்விக்கெற் வீழ்த்தப்பட்டது. தொடர்ந்து சுழற்பந்து வீச்சாளர்களான ஹர்பஜன், கும்பிளே, முரளி கார்த்திக் ஆகியோரினால் திண்டாடிய அவுஸ்திரேலியா 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாவது, மூன்றாவது விக்கெற்றுக்களை இழந்தது. கெய்டனின் 24 அதிகூடிய ஓட்டங்களுடன் 30.5 ஓவர்களில் 93 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டம் முடிவிற்குவர இந்தியா 13 ஓட்டங்களால் வெற்றிபெற்று ஆறுதல் அடைந்தது. இந்த நான்காவது ரெஸ்ரின் ஆட்ட நாயகனாக இரண்டு இனிங்சிலும் 7 விக்கெற்றுக்களைப் பெற்ற முரளி கார்த்திக்கும் தொடரின் நாயகனாக அவுஸ்திரேலியாவின் டமியன் மார்ற்றினும் தெரிவாகினர்.

ட்றாவிட்டின் சாதனை

இந்த நான்காவது ரெஸ்ரில் இரண்டாவது இனிங்சில் இந்திய அணித் தலைவர் ட்றாவிட் 5 ஓட்டங்களை எடுத்தபோது இந்திய வீரர்களில் ரெஸ்ற் தொடரில் 7000 ஓட்டங்களை எட்டியவர் வரிசையில் மூன்றாவது வீரராக இணைந்து கொண்டார். இவரது தற்போதைய ஓட்ட எண்ணிக்கை 7022 ஆகும்.

கவஸ்கர், ரெண்டுல்கார் ஆகியோரே ஏனைய இருவருமாவார். ட்றாவிட் இந்தியாவில் நடந்த 37 ரெஸ்ற் போட்டிகளில் 2829 ஓட்டங்களையும், ஏனைய நாடுகளில் நடந்த 45 ரெஸ்ற்போட்டிகளில் 4,193 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

## ருறின் குளிர்கால ஒலிம்பிக் குழுத் தலைவர் இராஜினாமா

2006ம் ஆண்டு இத்தாலியின் ருறின் நகரில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் குழுவின் தலைவர் வலன்ரீனோ கஸ்ரெலனி தனது தலைவர் பதவியை இராஜினாமா செய்யப் போவதாகக் கூறியுள்ளார். இவரது நிதிக்கையாள்கையில் அதிருப்தி கொண்ட இத்தாலியப் பிரதமர் பெரஸ்கோனி தனது அரசின் கலாச்சார அமைச்சின் உதவிச் செயலாளர் மறியோ பெஸ்கன்ற் ஐ ருறின் ஒலிம்பிக் குழுவின் மேற்பார்வையாளராக நியமித்திருந்தார்.

இந்நியமனத்தின் மறுநாளே தனது பதவியை ராஜினாமா செய்யப் போவதாக பெலன்ரீனோ கஸ்ரெலானி பத்திரிகையாளர்கள் மத்தியில் கூறியிருந்தார்.

`நான் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளும், எதிர்காலத்தில் தொடர இருக்கும் செயற்பாடுகளிலும் நம்பிக்கையீனம் ஏற்பட்டே இந்த நியமனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நியமனமானது எனது ஆளுமை அதிகார ஒப்படைப்பு தண்டனையாகவே கருதுகின்றேன். விளையாட்டின்பால் கவரப் பட்டதனாலேயே இப்பொறுப்பை ஏற்றேன். ஆனால் அரசின் நடவடிக்கை இன்று என்னை புண்படுத்தியுள்ளது. இதனால் எனது இராஜினாமாக் கடிதத்தை இம்மாதம் 24ம் திகதி நடைபெற வுள்ள ருறின் குளிர்கால ஏற்பாட்டுக் குழுவின் உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் சமர்ப்பிப்பேன்' என்று கடந்த வியாழக்கிழமை (04.11.2004) பத்திரிகையாளர்களின் மத்தியில் வலன்ரீனோ கஸ்ரெல் கூறியுள்ளார்.





S.A. Nathan Credit & insurence Bern


சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா ? B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46


பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே
புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் பிரான்ஸ்
வழங்கும்
மாபெரும் கலை மாலை
தென்னங்கீற்று - 2004
இன்னிசை விருந்து
பரதம்
மேற்கத்தைய நடனம்
நாடகம்
இன்னும் மண்ணின் மணம் மாறாத
சுவையான பல நிகழ்வுகளுடன்....
காலம் - 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 2 மணி
இடம் - Salle Jeanne D'Arc
52 Place de Torcy
75018 PARIS
Metro : Marx Dormoy (Ligne 12)
Bus 65 ou 60
மேலதிக தொடர்புகளுக்கு
06 16 39 12 51
06 67 14 46 39
06 61 19 27 39
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



# விரைந்த முடிவை விரும்பும் ஐவரிக் கோஸ்ட்

உலகக்கண்

ஆபிரிக்க நாடுகளில் இயற்கை வளம் மற்றும் கனிப்பொருள் வளம் போன்றவை நிறைந்த நாடுகளின் வரிசையில் ஐவரிக் கோஸ்ட் முன்னணியில் உள்ளது. இந்நாட்டின் சனத்தொகையில் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் சரிக்குச் சரி கலந்துள்ளனர். சிறியதொரு பெரும்பான்மையில் கிறிஸ்தவ அரசு அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நாடு பிரான்சின் முன்னாள் காலணித்துவத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. உலகின் கொக்கோ உற்பத்தியில் முன்னணியில் ஐவரிக் கோஸ்ட்டே உள்ளது. மேலும் எண்ணை வளம், கனிப்பொருள் வளம் போன்றவைகள் அந்நாட்டின் செல்வாக்கிற்கு ஒரு காரணமாக இருந்தது. பிரான்சின் காலணித்துவத்தில் இருந்து அது சுதந்திரத்தை அடைந்தபோதிலும் பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பல்தேசிய நிறுவனங்கள் பிரெஞ்சு உடமையாகவே இருந்து வருகின்றது. இவ்வளவு இருந்தபோதிலும் அந்நாட்டின் பொருளாதாரம் குறிப்பிட்ட அளவிற்கு வளர்ச்சியைக் காணவில்லை. பொதுவான ஆபிரிக்க நாடுகளின் வளர்ச்சியில் இருந்து மாறுபட்ட போதிலும் பொருளாதார ரீதியாக மக்கள் சமூகம் எதிர்பார்த்தளவு முன்னேற்றத்தைக் காணவில்லை. இதற்கு சமூக ரீதியாக அங்கு ஏற்பட்டிருந்த பிளவுகளே காரணம் என்பது ஆய்வாளர்களின் கணிப்பு.

இந்நாடு இப்போது அரசியல் ரீதியான கொந்தளிப்பிற்குள் மாட்டிக்கொண்டுள்ளது. ஐவரிக் கோஸ்ட்டின் சமூக அமைப்பில் தென்பகுதியை கிறிஸ்தவர்களும் வட பகுதியை ஸ்லாமியர்களும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். தென்பகுதியைச் சேர்ந்தவர்களே செல்வாக்கு மிக்கவர்களாக உள்ளார்கள் என்றும் வடக்கின் ஸ்லாமியர்களை புறக்கணிப்புச் செய்கின்றார்கள் என்றும் அவர்கள் தொடர்ந்தும் மீள முடியாத நில்லயில் இருப்பதற்கு தென்பகுதியின் ஆட்சி அதிகாரமே காரணம் என்றும் கூறி வட பகுதி இளைஞர்கள் 2000ம் ஆண்டு செப்டெம்பரில் கிளர்ச்சி ஒன்றினை மேற்கொண்டனர். இதில் ஆட்சி மாற்றமும் முக்கியமான விடயமாக கருதப்பட்டது. ஒருவகையாக அப்போது ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டினால் நாடு அமைதியடைந்தது. ஆனாலும் ஆரம்பித்த தீ அணையவில்லை. உள்ளுக்குள்ளேயே புகைந்துகொண்டிருந்தது. வட பகுதி தென் பகுதியில் இருந்து பிரிந்துபோகும் அபாயம் தோன்றியது. இராணுவத்தின் சில அணிகள், இளைஞர்களைக் கொண்ட சில குழுக்கள் இவர்களைக்கொண்டு அமைக்கப்பட்ட ஆயுதப்படை தென் பகுதியின் படைகளுடன் மோத ஆரம்பித்தன. இவர்களின் தலைவராக ‘வட்டாரா’ செயற்பட்டார். இவர் அரசியல் ரீதியாக பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் தான் ஜனாதிபதியாக வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் அதிபர் லோறோன் பக்வோ இல்லை. இதற்கு பிரதானமான காரணியாக வட்டாராவின் குடும்பப்பின்னணி கூறப்படுகிறது. இவர் அண்டைநாடான புர்க்கின பாசோவின் தாயாருக்கும் ஐவரிக் கோஸ்ட்டின் தந்தைக்கும் பிறந்தவர் என்பதால் அவரை முழுமையான ஐவரிக் கோஸ்ட் பிரஜை என ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் அவர் ஜனாதிபதியாகத் தகுதியற்றவர் என ஒதுக்கப்பட்டார்.

இதனையடுத்து 2002ம் ஆண்டில் மீண்டும் ஒரு கலவரம். இப்போதும் ஆபிரிக்க நாடுகளின் சமரசம். இதன்போது வடக்கை கட்டுப்பாடடிற்குள் வைத்துக்கொண்டுள்ள கிளர்ச்சிவாதப் படைகள் தென் பகுதியில் தலைநகர் வரை வர முனைந்தன. இச்சந்தர்ப்பத்தில் ஐ.நா.வின் பாதுகாப்புச்சபை தலையிட்டு பிரான்சில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இதில் வடக்கின் தலைவர்கள் சிலர் ஐவரிக் கோஸ்ட் மந்திரி சபையில் இணைத்துக்கொள்ளப்பட்ட சம்மதிக்கப்பட்டது. நீண்டகால இழுத்தடிப்புக்களின் பின் சிலர் மந்திரிசபையில் இணைந்தனர். ஆனால், வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே இருந்துவந்த பிணக்குகள் மட்டும் தீரவில்லை. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை இங்கு தலையிட்டு 10,000 சமாதான படைகளை கொந்தளிப்பு உள்ள நிலைகளில் சேவைக்கு அனுப்ப உத்தேசித்தது. இத்துடன் பிரெஞ்சுப் படைகளும் அங்கு செயற்பட அனுமதிக்கப்பட்டது.

இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையில் திடீரென மீண்டுமொரு முறுகல் நிலை. நாட்டின் வட பகுதியில் நிலைகொண்டிருந்த பிரெஞ்சு இராணுவ முகாம் மீது திடீரென ஐவரிக் கோஸ்ட்டின் விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன. இத் தாக்குதலின் போது 9 பிரெஞ்சு படையினர் கொல்லப்பட்டு 30 பேர் வரை காயமடைந்தனர். இச்சம்பவத்தில் ஒரு அமெரிக்க பொது மகனும் கொல்லப்பட்டார். இதற்குப் பதிலடியாக ஐவரிக் கோஸ்ட் விமானப்படையின் விமானங்கள் தரித்துநின்ற யமூசுக்ரோ விமான நிலையத்தில் பிரெஞ்சுப்படைகள் தாக்குதலை மேற்கொண்டு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு ரஷ்யத் தயாரிப்பான சுக்கோய் ரக தாக்குதல் விமானங்களையும் எம்.ஐ.ரக உலங்குவானூர்திகள் ஐந்தையும் அழித்தன. என்ன நடந்தது? ஏன் இந்தத் தாக்குதல்களுக்கு காரணம். ஐவரிக் கோஸ்ட் படைகள் ஏன் பிரெஞ்சு முகாமின் மீது தாக்குதலை மேற்கொண்டது? போன்ற கேள்விகளுக்கு விடைகாண முன்பாகவே நிலைமைகள் மிகவும் மோசமடைந்தன. பிரெஞ்சு படைகளின் மேல் ஆத்திரம்கொண்ட பொதுமக்கள் அப்பகுதியில் இருந்த பிரெஞ்சு மக்களின் உடமைகளை அழிக்கத் தொடங்கினர். ஏராளமான பிரெஞ்சுப் பிரஜைகள் கூட்டம் கூட்டமாக பெரும் கட்டடப்பகுதிகளுக்குள் அடைக்கலம் புகுந்த நிலையில் பிரெஞ்சுப் படைகள் உலங்குவானூர்திகள் மூலம் அவர்களை மீட்டன. இந்த வகையில் பல்லாயிரக்கணக்கான பிரெஞ்சுப் பிரஜைகள் தங்களது பலகோடி பெருமதியான உடமைகளை இழந்துள்ளனர். இரண்டு வருடங்களுக்கு முன்பு இதேபோன்றதொரு நிலை எற்பட்டபோது மீண்டும் தாம் ஐவரிக் கோஸ்ட்டிற்கு செல்ல மாட்டோம் என்று கூறயவர்களில் பலர் இம்முறையும் அங்கு மாட்டிக்கொண்டனர். இதற்கிடையே ஜனாதிபதி பக்போவை பதவியில் இருந்து அகற்றும் நடவடிக்கைகளை பிரெஞ்சுப் படைகள் மேற்கொள்கின்றன என்ற வதந்தி நாட்டு மக்களிடையே பரவத் தொடங்கியது. இதற்கு ஆதாரமாக பிரெஞ்சு கனரக வாகனங்களின் நகர்வுகளும் அமைந்தன. ஐம்பதிற்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் ஜனாதிபதி மாளிகையை சுற்றிவளைத்துக்கொண்டன. இதனை எதிர்த்து பல்லாயிரம் மக்கள் திரண்டெழுந்தபோது அவர்கள் மேல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் பிரெஞ்சு தளபதி அறிக்கையொன்றினையும் வெளியிட்டார். அப்பகுதியில் அமைந்துள்ள வெளிநாட்டுப் பிரஜைகளின் தங்குமிடங்களைப் பாதுகாப்பதற்காகவே தாம் கனரக வாகனங்களை நிறுத்தியுள்ளதாயும் ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்றுவது எமது விடயம் அல்ல என்றும் நாட்டின் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அங்கு நிலைகொண்டுள்ள செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், தாம் நூற்றுக்கு மேற்பட்ட மக்களுக்கு இதுவரை சிகிச்சை செய்துள்ளதாயும் எல்லோரும் சூட்டுக்காயங்களுடன் சிகிச்சைக்கு வருவதாயும் கூறிய அவர், அனேகமாக 500 பேருக்கு மேற்பட்டோர் இக்கலவரங்களில் காயமடைந்துள்ளனர் என்றும் சிலரை காணவில்லை என்றும் கூறினார். ஆனால், பிரெஞ்சுத் தரப்பில் இருந்து இதுபற்றிக் கூறுகையில், தாம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யவில்லை என்றும் வானத்தை நோக்கியே பிரயோகம் செய்ததாயும் கூறினார்கள். இறுதியாக ஐவரிக் கோஸ்ட் ஜனாதிபதி லோறோன் பக்வோ தொலைக்காட்சியிலும் வானொலியிலும் உரையாற்றுகையில் மக்கள் அமைதியாக இருக்கும்படியும் மற்றையோர்களை ஆத்திரமூட்டும் படியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை, ஐவரிக் கோஸ்ட்டின் இராணுவ தளபதியுடன் இணைந்து பிரெஞ்சு தளபதியும் இச்சிக்கல்களை முடிவுக்கு கொண்டுவரும் வகையிலான அறிக்கையொன்றினை வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஜனாதிபதி லோறோன் பக்வோ

தற்போதைய நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் தென்னாபிரிக்க ஜனாதிபதி தபோ ம்பெக்கி ஐவரிக் கோஸ்ட் விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார். இவரது விஜயத்தின்போது புர்க்கின பாசோ அதிபர் மற்றும் கானா நாட்டின் அதிபரும் வருகைதர உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்த வாரத்தில் ஐவரிக் கோஸ்ட்டின் தற்போதைய இக்கட்டான நிலைக்கு விரைந்த முடிவொன்று சர்வதேச மத்தியஸ்தத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் என்றும் நம்பப்படுகிறது.

- உதயன் -

# நத்தார் தினத்தை முன்னிட்டு

## Financial Consulting Gmbh & Sarah Star Thun






## இணைந்து வழங்கும்

## சுவிஸ் ஜரைஞ்சகப் பாடல் போட்டி



## B.H அப்துல்கமீத்தின் பாட்டுக்குப் பாட்டு

சிறந்த பாடகர் பாடகிக்கான தெரிவும், சிறந்த பாடகர் பாடகிக்கான நேரடித்தெரிவில் வெற்றிபெறுவோருக்கு பி.எச் அப்துல்கமீத்தின் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். மற்றும் சுவிஸ்

## Magic கரோலின் இசைக்குழுவின் இசைமெட்டுக்களும்



Bern, Zürich ஆகிய மாநிலங்களின் நடைபெறும் இந் நிகழ்ச்சியின் நுழைவாயிற் சீட்டுக்கான அதிர்ஸ்டலாபம் Zürich மாநிலத்தில் குலுக்கப்படும்.

**சனி + ஞாயிறு ஆகிய 2 நாட்கள்**

1- வது பரிசு 5 பவுன் நெக்லஸ்
2- வது பரிசு 4 பவுன் நெக்லஸ்
3- வது பரிசு 3 பவுன் நெக்லஸ்
4- வது பரிசு 2 பவுன் சங்கிலி
5- வது பரிசு 1 பவுன் சங்கிலி

மற்றும் 40 வரையான ஆறுதல்பரிசுகள்.....

இடம்: 25.12.2004 சனி: Hotel National Bern, Bahnhof ற்கு அருகாமையில்( Hrischengraben)
26.12.2004 ஞாயிறு: Salmansaal, Schlieren Zürich

குறிப்பு: B.H அப்துல்கமீத்தின் நேரடித்தெரிவு நடைபெறுவதால் தெரிவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 30.10.2004 ற்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம்.
அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

Anisch Tel: 079.757 74 75 | 078.605 99 41
031.911 03 38
























- எமது நிறுவனத்தால் ஏற்கனவே வாடிக்கையாளர்களாக (Credit) இருப்பவர்களுக்கும், எம்மிடம் வங்கிக்கடன் திட்டத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்வோருக்குமான பரிசுத் திட்டம். 25.12.2004 ல் சுவிஸ் ஜரைஞ்சகப் பாட்டுப் போட்டியில் 25 வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

இதேபோல் எமது நிறுவனத்தில் மருத்துவக்காப்புறுதி (Krankenkasse)திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்தும் இணைந்து கொள்பவர்களுக்கும் பரிசுத்திட்ட முறை: பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: K.Anandan (Anisch)
Gantrischstr 11, 3052 Zollikofen
Tel:031.911 03 38 Fax:031.911 58 94
Natel: 079.757 74 75














# HEROES DAY

Saturday (12 mid day start -7 Pm finish)

**27 November 2004**

# கார்த்திகை 27 NOV

## தேசிய நினைவெழுச்சி நாள் -கார்த்திகை 27

தேசியத் தலைவரின் உரையுடன் மதியம் 12 மணிக்கு ஆரம்பம்




மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை. அவர்கள் காலத்தை உருவகிப்பவர்கள், காலத்தின் குறிப்பேட்டில் கால்பதித்துச் செல்பவர்கள். சாவு அவர்களைத் திண்டுவதில்லை. அவர்கள் காலத்தின் காவியமாக எமது தேசத்தின் ஆன்மாவில் காலமெல்லாம் நிலைத்திருப்பவர்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
(27 நவ. 1998
மாவீரர் உரையிலிருந்து)



*Best way to honour your heroes be at excel as a mark of respect*

**EXCEL** - மண்டபம்

**1 Western Gateway, Royal Victoria Dock, London E 16 1XL**



## த மி ழ் ம க் க ளி ன் அ றி வு க் க ள ஞ் சி ய மா ய் . . .

# பூபாளம் பொத்தகசாலை

தாயக வெளியீடுகள்,
அரசியல், கவிதை, அறிவியல்,
சார்ந்த நூல்கள்,
'தமிழக, கொழும்பு
சஞ்சிகைகள், பத்திரிகைகள்........




### விற்பனையில்...

01) நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி)
02) தமிழ்ப்பெயர்க் கையேடு
(மக்கட்பெயர் - 46, 000)

இவற்றுடன் மலிவு விலையில் பல சஞ்சிகைகள் (1.00, 0.50)

**22, Rue Perdonnet,
75010 Paris,
France.
Tél: 01 40 05 95 15**



# ttn தமிழ்த் தொலைக்காட்சி இணையம்

**நிகழ்ச்சி நிரல் 11-11-2004 முதல் 17-11-2004 வரை**

### வியாழன்

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 தீபாவளிக் கலாட்டா
11:00 நட்சத்திர வாழ்த்து
11:30 பட்டொளி வீசும் தீபாவளி (வாழ்த்து நிகழ்ச்சி)
12:30 தீபாவளி நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து எங்க அண்ணா
16:30 தீபாவளி விருந்தினர்
17:00 ttn கலைமாலை (டென்மார்)
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 சொர்க்கம்
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 பட்டொளி வீசும் தீபாவளி (வாழ்த்து நிகழ்ச்சி)
22:00 தாயக வரலாற்றுச் சுவடு
23:00 சித்திரம் பேசுதடி

### வெள்ளி

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புத்தம் புதுக்காலை மறவன்புலவு சச்சிதானந்தம்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 தீபாவளிக் கலாட்டா
11:00 நட்சத்திர தீபாவளி
11:30 படலைக்குப் படலை
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **வீரத்திருமகன்**
16:30 ஒளித்தடம் (குறும்படம்)
17:00 ஜேர்மன் நேரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 அக்கினிப் பறவைகள்
23:30 திரைவிருந்து **சூப்பர் குடும்பம்**

### சனி

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07.03 இசைமுழக்கம்
07.30 நிருத்தியரங்கம்
08:00 செல்வச் சன்நிதி தேர்பவணி
08:30 புலரும் பொழுது புலரும்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 மலரும் மொட்டுக்கள்
11:00 தலைத் தீபாவளி இயக்குனர் சுகி கணேசன்
12:00 முத்துவிழா
12:30 பார்த்தேன் பகர்ந்தேன்
13:00 ஹலிவூட் நேரம் (தீபாவளித் திரைக்கண்னோட்டம்)
13:30 செய்திநேரம்
14:00 கோலிவூட் பார்வை
15:00 திருமலை இயக்குனர் ரமணா
15:30 இசைமாலை
16:00 சிகரத்தை நோக்கி
16:30 கொஞ்சும் சலங்கை
17:00 நாடி
17:30 வண்ணச்சிறகடித்து
18:30 தாயக வலம்
19:00 யுவன் சய்கர்ராஜவுடன் இசை சந்திப்பு
19:30 பாரதிராஜாவுடன் சந்திப்பு
20:00 செய்தி நேரம்
20:30 யாழ் பல்கலைக்கழக விவரணம்
21:00 நையாண்டி மேளம்
21:30 திரைவிருந்து **கில்லி** தீபாவளி (புதிய திரைப்படம்)

### ஞாயிறு

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07.30 இசை முழக்கம்
08:00 நிருத்தியயரங்கம்
08:30 சாட்டி தேவாலய திருயாத்திரை
09:00 ஒளிக்கீற்று
10:00 வணக்கம் ஐரோப்பா
11:00 புதினக்கண்ணாடி
11:30 நாவூற வாயூற
12:30 முளைவிடும்பதியன்
13:00 திரைமுகம்
13:30 செய்தி நேரம்
14:00 லியோனியின் சிறப்பு பட்டிமன்றம்
15:00 சினி கேள்வி நேரம்
16:00 சிகரத்தை நோக்கி
16:30 குட்டி யாழ்ப்பாணம்
17:00 இயக்குனர் தங்கர் பச்சானுடன் சந்திப்பு
17:30 ஓவியா
18:00 படலைக்குப் படலை
18:30 ஒளித்தடம் (குறும்படம்)
19:00 வைத்தியலிங்கம் சேஷா
19:30 பாரதிராஜாவுடன் சந்திப்பு
20:00 செய்தி நேரம்
20:30 யாழ் பல்கலைக்கழக விவரணம்
21:00 சுப்பர்மடம்
21:30 திரைவிருந்து **காக்க காக்க**

### திங்கள்

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புத்தம் புதுக்காலை வழக்கறிஞர் பக்தவத்சலம்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 அரும்புகள்
11:00 நகைச்சுவை நேரம்
11:30 தாயகவலம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **அம்மன் கோவில் வாசலிலே**
16:30 நினைவலைகள்
17:00 கலைச்சரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 சொர்க்கம்
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 நோர்வே நேரம்
21:30 திரைவிருந்து **பாண்டவர் பூமி**

### செவ்வாய்

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 ஹாலிவுட் நேரம்
11:00 வைத்தியலிங்கம் ஷோ
11:30 தாயக வரலாற்றுச் சுவடு
12:30 இன்றைய நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **விடிஞ்சா கல்யாணம்**
16:30 புதினக் கண்ணாடி
17:00 அரும்புகள்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 சொர்க்கம்
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 கோலிவூட் பார்வை
21:30 தாயகவலம்
22:00 எட்டாத கொப்பெல்லாம் தட்டிவா
23:00 செய்திக் கண்ணோட்டம்

### புதன்

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புத்தம் புதுக்காலை சிறப்பு விருந்தினர் சகோதரி ரஞ்சனி
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 இயக்குனர் தங்கர் பச்சானுடன் சந்திப்பு
11:00 திரைமுகம்
11:30 நையாண்டி மேளம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **உனக்காகப் பிறந்தேன்**
16:30 முளைவிடும் பதியன்
17:00 அக்னிப் பறவைகள்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 சொர்க்கம்
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 தமிழீழ பொருண்மிய கண்காட்சி
21:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
22:00 ஆடுகளம்
23:00 நடிகர் விஜய்யுடன் சந்திப்பு

**TTN,. 5-7, Rue Emile Zola, 93120 La Courneuve**

**Tél : 0033 1 48 39 34 29/Fax : 0033 1 48 39 31 36**

**த ர ணி எ ங் கு ம் வ ா மு ம் த மி ழ ரி ன் பி ம் ப ம்**


# பாசல் ரவி கடை

**ஆம் இது நிஜம், புதிய டிசைன்களில், அனைத்தும் 70%கழிவில்**



| | | |
|---|---|---|
| பஞ்சாபி | 5-SFRல் | இருந்து |
| டெனிம் | 5-SFRல் | இருந்து |
| சேட் | 5-SFRல் | இருந்து |
| சாறி | 7-SFRல் | இருந்து |
| T-Shirt | 1-SFRல் | இருந்து |
| Audio-CD- | 1-SFRல் | இருந்து |
| மணிக்கூடு | 9-SFRல் | இருந்து |





**தங்கநகைகள் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். கல்லு, முத்து, Bombay Design உட்பட ஒன்றுக்குமே கூலி அறவிடப்படமாட்டாது. எடைக்கு மட்டுமே பணம் செலுத்தினால் போதும்.**

பாசல் ரவி கடை - *061 / 272 90 30 - 061/272 09 90 - 079/356 22 78*

# அரசியல் படுகொலைகளின் உண்மைகள் !

## தமிழர் மனித உரிமைகள் மையம் நேரில் கண்டறிந்தது

இலங்கைத் தீவில், தமிழர்களின் தாயக பிரதேசமான வடக்கு கிழக்கில், கடந்த இருபது வருடங்களாக நடைபெற்ற அரசியல் படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள், காணாமல் போனோர், அரசியல் கொள்ளைகள் போன்றவற்றை கிழக்கில் மாகலூயாவிலிருந்து வடக்கில் காங்கேசன் துறை வரை சென்று நேரில் கண்டறிந்ததுடன், இவற்றில் சம்பந்தப்பட்ட சாட்சிகளுடன் உரையாடி உண்மைகளை அறிக்கையாக தொகுத்து சர்வதேச சமுகத்தின் பார்வைக்கு, பிரான்சில் தலைமைச் செயலகத்தை கொண்டு இயங்கும் தமிழர் மனித உரிமைகள் மையம் (TCHR) வெளியிட்டு வைத்துள்ளது.

தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தினால் மேற்கொள்ளப்பட்ட இவ் விஜயத்தில், இதன் பிரதிநிதிகளான பிரித்தானியாவைச் சேர்ந்த டியெற்றி மக்கோனால், பிரான்சை சேர்ந்த விசுவலிங்கம் கிருபாகரன், நெதர்லாந்தை சேர்ந்த சின்னையா இந்திரன், சுவிஸ்லாந்தைச் சேர்ந்த தம்பிராசா கெங்காதரன் ஆகியோருடன் பல உள்நாட்டு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இவ்விஜயத்தின் போது மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, வன்னி, யாழ்ப்பாணம், மலைநாடு போன்ற பிரதேசங்களுக்கு சென்று அங்குள்ள அரச சார்பற்ற பிரதிநிதிகள் (NGOS), நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், வழக்கறிஞர்கள், சமயத்தலைவர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோரை சந்தித்தனர்.

கடந்த காலங்களில் வேறுபல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கைத் தீவுக்கு விஜயம் செய்து அறிக்கைகளை வெளியிட்டிருந்தாலும், தமிழர் மனித உரிமை மையமே முதல் முதலாக போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்று அங்கு படுகொலைகள், பாலியல் வன்முறை, சித்திரவதை போன்ற மனித உரிமை மீறல்களுக்கு ஆளானவர்களையும் அவற்றுக்கான கண்கண்ட சாட்சிகளையும் சந்தித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

### தேசிய ஆணைக்குழுவின் உள்நோக்கம்

இவ்வறிக்கையில், கொழும்பு நிலைமைகள் என்ற தலைப்பின் கீழ் அரசியல் அமைப்பு, பயங்கரவாதச் தடைச்சட்டம் (PTA), சிறீலங்காவின் தேசிய மனித உரிமை ஆணைக்குழு, அண்மைக் காலங்களில் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட புதிய தேர்தல் அடையாள அட்டைகள் போன்ற விடயங்கள் அடக்கப்பட்டுள்ளன. தமிழர் மனித உரிமை மையம் தனது அறிக்கையில், தேசிய மனித உரிமை ஆணைக்குழுபற்றி கூறியதாவது, ஆணைக்குழு வடக்கு கிழக்கில் போர் காலங்களில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட எந்த மனித உரிமை மீறல்களையும் பரீசிலிக்க முன்வராதது வருத்தத்துக்குரியது என்றும் இவ் ஆணைக்குழு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தகவல்களை மட்டுமே தேடிப் பிரசுரிக்கிறார்கள் என்றும் குற்றம் சாட்டியுள்ளது. இதற்கு உதாரணமாக சிறுபிள்ளைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தில் சேர்க்கிறார்கள் என நிரூபிக்கும் முயற்சிக்கு பெருந்தொகையான பணத்தை செலவழித்த இவ் ஆணைக்குழு, கிழக்கிலே நடைபெற்ற படுகொலைகள், பாலியல் வன்முறைகள், சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் போன்ற பல்வேறு மனித உரிமை மீறல்களை செய்த சிறீலங்கா பாதுகாப்பு படை பற்றி மௌனம் சாதிப்பது இவ் தேசிய ஆணைக்குழுவின் உள்நோக்கங்களை யாவரும் அறியக் கூடியதாக உள்ளதாக த.ம.உ. மையத்தின் அறிக்கை கூறுகிறது.

இதே அறிக்கையில், கொழும்பில் உள்ள சர்வதேச செய்தி ஸ்தாபனங்களுக்கு வேலை செய்யும் சிங்கள ஊழியர், தமது சிங்கள இனத்தின் கருத்துக்களை இச் செய்தி ஸ்தாபனம் மூலம், மேற்கு உலகுக்கு தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை நியாயப்படுத்துவது தெட்டத்தெளிவாக தெரிவதாகவும் கூறப்பட்டுள்ளது. அடுத்து மட்டக்களப்பு விஜயம் பற்றி இவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது... மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற பெரும் தொகையான படுகொலைகளை அறிக்கையில் பட்டியலிட்டுடன் இவ் படுகொலைகள் எங்கு, எப்படி, எவரால், எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் போன்ற தகவல்களுடன் சம்பவங்களிலிருந்து உயிர்தப்பிய நபர்கள் சாட்சியங்களுடன் பிரசுரமாகியுள்ளது.

### மட்டக்களப்பு - அம்பாறை

அத்துடன் விசேட அதிரடிப்படையின் (STF) மிருகத்தனமான நடவடிக்கைகள், சித்திரவதைகள், படுகொலைகள் பற்றிய விபரங்களையும் இவ் அறிக்கை வெள்ியிட்டுள்ளது. அத்துடன் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் குறைந்தது 17,500 விதவைகள் இராணுவ நடவடிக்கைகளினால் குடும்பத்தலைவர்களை இழந்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது. படுகொலைகள் பற்றி இவ் அறிக்கையில், சாட்சிகளுடன் விபரிக்கப்பட்ட படுகொலைகள் பின்வருமாறு: மகிழடித்தீவு படுகொலைகள், கொக்கட்டிச் சோலை படுகொலை, புல்லுமலைப் படுகொலை, தோணிதொட்டுமடு படுகொலை, சிந்தாண்டி படுகொலை, வந்தாறுமூலை படுகொலை, புணனை படுகொலை, பெண்டுகள்சேனை படுகொலை, உடும்பன்குளம் படுகொலை, அடப்பாலம் படுகொலை, வீரமுனை படுகொலை, சந்துரூகொண்டான் படுகொலை.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகளான: அம்பாறை படுகொலை, நாரப்பட்டிமுனை படுகொலை, பன்ஸி கவுஸ் கல்முனை படுகொலை, காரதீவு படுகொலை, நிந்தவூர் படுகொலை, அக்கரைப்பற்று மெதடிஸ் தேவாலயம், ஆலடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலய படுகொலை, பொத்துவில் படுகொலை, சாவல்கடை படுகொலை, சென்றல் முகாம் படுகொலை, திரல்கேணி படுகொலை போன்ற படுகொலைகள் இவ்அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் சிங்கள குடியேற்றங்கள் எப்படியாக படிப்படியாக அதிகரித்துள்ளது என்பதனை அட்டவணையுடன் இவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் தற்பொழுது அம்பாறை, திருகோணமலை பட்டினங்களும், வேறு சில கிராமங்களும் சிங்கள மயமாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

---

**ஈ.பி.டி.பி.யினருடைய இணையத்தளத்தில் அகலமரணமடைந்த தமது உறுப்பினர்களை கதாநாயகர்கள் (Heros) என்ற வரிசையில் பெயர் பட்டியலிட்டு வந்துள்ளனர். ஆனால் 1999ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் தினமுரசு ஆசிரியருமான திரு நடராசா அற்புதராசா (ரமேஷ்)ன் பெயர் ஈ.பி.டி.பி.யினருடைய பட்டியலில் காணப்படவில்லை**

---

### திருகோணமலை

திருகோணமலை விஜயம் பற்றி இவ் அறிக்கையில் கூறுப்பட்டுள்ளதாவது, இம்மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகளான. கந்தளாய் படுகொலை, சம்பூர் – மூதூர் படுகொலை, சாம்பல்தீவு படுகொலை, தம்பலகாமப் படுகொலைகள், முள்ளிப் பொத்தானை படுகொலை, பெறுவில் மணற்சேனை அகதிமுகாம் படுகொலை, பன்குளப் படுகொலை, இருதயபுர படுகொலை, அத்துடன் தற்போதைய யாழ்ப்பாண மாவட்ட தளபதியான கேணல் தென்னக்கோன், திருகோணமலையில் சேவை செய்யும் காலத்தில் காணமல் போன ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் பல சைவ கோயில்கள் இயங்க முடியாத நிலையில் உள்ளதாகவும், சரித்திர புகழ் வாய்ந்த பாடல் பெற்ற திருத்தலமான திருக்கோணஸ்வர ஆலயத்தை மறைக்கும் நோக்குடன் ஓர் புத்த கோயில் பிரேரிக் கோட்டையில் நிறுவப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த எந்த தமிழ் மக்ளும் இதுவரையில் மீள குடியமர்த்தப்படவில்லை என்று கூறும் அதேவேளை, பெருந்தொகையான சிங்கள மக்கள் தமிழர்களின் நிலங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### வன்னி

அடுத்தபடியாக வன்னி விஜயம் பற்றி கூறப்பட்டுள்ள இந்த அறிக்கையில், வன்னி – முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போதைய கல்வி நிலைபற்றியும், வடக்குகிழக்கில் ஏறக்குறைய 5,817 தமிழ் ஆசிரியர் பற்றாக் குறைநிலவுவதாகவும் கூறப்பட்டுள்ளது. இக்குழு வன்னியில் தமிழீழ கல்வி பொறுப்பாளர் திரு. இளம்குமாரன் அவர்களை சந்தித்து உரையாடியுள்ளது. சிறீலங்கா அரசு தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல முடியாது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தற்போதைய தரப்படுத்தல் முறை, முன்னையதைவிட மிகவும் மோசமானதாக உள்ளதாக கூறப்பட்டுள்ளது. முன்னைய தரப்படுத்தல் வெளிப்படையாக யாரும் அறியக்கூடியதாக இருந்ததாகவும், தற்போதைய தரப்படுத்தல் மறைமுகமானதாக உள்ளதாகவும், தமிழீழ கல்வி சேவை பொறுப்பாளர் திரு.இளங்குமரன் அவர்கள் கூறியதை ஆதாரம் காட்டி எழுதப்பட்டுள்ளது. த.ம.உ. மையத்தினர், வன்னியில் தமிழீழ காவற்படை பொறுப்பாளர் திரு.நடேசனை சந்தித்து உரையாடியுள்ளனர். தமிழீழ காவற்படையின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் தமிழீழ சிறைச்சாலையை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். இந்த அறிக்கையில் திரு. நடேசனின் அக்கறை என்ற தலைப்பில் நடேசன் அவர்களினால், விஜயம் செய்த குழுவினரிடம் கேட்கப்பட்ட சில சந்தேகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு.நடேசன் கூறியதாவது, சிறீலங்கா, ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவராக மிக நீண்ட காலமாக இருந்து வருகிறது. அப்படியானால் 1948ம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களான சிங்கள குடியேற்றங்கள், கல்வி தரப்படுத்தல், தனிச் சிங்கள சட்டம், பயங்கரவாதச் சட்டம், பல தரப்பட்ட இனக்கலவரங்கள் போன்றவை சர்வதேச சட்டங்களுக்கு மிகவும் முரண்பட்டவை. அப்படியானால் இவ் ஐ.நா. சபையும், சர்வதேச சமுதாயமும் முன்பு சிறீலங்கா மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இவற்றுக்கு நடவடிக்கை எடுத்து தடுக்க தவறியவர்கள், தற்போது சர்வதேச சட்டங்கள் பற்றி பேசுகிறார்கள், என்று கூறியதாக கூறப்பட்டுள்ளது.

### கிளிநொச்சி

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 'மனித புதை குழிகள்' பற்றியும் இவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இக்குழு வன்னியில் உள்ள மற்றைய நலன்புரி அமைப்புக்களான காந்தரூபன் அறிவுச்சோலை, லெப்.கேணல் நவம் அறிவுக் கூடம், செஞ்சோலை சிறுமிகள் இல்லம், வெற்றிமனை, மலர்சோலை, நிறைமதி இல்லம், செந்தளிர் இல்லம், குருகுலம் சிறுவர் இல்லம் போன்றவை பற்றியும் கூறப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ள இன்னுமொரு முக்கியவிடயம் என்னவெனில் முன்பு இலங்கைதீவின் தென்பகுதியிலிருந்து மத்தியகிழக்குக்கு வேலை தேடிச்சென்ற நெறிப்படுத்தப்பட்ட தொழிலாளர்களான மேசன், தச்சுதொழிலார், மின்சாரம் போன்றவற்றில் தொழில் செய்வோர், தற்போழுது வன்னிக்கு சென்று உழைக்கின்றனர் என்றும், இவர்கள் மற்றைய நாடுகளுக்கு செல்வது போலவே ? தமிழீழ குடிவரவு சுங்க பிரிவுகளின் சம்பிரதாயங்களை முடித்தபின்னரே வேலை செய்கிறர்கள் என த.ம.உ. மையத்தினரின் அறிக்கை கூறுகிறது.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண விஜயம் பற்றி இவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் எதிர் நோக்கும் பிரச்சனைகள், பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவ வலயம் பாதுகாக்கப்படுகிற முறைகள், யாழ்ப்பாண குடாநாட்டில் முஸ்லிம்களின் வாழ்வும், வாணிபம், மீன்பிடித் தொழிளார்கள் எதிர் நோக்கும் கஷ்டங்கள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் திரு மயில்வாகனம் நிர்மலராஜா அவர்களின் கொலை வழக்கின் முன்னேற்றம் அற்ற நிலைபற்றியும், யாழ்பட்டினத்தில் இராணுவ அழிப்பினால் தரைமட்டம்மாக்கப்பட்ட யாழ் வழக்கர்டுமன்றம், வாடிவீடு, நூதனசாலை, மாநகர சபைக் கட்டடம், றீகல் சினிமா கட்டடங்கள் இன்றும் சிறீலங்கா அரசின் நாசகார வேலைகளின் சின்னங்களாக காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

மலை நாட்டுக்கு விஜயம் செய்திருந்த இக்குழுவினர், அங்கு தோட்டத் தொழிலாளர் சமுகச் சங்கத்தின் செயலாளர் நாயகம் திரு.ஓ.எ.ராமையாவுடன் சந்தித்து உரையாடி தோட்டத் தொழிலாளர் எதிர்நோக்கும் சமுக பிரச்சகைள பற்றி இவ் அறிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. திரு ராமைஜா அவர்கள் சுருக்கமாக கூறியதாவது '1948ம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும்' என்பதே தமது கோரிக்கை.

கடந்த இருபது வருடகால யுத்தம், தோட்டத் தொழிலாளர் வாழ்க்கையிலும் மிகவும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாகவும், தோட்டத் தொழிலாளர் சிலர் வன்னியில் குடியேறியுள்ளதாகவும் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் ஈ.பி.டி.பி. குழுவினர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி.யினருடைய இணையதள்தில் அகாலமரணமடைந்த தமது உறுப்பிர்களை கதாநாயகர்கள் (Heros) என்ற வரிசையில் பெயர்பட்டடியலிட்டு வந்துள்ளனர் என்றும், ஆனால் 1999ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பிரும் தினமுரசு ஆசிரியருமான திரு நடராசா அற்புதராச (ராமேஷ்)ன் பெயர் ஈ.பி.டி.பி.யினருடைய பட்டியலில் காணப்படவில்லை. ஆகையால் முன்பும் தற்போதும் நிலவிவரும் ஈ.பி.டி.பி.யின் உள்பூசலில் ஏற்பட்ட கொலைகள் என நம்பப்படுபவை, ஊர்யிதமாகின்றதுபோல் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

# தேசிய மாவீரர் நாள் 2004

எங்களின் விடுதலைக்காய், தங்களை விதையாகத் தந்தோருக்கு
வணக்கம் செலுத்த அணி திரள்வோம்...



## FRANCE பிரான்ஸ்

**28.11.2004** ஞாயிறு,
பிற்பகல் 14.00 மணி

**Le Grand Dôme de Villebon**

**Rue du Grand-Dôme**
**91140 Villeebon-sur-Yvette.**

மேலதிக தொடர்புகளுக்கு..

**01 43 58 11 42**

## SWISS சுவிஸ்

**27.11.2004** சனி,
பிற்பகல் 13.00 மணி

**Forum Fribourg.**

வேக வீதியில் *Forum Nord* இல் வெளியேறி 200 மீற்றர் தூரம் அல்லது பிரதான தொடருந்து நிலையத்திலிருந்து *Forum Fribourg* எனக் குறிப்பிடப்பட்ட பேருந்தில் கடைசித் தரிப்பிடம்.

மேலதிக தொடர்புகளுக்கு..

**012 733 407**






# காடுகள் கலங்குகின்றன

வீரப்பன் ஆண்டுகள் பலவாய்க் காட்டிற்குள் வாழ்ந்தவர். காட்டின் ஒவ்வொரு அசைவும் அறிந்தவர். `காக்கை குருவி எங்கள் சாதி' என்று மட்டுமல்லாமல், கரியும் புலியும் எங்கள் கூட்டம் என்று வாழ்ந்தவர் அவர்.

`அடுத்தடுத்து வந்த அரசுகளால் புறக்கணிக்கப்பட்ட



மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் துணைவராக, அவர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பவராக வீரப்பன் வாழ்ந்தார்' என்றும், `பெண்களை இழிவு படுத்துவது ஆண்களின், குறிப்பாகக் காவல்துறையினரின், உரிமை என்று ஒப்புக்கொள் ளப்பட்ட அந்த வனச் சூழலில், ' பெண்களின் கண்ணியத்தை மதிப்பவராக அவர் வாழ்ந்தார்' என்றும், இந்தியன் எக்ஸ்பிரஸ் (24.10.2004) நாளேடு எழுதுகின்றது.

அவருடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்த, மூன்று மாநிலங்களுக்கு உரிய வனப்பகுதியில், 8 முதல் 10 விழுக்காடு வரை காடுகள் விரிந்திருக்கின்றன என்னும் செய்தி நமக்கு வியப்பைத் தருகிறது. அதே காலகட்டத்தில், மற்ற பல வனப்பகுதிகளில் காடுகள் குறைந்திருக்கின்றன. இச்செய்தி, வீரப்பன் உண்மையான வனப்பாது காவலராக இருந்திருக்கின்றார் என்பதைப் புலப்படுத்துகின்றது.'

கேரளாவிலிருந்து உட்புகுந்து நம் காட்டு மரங்களை வெட்டிச் செல்வோரையும், அருமருந்தான மூலிகைகளைக் கவர்ந்து செல்வோரையும் இனி யார் தடுப்பார்கள்?

காடுகள் கலங்குகின்றன.

வீரப்பன் வாழ்க்கை முடிந்துபோனாலும், முடிவற்ற பல ஐயங்கள் உருவாகியுள்ளன.

வீரப்பன், சேத்துக்குளி கோவிந்தன், சந்திர கவுண்டர், சேதுமணி ஆகிய நால்வரையும் ஒரு மோதலில் கொன்று விட்டதாகக் காவல்துறை கூறுகின்றது. காவல்துறைத் தரப்பிலிருந்து வெளிவந்திருக்கும் சில செய்திகளும், அவற்றை யொட்டிய நம் ஐயங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

**மக்கள் கண்காணிப்பகம் தன் அறிக்கையொன்றில், `காவல்துறையின் நடவடிக்கையால் மரணம் விளைகின்ற அனைத்து நிகழ்வுகளிலும், நீதித்துறை நடுவரைக் கொண்டு கட்டாயம் ஆய்வு நடத்த வேண்டும் என்னும் தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, வீரப்பன் கொலை பற்றிய விசாரணைக்கு ஏன் இன்னும் ஆணையிடவில்லை?' என்று கேட்டுள்ளது, ஏன் அவ்வாறு செய்யவில்லை?**

1. வெள்ளைத்துரை என்னும் உதவி ஆய்வாளர், உளவாளி ஒருவருடன் வீரப்பனைப் பார்க்கக் காட்டுக்குள் சென்றபோது, எறிகுண்டு, துப்பாக்கி ஆகியனவற்றை எடுத்துச் சென்றதாகவும், வீரப்பனின் ஆட்கள் அவரைச் சோதனை செய்யவில்லை என்றும் கூறுகின்றனர். எப்படி நம்புவது?

2. வீரப்பனின் ஆட்கள் பயன்படுத்தியதாகக் காவல்துறை கூறும் ரெமிங்டன் துப்பாக்கியால் ஏற்பட்டிருக்கக்கூடிய அடையாளம் எதுவும், அந்த ஊர்தியில் (ஆம்புலன்ஸ் வாகனம்) காணப்படவில்லையே, ஏன்?

3. `ஆம்புலன்ஸ்' ஊர்தியை இதுபோன்ற செயல்களுக்குப்ப யன்படுத்துவது, தவறான முன்மாதிரி ஆகிவிடாதா?

4. ஊர்தியின் அமைப்பையே மாற்றியதோடு அல்லாமல், தங்கள் ஆளையே ஓட்டுநராகவும் அமர்த்தியுள்ள அதிரடிப்படையினர், அந்த வண்டிக்குள் மயக்கவாயுவை வீசும் கருவியைப் பொருத்தி, வீரப்பனை உயிரோடு பிடிக்க ஏன் முயற்சி செய்யவில்லை என்று, கருநாடக மாநில முன்னாள் அதிரடிப்படை அதிகாரி (டி.ஜி.பி) சங்கிலியானா வினா எழுப்பியுள்ளாரே, அதற்கு

**-சுப.வீரபாண்டியன்**

விடை என்ன?

5. மக்கள் கண்காணிப்பகம் தன் அறிக்கையொன்றில், `காவல்துறையின் நடவடிக் கையால் மரணம் விளைகின்ற அனைத்து நிகழ்வுகளிலும், நீதித்துறை நடுவரைக் கொண்டு கட்டாயம் ஆய்வு நடத்த வேண்டும் என்னும் தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டு தலின்படி, வீரப்பன் கொலை பற்றிய விசாரணைக்கு ஏன் இன்னும் ஆணையிடவில்லை?' என்று கேட்டுள்ளது. ஏன் அவ்வாறு செய்யவில்லை?

6. அயோத்திக்குப்பம் வீரமணி, வெங்டேசப் பண்ணையார், இராசாராம் முதலான பலரும் மோதல் நிகழ்வுகளில் காவல்துறை யினரால் கொல்லப்பட்டுள்ளார். அனைத்து மோதல்களிலும், நெற்றியிலேயே காயம்படுவதும், வெள்ளைத்துரை என்பவரே மோதல்களில் ஈடுபட்டிருப்பதும், காவல்துறையினருக்குச் சின்னச் சின்ன சிராய்ப்புகள் மட்டுமே எப்போதும் ஏற்படுவதும் எப்படி?

7. வீரப்பன் கொலை செய்யப்பட்ட செய்தி வெளியா னவுடன் அதிரடிப்படையினர் இருப்பிடங்களில் பட்டாசுகள் வெடிக்கப்பட்டனவே, எப்படி? காட்டிலிருந்த அவர்கள் முன்கூட்டியே பட்டாசுகளை வாங்கி வைத்திருந்தனர் என்பதுதானே உண்மை. திட்டமிட்ட கொலையாக அது இருக்குமோ என்ற ஐயத்தை இது வலுப்படுத்துகின்றதல்லவா?

8. வீரப்பன் கண் அறுவைக் காக மருத்துவ மனைக்குச் சென்று வருவதாய்க் கூறப் படுகின்றது. கண் அறுவைக்கு முன்னும் பின்னும் முகச்சவரம் செய்யக்கூடாது என்று மருத்துவர்கள் கூறுவர். ஆனால், வீரப்பன் முகச்சவரம் செய்யப் பட்டு இருக்கிறாரே, எப்படி?

9. அதே ஆம்புலன்ஸ் ஊர்தியை பலவிடங்களில், பல நேரங்களில் ஏற்கனவே பார்த்து ள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். அந்த ஊர்தி அப்போதுதான் தயாரிக்கப்பட்டது என்று அதிரடிப்படையினர் கூறுகின்றனர். எது உண்மை?


10. வீரப்பனின் நெற்றிப் பொட்டில் உள்ள காயம், மிக அருகில் நின்று சுடப்பட்டதைப் போல அல்லது தானே சுட்டுக் கொண்டது போல அல்லவா உள்ளது?

11. தமிழ்நாட்டில் நடப்பது சட்டத்தின் ஆட்சியா? காவல் துறையினரின் ஆட்சியா? குற்றஞ்சாட்டப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் கொண்டு நிறுத்தாமல், மோதல் என்ற பெயரில் சுட்டுத் தள்ளுவதன் மூலம், பின்புலத்தில் இருக்கக்கூடிய பல குற்ற வாளிகள் தப்புவதற்கு வழிசமைத் துக் கொடுப்பதாக ஆகிவிடாதா?

விசயகுமாரின் துப்பாக்கி ஓசைகளுக்கிடையே, இந்த வினாக்களும் மக்களின் செவிகளில் விழாமலா போகும்?


# 'காலத்தை வென்றவன்', 'போரும் சமாதானமும்' நூல்கள் அமெரிக்காவில் வெளியீட்டு வைப்பு

அமெரிக்கா நியூயேர்சி மாநிலத்தில் கடந்த 6ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை தமிழ்ச் சங்க வருடாந்த ஒன்றுகூடலில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்



குழு இரண்டு வரலாற்று ஆவணங்களை வெளியீட்டு வைத்துள்ளது.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் 50வது அகவை எட்டுகின்ற காலகட்டத்தில், அவருடைய பன்முகத்தன்மையை வெளிக்காட்டுகின்ற காலத்தை



வென்ற தேசியத் தலைவரின் நிழல் படத்தொகுப்பும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசகரும் தத்துவாசிரிய ருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் புதிய வெளியீடான போரும் சமாதானமும் என்ற ஆங்கில



ஆய்வு நூலும் வெளியீட்டு வைக்கப்பட்டன.

உலகத் தமிழர் ஒருங்கி ணைப்பு குழுத் தலைவர் டாக்டர் ஜெயலிங்கம் அவர்கள் தேசியத் தலைவரின் ஆவண படத்தொகுப்பை அறிமுகம் செய்து வெளியிட்டு வைக்க, திரு.மனோரஞ்சன் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

விடுதலைப் புலிகளின் இராணுவ அரசியல் போராட்ட வரலாற்றை சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படைகளைக் கொண்டு மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலை விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் திரு.வி.உருத்திரகுமார் அவர்கள் ஆய்வுரை நிகழ்த்தி வெளியிட்டு வைக்க, அமெரிக்க இலங்கை தமிழ்ச் சங்க தலைவர் திரு. சந்திரநாதன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர் வணபிதா கருணாரட்ணம் அவர்கள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சியிலிருந்து வருகை தந்து பங்குபற்றியிருந்தார்.

# இலங்கை - இந்திய பாதுகாப்பு....

(06ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது - இந்திய உயர் அதிகாரிகளின் தூதுக்குழு கொழும்புக்கு வந்தகாலம் எது என்பதே. புலிகளின் தூதுக்குழு ஐரோப்பாவில் நின்றிந்த வேளை இந்தியத்தூதுக்குழு கொழும்புக்கு விஜயம் செய்தது. இதில் ஒரு செய்தி இருக்கக்கூடும். அது என்னவெனில் - ஐரோப்பிய நாடுகள் புலிகளின் இராஜீய அந்தஸ்தை உயர்த்தும் விதத்தில் அவர்களை விருந்தோம்பியது புதுடில்லிக்கு பிடிக்காமல் இருந்திருக்கலாம்.

இது காரணமாகவே, புலிகள் ஐரோப்பாவில் நின்றிருந்த காலகட்டத்தில் கொழும்புக்கு தனது தூதுவர்களை அனுப்பியதன் மூலம், புதுடில்லி சமாதானம் செய்யும் நாடுகளுக்கு அவற்றிற்கு உள்ள வரையறைகளை உணர்ந்த முற்பட்டிருக்கக்கூடும். அதாவது இந்தியாவை சமாதான முயற்சிகளுக்கு கோட்பாட்டு ரீதியில் பொறுப்புக் கூறவல்ல ஒரு தரப்பாக மாற்ற மேற்கு நாடுகள் எடுத்துவரும் முயற்சிகள், எதிர்பார்த்த பலன்களைத் தரத்தவறி விட்டனவா? எனக் கேட்கத் தோன்றுகிறன்றது.

உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது பற்றிய இறுதி முடிவுகள் எடுக்கப்படும் போதே இது பற்றி தீர்மானகரமான எதையாவது கூறலாம்.

புலிகள் ஐரோப்பாவில் நின்றிருந்த வேளை புதுடில்லி தனது தூதுவர்களை கொழும்புக்கு அனுப்பியதன் மூலம் ஐரோப்பாவிற்க உணர்த்தப்பட்ட செய்திக்கு, மேற்கு நாடுகள் காட்டப்போகும் எதிர்வினை என்ன என்பதும் இங்கு முக்கிமானது. உடன்படிக்கை மேற்கிற்கு எதிரானத அல்ல, மாறாக சமாதானம் செய்யும் நாடுகளுக்கு அவர்களுடைய வழிகளை இலகுவாக்கிக் கொடுக்கும் நோக்கிலானது என்று கொழும்பிலுள்ள சில விமசகர்கள் கூறுகின்றார்கள். அதாவது இனியொரு சண்டை மூண்டால் இந்தியாவும் பங்குபற்றக்கூடும் என்ற ஒரு நிலையைத் தோற்றுவிப்பதன் மூலம் புலிகளை யுத்தமல்லாத வழிகளில் சிந்திக்க வைத்து இடைக்கால நிர்வாக ஏற்பாட்டைக் குறித்து அவர்களின் நிலைப்பாடுகளில் நெகிழ்சியை ஏற்படுத்த இந்த உடன்படிக்கை உதவக்கூடும் என்ற வாதத்தின் அடிப்படையில், இது சமாதானம் செய்யும் நாடுகளைப் பொறுத்தவரை அவர்களுடைய வழிகளை இலகுவாக்கி கொடுக்கக்கூடியது என்றும் இந்த விமசகர்கள் கூறிவருகிறார்கள்.

ஆனால் இடைக்கால நிர்வாக ஏற்பாடு ஒன்றைப் பொறுத்தவரை இந்தியாவிடம் உள்ள சித்திரமும் மேற்குநாடுகளிடம் உள்ள சித்திரமும் ஒன்றல்ல என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

சமாதானம் என்று வெளியாட்கள் கருதும் ஒரு சதுரத்துக்குள் விடுதலைப் புலிகள் என்றைக்குமே அடங்கி நின்றதில்லை. என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். தமிழர்களின் கடந்த அரைநூற்றாண்டு காலமாக எத்தனையோ உடன்படிக்கைகளை கண்டுவிட்டார்கள். உடன்படிக்கைகள் எழுதப்படுவதும் பின்பு கிழித்தெறியப்படுவதும் அல்லது முறிக்கப்படுவதும் அல்லது காலாவதி ஆகிப்போவதுமாக, கடந்த சுமார் அரை நூற்றாண்டு கால`தமிழர்களின் வரலாறு எனப்படுவது, முறிக்கப்பட்ட உடன்படிக்கைகளின் வரலாறாகவே காணப்படுகிறது.

தற்சமயம் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை அதிசயமாக அற்புதமாக சுமார் முப்பது மாதங்களைக் கடந்து அமுலில் உள்ளது. இது எப்பொழுது முறிக்கப்படும்? அல்லது காலாவதியாகும்? இது முறிக்கப்படுவதற்கிடையில் உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை கைசாத்திடப்படுமா?, அல்லது அது கைச்சாத்திடப்படுவதன் மூலம் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை காலாவதி ஆகுமாறு செய்யப்படுமா?, அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையும் உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையும் சமாந்தரமாக வாழுமா? என்பதெல்லாம் தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு பிரச்சனையே அல்ல. ஏனெனில் உடன்படிக்கைகளைக் கடந்து செல்லும் அல்லது தம்மைப் பணிய வைக்க முயலும் உடன்படிக்கைகளை மோதி உடைத்துக் கொண்டு முன்செல்லும். மிக மிக அரிதான புதிரான இயல்பினை உடைய மக்கள் இவர்கள் என்பதைத்தான் கடந்த அரை நூற்றாண்டு கால வரலாறு நிரூபித்து வந்திருக்கிறது. இதை ஜவஹர்லால் நேருவின் வார்த்தையில் கூறினால் அவர் யூதர்களை வர்ணித்திருப்பது போல, தமிழர்களும் PERSEVERING PEOPLE தான். அதாவது தடைகளை மோதி உடைத்துக்கொண்டு முன்செல்லும் சக்தி மிக்க நிலை பேறுடைய மக்கள் என்று அர்த்தம்.

(நன்றி - ஈழநாதம்)



# யார் இவர்..?

இந்தப் படத்தில் இருப்பவரை உங்களால் அடையாளம் காண முடிகின்றதா? கடந்த ஆறு மாதங்களாக தான் யார்? எங்கே இருக்கின்றோம்? எப்படி இருக்கின்றோம்? என்பது கூடத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் வாழ்கின்றார் இவர். இவருக்கு நடந்தது என்ன..? கடந்த 27.04.2004 அன்று காலை 7.30 மணியளவில், 66 Bd Richard le Noir, 75011 Paris என்ற முகவரியில் உள்ள கட்டடத்தின் முதல்மாடிப் படிக்கட்டில் வீழ்ந்துகிடந்தபோது பிரெஞ்சு தீயணைப்பு படையினரால் மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டார். நான்கு மாதங்களுக்கு மேலாக சுயநினைவற்ற நிலையில் (ஹோமா) இருந்த இவர் தற்போது கண் விழித்துள்ளார். ஆனால் ஒரு கையும் ஒரு காலும் முற்றாக செயலிழந்து போயுள்ளதுடன் (பக்கவாதம்), வாய் பேசமுடியாத நிலையில், தன்னைப்பற்றிய எந்தவித தகவலையும் வழங்க முடியாத நிலையில் உள்ளார். தற்போது La chappelle - Gare de Nord இல் உள்ள Hopital Fernand-Widal இல் இவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. இவரை தீயணைப்பு படையினர் மீட்டபோது, இவரிடம் வதிவிட அனுமதி அட்டையில் இருந்து எந்தவித ஆவணமும் இருக்கவில்லை. எனினும் வைத்தியசாலையில் இவரது பெயர் நல்லதம்பி நகோன் (Nallathampi Nahon) என்று பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், பிறந்த திகதி 30.06.1952 எனவும் பதியப்பட்டுள்ளது. இதனை அவர்கள் எவ்வாறு பெற்றுக்கொண்டார்கள் என்பது குறித்த எந்தவித தகவலும் கிடைக்கவில்லை. ஏனெனில் ஆரம்பத்தில் இவர் Gare de Nord இல் உள்ள பிறிதொரு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு சுய நினைவிற்கு வந்ததன் பின்னரே இவ் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

கடந்த ஆறு மாதங்களாக வைத்தியசாலையில் இருக்கும் இவரை இன்று வரை யாரும் சென்று பார்க்கவில்லை. யார் என்று தன்னை என்பதை அறிந்துகொள்ள முடியாத நிலையுள்ள இவரைப்பற்றிய விபரம் அறிந்தவர்கள் உடனடியாக உறவினர்களுக்கு அறிவிக்கும்படியும் அல்லது தம்முடன் தொடர்புகொள்ளும்படியும் வைத்தியசாலையின் சமூக உதவியமைப்பு கோரியுள்ளது.

இவர் தொடர்பான விபரம் அறிந்தவர்கள் ஈழமுரசுடனோ அல்லது கீழுள்ளவருடனோ தொடர்புகொண்டு தகவலை வழங்கலாம்.

**Mme Florence Tissier - Assistante Social**
**Tel - 01 40 05 44 18 - Fax - 01 40 05 49 13**

# மரணத்துள் வாழ்வு..

(18ம் பக்கத் தொடர்ச்சி)

`வாழுதல்' என்ற இந்தப் போர்க்களம் எமது இறப்பால் முடிவுக்கு வந்துவிடும் என்பதனாலேயே நாம் இறப்புக்கு அஞ்சுகிறோம். நாம் இறப்பால், அறிந்ததை (Known) இழந்துவிடுவோமோ என்று அஞ்சுகிறோம். அறியாததை (unknown) யிட்டு அஞ்சுகிறோம். குடும்பம், புத்தகங்கள், வீடு, அருகாமையிலுள்ள மனிதர்களுடனான பாசத் தொடர்பை இழந்து விடுவோமென அஞ்சுகின்றோம்.

அறிவுச் சேகரிப்புகள் யாவற்றினதும் விளைவு `நான்'தான். இந்த `நான்'தான் `எனது மனம்' `நான்' ஐப் பிரசவித்தவள் எனது மனமே. `நான்' க்குப் பாலூட்டி வளர்ப்பவளும் எனது மனமே. பிள்ளை இறந்தாலும் தாய் உயிர்வாழ்வாள். தாய் இறந்தாலும் பிள்ளை உயிர்வாழும். ஆனால் `நான்' ஐப் பெற்ற மனம் மரணித்தால் `நான்' உம் மரணிக்கும். `நான்' மரணித்தால் `நான்'ஐப் பெற்ற மனமும் மரணிக்கும். எனவே `நான்,' தான் முடிவுக்கு வந்து விடுவேனோ என அஞ்சுகிறது. எனவேதான் எதிர்காலத்திலும் தனது இருப்பை நாடுகிறது. அதனால் அதுவே மறுபிறப்பையும் சுவர்க்கத்தையும் நரகத்தையும் கண்டு பிடிக்கிறது. இந்தக் கண்டு பிடிப்புகளை நடைமுறைப்படுத்த, அதனால் திறக்கப்பட்ட போர் முனைகள் உதவுகின்றன. எம்மால் சேகரிக்கப்பட்ட `அறிந்தது'க்கு எம்மால் நாளுக்கு நாள் உளவியல் ரீதியாக மரணிக்க முடியுமா?

அறிந்ததிலிருந்து நாம் விடுதலை பெற்றாலேயே அது சாத்தியமாகும். அதனை எம்மால் கைப்பற்ற முடியாது. இந்தச் சாத்தியப்பாடும் எப்பொழுதும் அறிந்ததிற்குள்ளேயே இருக்கிறது. நாம் அறிந்ததிலிருந்து விடுதலை பெறும்போது இந்தச் சாத்தியப்பாடு மிகப் பெரியதாக இருக்கும்.

எங்களுடைய இறந்த காலத்துக்கும், அதன் அச்சங்களுக்கும், பந்த பாசங்களுக்கும், ஏக்கம்—வெறுமை—அகந்தை—செருக்குகளுக்கும் உளவியல் ரீதியாக இன்று மரணித்து நாளை எங்களால் புதிய மனிதர்களாக விழித்தெழ முடியுமா என்று நாம் எம்மையே வினவினால், உடனே எமது மூளை அதற்கான வழிமுறைகள் தான் என்ன என்று எதிர் வினாத் தொடுக்கும். இதற்கு வழிமுறை கிடையாது. வழிமுறை என்று சொல்லும் போதே அது நாளையைத்தான் குறிக்கும். இறந்த காலத்திற்குள் இருக்கும் அனைத்து அறிந்தவைகளிலிருந்தும் மனமானது உடனடியாக விடுபட வேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் உடனடியாக நாம் காணாது விட்டால் எமது மனமானது புதிதாக—இளமையாக—குற்றமற்றதாக— உயிர்ப்புக்கு ஆதாரமானதாக— உணர்ச்சிமிக்கதாக இராது. எங்களது இருப்பும், அதன் முக்கியத்துவமும் இறந்த காலத்தில்—அறிந்ததில் இருப்பதனால், மனமானது, அதனை வேறு வழியில் நீடிக்க விரும்புமேயன்றி, அதனை இழக்கவிரும்பாது.

மனிதன் இறப்பின்மையையே நாடுகின்றான். தனக்குப் பின்னால் தன் நினைவாக எதையாவது நிரந்தரமாக விட்டுச் செல்லவே அவன் விரும்புகிறான். அதனால்தான் தனது பெயருக்கு முன்னாலோ பின்னாலோ, புனைப் பெயர்களையோ, அடைமொழிகளையோ உபயோகிக்கின்றான். `நான்' நினைவுகளின் தொகுப்பாய் சொற்களின் கூட்டாய்—பொய்யாய் இருக்கும்போது, அதை அலங்கரிக்கும் புனைப் பெயர்களும் பொய்தானே? எத்துணை விலை உயர்ந்த ஆடையை சடலத்திற்கு அணிந்தாலும் அது சடலத்தோடு எரிந்தோ மக்கியோ போவதுதானே உண்மை. வெறுமையான நினைவுகளைப் பற்றிப் பிடிப்பதனாலேயே எனக்கும் உனக்கும், எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பிரிவினை ஏற்படுகிறது. இவை அனைத்தையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். இவற்றைப் பிறரது இரவல் கருத்தியல்களுடாகவோ சித்தாந்தங்களினூடாகவோ கோட்பாடுகளினூடாகவோ பார்த்துப் புரிந்து கொள்ளமுடியாது. இவற்றை நேரடியாக அவதானித்தோமேயானால் இறப்பினூடேதான் அன்பு சாத்தியமாகும் என்ற உண்மையைப் புரிந்துகொள்வோம்.

அன்பு ஞாபகமல்ல. அன்பு இன்பம் அல்ல. அன்பைக் காமத்துடன் தொடர்பு படுத்துவாரும் உள்ளனர். அவர்களே அன்பை, சமயச்சார்பான அன்பென்றும் புனித அன்பென்றும் பிரிக்கிறார்கள். ஒன்றைப் பழித்துரைக்கும் அதேவேளை மற்றதை அங்கீகரிக்கின்றார்கள். இவை ஒன்றும் அன்பல்ல. நாம் எமது சகல வேதனைகளுக்கும் பிணக்குகளுக்கும் துயரங்களுக்கும் இறந்தகால நினைவுகளுக்கும் மரணித்தாலன்றி அன்பை நாம் முழுமையாகவும் பூரணமாகவும் அனுபவிக்க இயலாது.

அன்பு எம்மில் ஊற்றெடுக்க, முதலில் நாம் எமது மனத்தின் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும். அச்சம், பேரவா போன்ற பல விலங்குகளால் எங்களை மனம் பிணைத்து, அதன் அடிமையாக எங்களை வைத்திருந்தால் நாம் விடுதலை பெறுவது எப்படி? விடுதலை இல்லாமல் அன்பை எப்படி அனுபவிப்பது? பணிமனையில் நாங்கள் கொடுமைக்காரராகவும் தந்திரசாலியாகவும் இருக்கின்றோம். எமது வீடுகளிலோ நாம் எளிதில் வசப்படக் கூடியவர்களாகவும் பாசத்தைப் பொழிபவர்களாகவும் அன்புள்ளவர்களாகவும் இருக்கின்றோம். ஒரு கையால் மனித உணர்வுகளைக் கொன்றுகொண்டு, இன்னொரு கையால் அன்பு காட்டி அரவணைக்கப் பார்க்கின்றோம். வாழ்க்கையில் போட்டி பொறாமைகளோடு ஈடுபட்டிருக்கும் நாம் சமூக ரீதியாகவும் அறநெறி ரீதியாகவும் கௌரவமானவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே எங்களுக்கு அன்பு என்றால் என்ன என்று தெரியாது. நேற்றைக்குரிய ஒவ்வொன்றுக்கும் எப்படி மரணிப்பது என்பதைப் புரிந்து கொண்டால்— இன்பத்தின் சகல விம்பங்களுக்கும் எப்படி மரணிப்பது என்று புரிந்து கொண்டால்— வெறுப்பு, பகைமை ஆகியவற்றுக்கும் எப்படி மரணிப்பது என்று புரிந்து கொண்டால் மட்டுமே அன்பு புதிதாய்ப் பிறக்கும். அது தன்னளவில் ஒழுக்கம் உடையதாகவும், நேர்மையுடையதாகவும், நற்குணமுடையதாகவும், நன்னடத்தையுடையதாகவும், ஒழுக்கவியலுக்குட்பட்டதாகவும் இருக்கும். அந்த நிலையில் அளவுகளுக்கு அப்பாற்பட்ட ஒன்று புதிதாய் வியாபிக்கும்.

# அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவிலும் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனாராம்!

(07.11.04)

விடுதலைப் புலிகளால் நன்கு பயிற்றப்பட்ட உளவாளிகள் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவில் ஊடுருவியுள்ளதாக அரசாங்கப் படைகளின் புலனாய்வுத் தகவல்களை மேற்கோள் காட்டி, இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அந்த இணையத் தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குறிப்பிட்ட அமைச்சர்கள் சிலரின் விபரங்களைத் திரட்டுமாறு விடுதலைப் புலிகளால் நன்கு பயிற்றப்பட்ட 20 தொடக்கம் 25 வரையான உளவாளிகள் வன்னியிலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு கொழும்புக்கு வந்த இவர்கள், அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவினருடன் நண்பர்களாகியுள்ளனர். அவர்களின் பாதுகாப்புடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பங்குபற்றும் நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றனர்.

இந்த உளவாளிகள் நன்கு சிங்கள மொழி பேசக் கூடியவர்கள். இவர்கள் பாதுகாப்புப் பிரிவிலுள்ள சிலரின் தனிப்பட்ட செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களில் சிலர் விடுதலைப் புலிகளின் உளவாளிகளுடன் வியாபார ரீதியிலும் பங்காளிகளாக உள்ளனர். இந்த உளவாளிகளும், பாதுகாப்புப் பிரிவினரும் ஒவ்வொரு நாட்களும் சந்தித்து வருகின்றனர். இவ்வாறு இவர்கள் சந்திக்கும் இடங்கள் மற்றும் விருந்து நடைபெறும் இடங்களை அரச உளவுப் பிரிவினர் பெற்றுள்ளனர்.

அத்துடன், இந்தப் பாதுகாப்புப் பிரிவினர் மேலதிக பயிற்சிகளுக்காகச் செல்லாது, அவர்கள் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினருடன் தனியாக உல்லாசப் பிரயாணங்களுக்குச் சென்று வருகின்றனர். இவ்வாறு பாதுகாப்புப் பிரிவினர் பயிற்சிக்குச் செல்லாதபோது, விடுதலைப் புலிகளின் உளவாளிகள் அந்தப் பயிற்சியில் கலந்து கொள்கின்றனர். எனவே விடுதலைப் புலிகளின் உளவாளிகளுக்கும், பாதுகாப்புப் பிரிவினருக்குமிடையே உள்ள இரகசியத் தொடர்புகள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுமாறு அரச உளவுப் பிரிவினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

## மேலும் ஒரு உளவாளியை சிறீலங்கா இழந்தது

(07.11.04)

கொழும்பு தெகிவளையில் கடந்த வியாழக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் புளொட் உறுப்பினரான வேலாயுதம் தயாளகுமார் முக்கியமான இராணுவ உளவாளி என தகவல் வெளியாகியுள்ளது. இராணுவ புலனாய்வுப் பிரிவில் அண்மையில் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட புளொட் மோகன் எனப்படும் கந்தையா யோகராஜாவிற்கு அடுத்த இடத்தில் இவர் செயற்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்திலும் வன்னிப் பிரதேசத்திலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஊடுருவல் தாக்குதல் சம்பவங்களுக்கு உரிய தகவல்கள் இவரால் வழங்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

இவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர் என்று பொலிசார் தெரிவித்தனர். விடுதியில் இவர்கள் தேநீர் அருந்திக் கொண்டிருந்த சமயம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. ஹோட்டலினுள் தேநீர் அருந்திக் கொண்டிருந்த ஒருவர் எழுந்துசெல்லும்போது இவர்கள் மீது சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்கின்றனர் பொலிசார். அவர்களில் படுகாயமடைந்து மோசமான நிலையில் இருந்தவரான சிவகுமார் நிரஞ்சன் பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். மற்றொருவரான ஜெயசிங்க என்பவர் தொடர்ந்தும் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றார். பிஸ்ரல் குழுவினரே இவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றிருக்கக் கூடும் என்று பொலிசார் சந்தேகம் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட தயாளகுமார் என்பவர் குறிப்பிட்ட பகுதிகளுக்கு சாதாரண நபராகவே சென்று விபரங்களை சேகரித்துள்ளார். கொழும்பிலும் இப்படியான விபரங்களை சேகரித்துள்ளதாகக் கூறப்படும் இவரது தந்தை கே.வேலாயுதம் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பு அலுவலகத்தில் வீ.ஆனந்தசங்கரியின் செயலாளராக பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீனவர்களின் போராட்டம் மேலும் பல இடங்களுக்கு விஸ்தரிப்பு

(07.11.04)

இந்திய மீனவர்கள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடித்ததை ஆட்சேபித்து தலைமன்னார் பேசாலையில் மீனவர்கள் நேற்றிரவு ஆரம்பித்த வீதி மறியல் போராட்டம் மேலும் பல இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.சிறுதோப்பு ஆகிய இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. நேற்றிரவு ஆயிரக்கணக்கான இந்திய மீனவர்கள் ஐநூற்றுக்கும் மேற்பட்ட படகுகளிலும், இழுவைப் படகுகளிலும் பேசாலையிலிருந்து இரண்டு கடல் மைல் தொலைவில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்திய மீனவர்களின் வருகையால் மீன்பிடிக்க முடியாமல் திரும்பிய மீனவர்கள் இவ்வீதி மறியல் போராட்டத்தை ஆரம்பித்தனர். சிறீலங்கா - இந்தியப் பிரதிநிதிகள் மன்னாருக்கு வந்து இப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தால் மாத்திரமே இப்போராட்டம் கைவிடப்படுமென்றும், இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படாது விட்டால் மன்னார் முதல் யாழ்ப்பாணம் வரை போராட்டம் விஸ்தரிக்கப்படுமென மீனவர் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

## தலைவரின் மனிதாபிமானத்தின் வெளிப்பாடே காந்தரூபன் அறிவுச்சோலை

### சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

(07.11.04)


தமிழீழத் தேசியத் தலைவரின் மனிதாபிமானத்தின் வெளிப்பாடாகவும், சிந்தனையாகவும் இன்று காந்தரூபன் அறிவுச்சோலை மிளிர்ந்து கொண்டிருக்கிறது என சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார். காந்தரூபன் அறிவுச்சோலையின் 11வது ஆண்டுவிழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, எங்களுடைய தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றிலே சிங்களப் பேரினவாதத்தினால் திட்டமிட்டு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பின் விளைவாக பல ஆயிரக்கணக்கான சிறார்கள் தமது தாய், தந்தையர்களை சொந்த பந்தங்களை இழந்து ஊர்தேசங்களை இழந்து அநாதரவாகத் திரிந்துகொண்டிருந்த காலம் இருந்தது. இவ்வாறான யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களில் பலர், போரின் கொடூரத்தால் பெற்றோர்களை இழந்து, உறவுகளை இழந்து நின்ற சிறார்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, தன்னை வளர்த்தெடுத்த தமிழீழத் தேசியத் தலைவரிடம் காந்தரூபன் என்ற போராளி கேட்டுக் கொண்டதற்கு அமைவாக, இந்த காந்தரூபன் அறிவுச்சோலை இன்று மலர்ந்து நிற்கின்றது.

போராளி காந்தரூபன் எதிரிக்கு மனித வெடிகுண்டாகவும், தமிழ் மக்களின் மீது மனிதாபிமான உச்சத்தை நாங்கள் புரிந்துகொள்ளமுடிகின்றது. போராளி தான்பட்ட சுமைகளை தனக்குபின் வருகின்ற சமூகம் அனுபவிக்கக்கூடாது என்பதற்காகத் தமிழீழத் தேசியத்தலைவரிடம் கேட்டுக்கொண்டதுபோல் இந்த இல்லம் உருவாக்கப்பட்டது.

தேசியத் தலைவரின் தெளிவான சிந்தனையின் விளைவாகவும், அதி உயர்ந்த மனிதாபிமானத்தின் வெளிப்பாடாகவும் இந்த அறிவுச்சோலை மிளிர்கின்றது. இதன்மூலம் வளர்க்கப்பட்டவர்கள். இன்று ஆளுமைமிக்க இளைஞர்களாக வெளியேறியுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இவர்களுக்கும் கவலையாம்!



இலங்கையில் சமாதான முயற்சிகள் நழுவிப் போகும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டு வருவது குறித்து அமெரிக்கா தனது கவலையைத் தெரிவித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கடந்த புதன்கிழமை காலை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில், அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜின் வீடியோ நாடா மூலமான உரை ஒளிபரப்பப்பட்ட போதே, அதில் அமெரிக்காவின் கவலையை ஆர்மிரேஜ் வெளியிட்டார்.

அந்த உரையில் அவர் மேலும் கூறுகையில், சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளில் தொடர்ந்தும் முட்டுக்கட்டை நிலைமை ஏற்பட்டுள்ளதால் இலங்கையில் சமாதான முயற்சிகள் நழுவிப்போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் எவர் அடுத்த ஜனாதிபதியாக வந்தாலும் இலங்கையுடனான உறவில் எதுவித மாற்றமும் ஏற்படாது. அத்துடன் பயங்கரவாதத்திற்கெதிரான அமெரிக்காவின் போரிலும் மாற்றம் ஏற்படாது. பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் போருக்கு ஆதரவு வழங்கிய அனைத்து நாடுகளுடனும் தொடர்ந்தும் அமெரிக்காவின் உறவு சுமூகமாகவே இருக்கும். எவர் ஆட்சிக்கு வந்தாலும் அமெரிக்காவின் இந்தக் கொள்கைகள் மாறப்போவதுமில்லை, அதற்கு ஆதரவு வழங்கிய நாடுகளைக் கைவிடப் போவதுமில்லை எனவும் தெரிவித்திருந்த அவர், வழமைபோலவே விடுதலைப் புலிகள் வன்முறையை கைவிட்டு மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.




மோகன் ஜுவல்லர்ஸ் அன்ட் ரெக்ஸ்டைல்ஸ்

Basel மாநகரில் ஓர் அலங்கார மாடம்

சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்று தரமான தங்க நகை விற்பனையாளர்களாய் திகழும் பிரம்மாண்டமான நிறுவனம்...
22 கரட் தங்க நகைகள் உங்கள் விருப்புக்கேற்ற ஏராளமான தெரிவுகளில்
மற்றும் சுவிசில் கல்லு முத்து பதிப்பதற்கு கூலி எதுவும் அறவிடாத ஒரே ஒரு நிறுவனம்

மோகன் ஜுவல்லர்ஸ்

வண்ணப்புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள் ஆண்கள் சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தும் எம்மிடமே!
புதிய பழைய திரைப்படப் பாடல்கள், படங்கள், நாடகங்கள், DVD, VCD, VIDIO Cassettes
என்பன விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்
உலகின் அனைத்துப் பகுதிக்குமான பணமாற்றுச் சேவை உடனுக்குடன்

MOHAN JEWELLERS & TEXTILES
Elisabethen anlage 25
4051 Basel
Tél - 061 271 41 09
Fax - 061 271 41 17
WWW.mohantextiles.com

# இந்தியக் கடலில் சிறீலங்கா....

(14ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது. இக்குழுவானது அவ்வப்போது சந்தித்து எல்லைமீறும் மீனவர்கள் விடயம், அவ்வாறு மீறுவோர் மீது வன்முறையைக் கையாள்வதைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் மற்றும் கைப்பற்றப்பட்ட படகுகளை விடுவிப்பதற்கான துரித நடவடிக்கைகள் போன்றவற்றை ஆராயும், மீன்பிடிப்பதற்கு உரிமங்கள் வழங்குவதற்கான இருதரப்பு ஏற்பாடுகள் பற்றியும் இக்குழு பரிசீலிக்கும்.

- வருடந்தோறும் 'ராஜீவ் காந்தி நினைவுப் பேருரை' ஒன்றுக்கு சர்வதேசக் கல்விக்கான பண்டாரநாயக்க நிலையமும், ராஜீவ் காந்தி மன்றமும் இணைந்து ஏற்பாடுசெய்ய வேண்டும் என இலங்கைத் தரப்பில் யோசனையொன்று முன்வைக்கப்பட்டது. இதன் முதல் பேருரையை ஜனாதிபதி குமாரதுங்க நிகழ்த்துவார். பண்டாரநாயக்க சர்வதேசக் கல்விக்கான நிலையத்தில் சிறீலங்கா - இந்திய ஆய்வுக் கல்விக்கான மையமொன்றை நிறுவவேண்டும் என்ற சிறீலங்காவின் யோசனையை இந்தியத்தரப்பு வரவேற்றது.

- இந்தியாவிலுள்ள பௌத்த யாத்திரைத் தலங்களுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு கட்டண சலுகையும், இலவச விசாவும் வழங்கப்படவேண்டுமென இலங்கைத் தரப்பில் கோரப்பட்டது. ஹம்பாந்தோட்டை முல்கிரகல பௌத்தாலயத்தையும், மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்தையும் புனரமைப்பதற்கு இந்தியா வழங்க முன்வந்துள்ள நிதி உதவிக்காக சிறீலங்கா தரப்பில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

- இலங்கையில் புற்றுநோய் வைத்திய சாலையொன்றை அமைப்பதற்கு 75 லட்சம் அமெரிக்க டொலர் உதவித்தொகை வழங்க இந்தியா முன்வந்திருப்பது குறித்து திருப்தி தெரிவிக்கப்பட்டது. அடுத்தவாரம் இலங்கைக்கு வரும் இந்தியத் தொழில்நுட்பக் குழுவுடன் இவ்வேலைகள் துரிதமடையும்.

- இருதரப்புப் பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் பலாலியிலுள்ள விமான நிலையத்தைப் புனரமைப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை இருதரப்புக்கும் வசதியான ஒரு தினத்தில் இருதரப்பு அரசுகளாலும் கையெழுத்திடப்படும். சிறீலங்காக் கடற்படையின் 'சயூரா' கப்பலைத் திருத்திக் கொடுப்பதற்கும் இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

- சேது சமுத்திர கால்வாய்த் திட்ட விடயத்தில் இலங்கை தொடர்பான பொருளாதார, சுற்றுச்சூழல் அம்சங்களை இந்தியா - இலங்கைத் தொழில்நுட்ப நிபுணர்களின் ஆய்வுக்கு விடுவதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.


- இலங்கையின் அமைதிச் செயற்பாடுகளின் தற்போதைய நிலை குறித்தும் அதனை முன்நகர்த்தத் தாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் இலங்கை ஜனாதிபதி இந்தியத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

- இலங்கை மக்கள் அனைவருக்கும் ஏற்பு டையதான விரிவான பேச்சு மூலமான ஒரு தீர்வு ஏற்படுவதை இந்தியா ஆதரிக்கும் என்று இந்தியா தன் தரப்பில் மீண்டும் வலியுறுத்தியது. இத்தீர்வானது இலங்கை சமூகத்தின் பன் முகத் தன்மையைப் பிரதிபலிப்பதாகவும், தனி நபர் உரிமைக்கு மதிப்பளிக்கும் ஜனநாயக அமைப்பைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். இலங்கையின் பாதுகாப்பில் இந்தியா உறுதியான ஆர்வம் கொண்டுள்ளது. அதன் ஒற்றுமை, இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றில் அது பற்றுறுதி கொண்டுள்ளது.

- அமைதி முயற்சிகள் தொடர்பான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படுவதை இந்தியா ஆதரிக்கின்றது. நிர்வாகம் தொடர்பான எந்தவொரு ஏற்பாடும் நீடித்திருக்கும் இறுதித் தீர்வொன்றின் முக்கிய பாகமாக இருத்தல்வேண்டும். அது இலங்கையின் ஒற்றுமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்துவதாகவும் மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு, செழிப்பு முதலியவற்றை உறுதிப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் புஷ் பெற்றிபெற வாழ்த்துத் தெரிவித்து, சிறீலங்காவின் வர்த்தகரான (A.S.P. Liyange) இவர் சிங்கள, அங்கிலப் பத்திரிகைகளில் ஒவ்வொரு பக்க விளம்பரம் கொடுத்துள்ளார். இதேவேளை, புஷ்சின் வெற்றியை கொண்டாடும் வகையில் ஜோர்ஜ் என்ற சிங்கள இளைஞர் அவரது சிலையை வடிவமைத்துள்ளார்.



## இந்திய, இராணுவ

(01ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே இந்த விடயத்தில் இந்திய அரசியல் தலைமைகள் நிதானமாக செயற்பட வேண்டும். ஏனைய சர்வதேச நாடுகளை விட சிறீலங்காவின் அரசியல் தலைமைகள் அவர்களின் கடுமையான போக்குகள் என்பன தொடர்பாக முழுமையாக அறிந்த நாடு இந்தியா மட்டுமேயாகும்.

தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி ஆகிய பிரதான சிங்களக் கட்சிகளின் கடுமையான சிறுபான்மையினங்களுக்கெதிரான அரசியல் நிலைப்பாடுகள் இந்தியாவுக்க மட்டுமே நன்கு புரியும்.

இவ்வாறான ஒரு நிலைமையில் இலங்கைக்கான இந்தியாவின் இராணுவ ரீதியான உதவிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை பின் தள்ளச் செய்வதுடன் நிலைமையை மேலும் மோசமானதாக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கொழும்பின் பாதுகாப்பு கடுமையாக அதிகரிப்பு

(08.11.04)

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இராணுவ புலனாய்வாளர்களும் உளவாளிகளும் கொல்லப்பட்டு வருவதையடுத்து, கொழும்பு நகரின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. நகரில் மீண்டும் வீதித் தடைகளும், சோதனை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன், கடமையிலிருக்கும் படையினரதும் பொலிசாரினதும் எண்ணிக்கை இருமடங்காக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர். மண்மூட்டைகள் அடுக்கப்பட்டு வீதித் தடைகளும் போடப்பட்டு, 10 முதல் 12 பேரைக் கொண்ட அணி ஒவ்வொரு வீதித் தடையிலும் சோதனை நிலையத்திலும் நிறுத்தப்பட்டுள்ளன.

தெகிவளை மற்றும் நீர்கொழும்பு பகுதியில் புதன்கிழமை இரவும் வியாழக்கிழமை இரவும் இராணுவ உளவாளிகளெனக் கருதப்படும் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், அண்மைக் காலங்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பலரும் தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்களும் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையிலேயே கொழும்பு நகரின் பாதுகாப்பை பெருமளவில் அதிகரித்துள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்பு நகரில் கடந்த வெள்ளிக்கிழமை சோதனை நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு ஆயிரத்திற்கு மேற்பட்ட பொலிசார் மேலதிகமாக வரவழைக்கப்பட்டு இராணுவத்தினரின் உதவியுடன் தேடுதல்களும் சோதனையும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. மறுநாள் சனிக்கிழமை முதல் நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதற்கு வசதியாக கொழும்பு நகரில் ஒத்திகை நடவடிக்கையொன்று இடம்பெற்றது.

## போதி மரத்தின்..

(01ம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலையத்தில் அவர்களை மகத் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு வரவேற்று புத்தர் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றனர். கோவிலில் வழிபாடு நடத்திய சந்திரிகா பின்னர் மகா போதி மரத்தின் கீழ் அமர்ந்து சுமார் 30 நிமிடங்கள் தியானம் செய்தார். பின்னர் கோவிலில் உள்ள உலக அமைதி மணியை அடித்து ஒலியை எழுப்பிய ஜனாதிபதி சந்திரிகா பிரார்த்தனையில் ஈடுபட்டார். உலக அமைதி மணியை அடித்த சந்திரிகா அம்மையார் நாட்டில் எப்போது அமைதி மணியை அடிக்கப் போகின்றாரோ?

ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78

Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-poobalamad@free.fr

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்: **அன்பு**
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

**குறிப்பு:**

இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் **ஆசிரியர் லிங்கம்** அவர்களின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
**இடம்: Breitenreinplatz -27, Bern**

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
**இடம்: Eigerplatz, Bern**

தொடர்புகளுக்கு: **Lingam master - 062 79741 64 / 079 334 47 33**

## வெள்ளவத்தை....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

தது.

இந்தத் தாக்குதலில் காயமுற்ற வர்களில் ஒருவரான தம்பிப்பிள்ளை பொன்னராசா (வெலிகந்த) என்பவர் கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்தபோதே, இவர் கடந்த வாரம் அங்கு மரணமானதாகத் தெரிய வருகிறது.

## வன்னியில் மழையால்....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

தில் மூழ்கியுள்ளன. இந்த வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தை மக்கள் படகுகள் மூலம் கடக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முறிகண்டிப் பகுதியில் மக்களின் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இடம்பெயர்ந்த மக்கள் திருமுறிகண்டிப் பாடசாலையில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான உணவுப் பொருள்களை மாங்குளம் அபிவிருத்தி நிறுவனத்தினர் வழங்கிவருகின்றனர்.

மன்னாரிலும் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் சாந்திபுரம் மற்றும் பள்ளிமுனை 50 வீட்டுத் திட்டம் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, வட்டக்கச்சி, பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் வெள்ளத்தைக் கடந்து போக்குவரத்துச் செய்யும் வகையில் பொதுமக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் உதவி புரிந்து வருகின்றனர். உழவு இயந்திரம் மற்றும் வாகனங்களின் மூலம் இந்த மனிதாபிமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கான மீட்புப்பணி, சமைத்த உணவு வழங்கல், குடிதண்ணீர் விநியோகம் போன்ற பணி களைச் செய்வதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது. மாவட்டரீதியில் அரச அதிபர்களுடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

# புலிகள் வசமுள்ள விமானங்கள் குறித்து இலண்டன் நிறுவனம் விபரிப்பு!

(08.11.04)

விடுதலைப் புலிகள் வசம் இரு விமானங்களும் ஒரு உலங்குவானூர்தியும் இருப்பதாக இலண்டனைச் சேர்ந்த புகழ்பெற்ற நிறுவனமான `பாதுகாப்பு தந்திர கற்கைநெறிக்களுக்கான நிலையம்' தெரிவித்துள்ளது.

இந்த நிலையத்தின் பிந்திய வெளியீட்டிலேயே இது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. `இராணுவச் சமபலநிலை 2004-2005' என்ற அந்த வெளியீட்டில் மேலும் தெரிக்கப்பட்டிருப்பதாவது. விடுதலைப் புலிகள் தற்போது `ரொபின்சன் சு 44 அஸ்ரோ' ரக இலகு உலங்குவானூர்தி ஒன்றையும் என்ன தயாரிப்பிலானது எனத் தெரியாத இரு இலகு ரக விமானங்களையும் வைத்திருக்கின்றனர்.

இதைவிட விடுதலைப் புலிகள் வசம் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளும் தரையிலிருந்து விண்ணை நோக்கிப் பாயும் ஏவுகணைகளும் (சாம்) உள்ளன. அத்துடன் 122 மில்லிமீற்றர் 152 மி.மீ. ரக ஆட்லறிகளையும் 120 மி.மீற்றர் ரக மோட்டார்களும உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலிகள் வசமிருக்கும் இந்த ஆயுதங்கள் பற்றியும் வானூர்திகள் பற்றியும் மேலதிக தகவல்களை தற்போது வெளியிட முடியாதென இந்த வெளியீட்டின் ஆசிரியரும் பாதுகாப்பு ஆய்வுகளுக்கான திணைக்களத்தின் தலைவருமான கேணல் கிறிஸ்தோபர் லங்ரொன் மறுத்துவிட்டார். எனினும் இது பற்றி அவர் சில தகவல்களை வெளியிட்டுள்ளார். புலிகள் கடந்த வருடம் அல்லது அதற்கு முன் இந்த வானூர்திகளை கொள்வனவு செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் இவற்றை எப்படி தங்கள் பகுதிக்கு கொண்டு சென்றார்கள் என்பது மர்மமாகவேயுள்ளது.

எனினும் இந்த வானூர்திகள் இரகசியமான இடங்களிலேயே உள்ளன. `சு 44 அஸ்ரோ' ரக உலங்கு வானூர்தியானது அமெரிக்காவைச் சேர்ந்த விமானப் பொறியியலாளரான ரொபின்சன் என்பவரால் அதன் முன்னைய வடிவமான `சு 22' இல் இருந்து மாற்றியமைக்கப்பட்டது. இது 1993 இல் முதன் முதலாக வடிவமைக்கப்பட்டது. இது சக்திமிக்க எஞ்சினையும் சிறந்த வினைத்திறனையும் கொண்டது. அத்துடன் இது விரைந்து செல்லக் கூடியதென்பதுடன் உயர் திறனையும் கொண்டது. அதேநேரம் குறைந்த செலவில் இலகுவாக பராமரிக்கப்படக் கூடியது. மணிக்கு 209 கி.மீற்றர் வேகத்தில் 4265 மீற்றர் உயரத்துக்கு பறக்கக் கூடியது.

## வவுனியா சென்ற...

(32ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் ஏ-9 வீதியூடான போக்குவரத்துகள் குறித்தும் விளக்கமளித்தார். இதன்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் குறித்து கேட்டறிந்த ஜெனரல் விஜ் `ஏ-9' வீதியில் நின்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளையும் அவதானித்தார். இதைத் தொடர்ந்து ஓமந்தையிலிருந்து அநுராதபுரம் திரும்பிய ஜெனரல் விஜ், அங்கிருந்து விமானம் மூலம் கொழும்பு திரும்பினார். 1989 இல் வவுனியாவை விட்டு இந்தியப் படைகள் வெளியேறிய பின் வவுனியாவுக்கு விஜயம் செய்த முதலாவது இந்திய இராணுவ அதிகாரி இவராவார்.

இதேவேளை, இந்தியாவுக்கும், சிறீலங்காவிற்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு - இந்தியாவைவிட சிறீலங்காவிற்கே அதிகளவான நன்மையைப் பெற்றுக் கொடுக்கும் என்று கொழும்புக்கு விஜயம் செய்திருந்த இந்திய இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ் தெரிவித்தார்.

கடந்த 2ம் திகதி காலை சிறீலங்கா முப்படைகளின் தலைமை அதிகாரியும், கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயாசந்த கிரியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்தின் போதே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் திகதி நிர்ணயம் செய்யப்படும் எனவும் ஜெனரல் விஜ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவை இந்திய இராணுவத் தளபதி சந்தித்துப் பேச்சு நடத்தினார். அத்துடன், பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ரணவிராஜா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் ஆகியோரையும் இவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சுக்களின்போது இந்தியாவுக்கும் - சிறீலங்காவிற்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

# தவளைப் பாய்ச்சலின் 11வது ஆண்டு நிறைவு

(08.11.04)

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட பூநகரி வெற்றிச் சமர் நடவடிக்கையின் 11ம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் எதிர்வரும் 13ம் திகதி நடைபெறவுள்ளது. மக்களின் போக்குவரத்திற்கு பூநகரித் தளத்தை அகற்றுமாறு விடுதலைப் புலிகள் கோரியபோது, அதனை திட்வட்டமாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா மறுத்திருந்தார். இந்நிலையில், விடுதலைப் புலிகளால் 1993ம் ஆண்டு பூநகரி நாகதேவன்துறை ஞானிமடம் கூட்டுப்படைத்தளம் தவளைப்பாய்ச்சல் நடவடிக்கை மூலம் அழிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பெருமளவு நவீன யுத்த தளபாடங்களும் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே.

### கூட்டமைப்பினருடனான சந்திப்பு ஒத்திவைப்பு

(07.11.04)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பு எதிர்வரும் 16ம் திகதி நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல்துறை தலைமைச் செயலகம் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது.



பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத், அனுமதிக்கப்பட்டிருக்கும் பிரான்சின் பேர்சி இராணுவ மருத்துவமனையின் முன்னால், அரபாத் நலம்பெற வேண்டி மெழுகுவர்த்தி ஏற்றி மலர்க்கொத்துக்களை வைத்துள்ளனர் அவரது ஆதரவாளர்கள்.


சகல திருத்த வேலைகளுக்கும்

ரெஸ்ரோரண்ட் (BAR) அடித்தல், வீட்டு கூரை வேலைகள், சமயலறை அலுமாரிகள், படுக்கையறை அலுமாரிகள் அனைத்து வேலைகளுக்கும், மாபிள் பதித்தல், மின்சார இணைப்புக்கள், குடிநீர் இணைப்புக்கள், பேப்பர் ஒட்டி பெயின்ற் அடித்தல், இரும்பு வேலைகள், கடை இரும்பு சட்டர், P.V.C. ஜன்னல் மாற்றுதல் போன்ற சகல வேலைகளும் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.



தொடர்களுக்கு - கதிர் : 06 27 46 49 31

MEUBLES EUROPEENS

உங்கள் வீட்டுத் தளபாடத் தேவைக்கு ஜெர்மன், பெல்ஜியம் தயாரிப்பு புதிய பழைய வீட்டுத் தளபாடங்கள் மலிவு விலையில் சோகேஸ், லெதர் சோபாக்கள், 3-2-1 சாப்பாட்டு மேசை, கட்டில், அலுமாரி, குசினி செட் மற்றும் அனைத்து வீட்டுத் தளபாடங்களையும், வீட்டுப்பாவனைப் பொருட்களையும் உங்கள் விருப்பம் போல் தெரிவுசெய்துகொள்ள நாடுங்கள்.

MEUBLES EUROPEENS
4, Rue Des Villas - 94800 Villejuif
M°: Villejuif Louis Aragon (N°:7)

திறந்திருக்கும் நேரம்- திங்கள் முதல் சனி வரை 14h -20h- ஞாயிறு -10h-18h

Tel:01 46 77 19 40
06 64 42 42 62

Restaurant Tharsana's

தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.



தர்ஷனா & பிரஷா உணவகங்கள்

இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்



Restaurant Prassah
Gastronomiques Indiennes

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

மங்கையர் மனம் கவரும் அசல் 22கரட் தங்க நகைத் தெரிவுகளுக்கு

KMS JEWELLERS

6, Rue Perdonnet
75010 Paris
Métro : La Chapelle
கே.எம்.எஸ் ஜூவலர்ஸ்
Tél : 01 44 72 08 02 -
Fax : 01 44 72 04 78 - Port : 06 61 86 08 02

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-Poobalam@free.fr
www.poobalam.com

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்

- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வாங்குதல்
- நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்

முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# வவுனியா சென்ற இந்திய இராணுவத் தளபதி புலிகளின் பகுதியை நோட்டம்

## பாதுகாப்பு உடன்படிக்கையால் சிறீலங்காவிற்கே அதிக நன்மையென்று கூறிவிட்டுச் சென்றார்

(07.11.04)

வவுனியாவுக்கு கடந்த புதன் கிழமை காலை விஜயம் செய்த இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ், ஓமந்தை இராணுவ சோதனை நிலையத்திற்கும் சென்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியையும் அவதானித்துள்ளார். இலங்கைக்கு மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்த ஜெனரல் விஜ், தனது இலங்கை விஜயத்தின் இறுதிக் கட்டமாக வவுனியாவுக்கு சென்றிருந்தார். விசேட உலங்குவானூர்தி மூலம் வவுனியா விமானப் படைத்தளத்தை வந்தடைந்த ஜெனரல் விஜ்ஜையும் பாரியாரையும், இராணுவ அணிவகுப்பு மரியாதை செலுத்தி வரவேற்றனர். தொடர்ந்து, வன்னி மாவட்ட இராணுவ கட்டளைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்து அங்கு இடம்பெற்ற உயர்மட்டச் சந்திப்பில் கலந்து கொண்டார். இதன் போது வவுனியா மாவட்ட பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் விடயங்கள் தொடர்பாக மேஜர் ஜெனரல் பராமி குலதுங்க, ஜெனரல் விஜ்ஜுக்கு விளக்கமளித்தார்.

ஓமந்தையிலுள்ள இராணுவ சோதனை நிலையத்திற்குச் சென்ற அவரை, அப்பகுதிக்குப் பொறுப்பான பிரிகேடியர் என்.ரணசிங்க வரவேற்று அப்பகுதி பாதுகாப்பு நிலைமைகள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)



# சந்திரிகா பதவியை விட்டுக் கொடுத்தாலும் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாது

(08.11.04)

ஜனாதிபதி சந்திரிகா தனது விருப்பத்தின் பேரில் 2005ம் ஆண்டு பதவியை விட்டு விலகிச் சென்றாலும் அரசியலமைப்பின் பிரகாரம் 2006ம் ஆண்டு அக்டோபர் 12ம் திகதி வரை ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்துவது எவ்வழியிலும் சாத்தியமில்லை என சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஜனாதிபதி 2005ம் ஆண்டில் தனது பதவியை விட்டு விலகினால் அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் 2006 அக்டோபர் 12 வரை பிரதமர் அப்பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும். பிரதமரொருவர் இல்லாத பட்சத்தில் சபாநாயகர் அப்பதவியை வகித்து நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும்.

எனவே எக் காரணத்தின் அடிப்படையிலும் 2006 அக்டோபர் 12ம் திகதி வரை ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அரசியல் அமைப்பின் படி எந்த வாய்ப்பும் இல்லை. ஐக்கிய தேசிய முன்னணிக்கு இவ்விடயம் குறித்து சந்தேகம் இருப்பின் உயர் நீதிமன்றத்தை அணுகி தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெள்ளவத்தை தாக்குதலில் காயமுற்றவர் மரணம்

(08.11.04)

கொழும்பு - வெள்ளவத்தை றொக்ஸி கார்டனில் கடந்த மாத இறுதியில் கருணா குழுவைச் சேர்ந்த மார்க்கன் அணியினர் தங்கியிருந்த வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த கருணா குழு உறுப்பினர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமானதாகத் தெரியவருகிறது.

கடந்த மாதம் 25ம் திகதி வெள்ளவத்தை றொக்ஸி கார்டனில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில் கருணா குழுவைச் சேர்ந்த தீபமூர்த்தி என்பவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்திருந்தனர். பொலநறுவ நாகஸ்தென்னவில் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர் வெள்ளவத்தையில் வந்து தங்கியிருந்தபோதே இவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# வன்னியில் மழையால் பெரு வெள்ளம்

## மக்கள் இடம்பெயர்வு, போக்குவரத்துக்கள் பாதிப்பு!

(07.11.04)

வன்னிப் பகுதியில் தொடர்ந்து பரவலாகப் பெய்த பலத்த மழை காரணமாக பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் சேதங்களும் ஏற்பட்டுள்ளன. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசமெங்கும் பாரிய சொத்தழிவு ஏற்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு வர்த்தக நிலையங்கள் பல இடிந்து வீழ்ந்துள்ளன. மேலும் பல வர்த்தக நிலையங்கள் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது. வீதிகள் எங்கும் வெள்ளம் பாய்ந்தோடுவதால் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பில் இருந்து செல்லும் மாத்தளன் வீதி, பரந்தன் வீதி, முல்லைத்தீவு வீதி என்பன போக்குவரத்துச் செய்யமுடியாத அளவிற்கு வெள்ளத்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

PHONE 2000

Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.

LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE

SFR

இணைய வலையத்துடன் கூடிய தொலைபேசி அழைப்பும் (ADSL) 29.90 மட்டுமே. * France எல்லைக்கட்டுப்பாட்டுக்குள் உள்ள இடங்களுக்கு மட்டுமே.

PHONE 2000
2, Rue Perdonnet,
75018 Paris.
☎: 01 40 05 03 43
Fax: 01 40 05 03 53
M°: La Chapelle

PHONE 2000
85, Rue des Pyrénées,
75020 Paris.
☎: 01 40 09 13 15
Fax: 01 40 09 01 31
M°: Maraîchers

PHONE 2000
19, Rue du Labat,
75018 Paris.
☎: 01 42 58 55 40
Fax: 01 42 58 55 46
M°: Marcadet Poissonniers

PHONE 2000
Informatique
87, Rue des Pyrénées,
75020 Paris.
M°: Maraîchers
Tél: 06 20 21 11 11

PHONE 2000
4, Rue de Cail,
75010 Paris.
☎: 01 40 05 93 28
Fax: 01 40 05 97 03
M°: La Chapelle *ou* Gare du Nord

PHONE 2000
5, Bld. davout,
75020 Paris.
☎: 01 43 71 40 30
Fax: 01 40 09 01 31
Mobile: 06 17 17 28 17
M°: Porte de Vincennes

Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11